12433

# நதி நடந்த பாதை...



## தேசமான்ய யூ.எல்.ஏ. அஸீஸ்

முப்பது ஆண்டுகள் நிருவாக சேவை நிறைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ/கு பிரதேச சபை
உப்புவெளி பொது நூலகம்
06/03/2021

# அழைப்பிதழ்

கிழக்கு மாகாண உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, கிராம தொழிற்துறை, சட்டமும் ஒழுங்கும், நிதி மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர்
ஜனாப் யூ.எல்.ஏ.அஸீஸ் அவர்களின்

நிருவாக சேவையில் 30 வருட பூர்த்தியை முன்னிட்டு

சேவை நலன் பாராட்டும்,

## "நதி நடந்த பாதை"

நூல் வெளியீடும்

**காலம்:** 2021.03.06 (சனிக்கிழமை)

**நேரம்:** காலை 9.00 மணி

**இடம்:** கிண்ணியா பொது நூலக மண்டபம்

**தலைமை**
ஜனாப். ஏ.ஆர்.எம். பரீத், தலைவர்
மஜ்லிஸ் அஸ்ஷூறா

**பிரதம அதிதி**
திரு. வே. பாலசிங்கம், முன்னாள் பிரதம செயலாளர்
கிழக்கு மாகாணம்

**சிறப்பு அதிதிகள்**
கௌரவ எஸ்.எச். நளீம், தவிசாளர்
நகர சபை, கிண்ணியா

கௌரவ கே.எம்.நிஹார்
தவிசாளர், பிரதேச சபை, கிண்ணியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதி நடந்த பாதை...

குறிப்பு எண்
ACC.NO 12433
வகுப்பு எண்
CLASS.NO 920
திகதி
DATE 10.3.2021

TOWN & GRAVETS
PRADESHIYA SABHA
10 MAR 2021
LIBRARY - UPPUVELI

தேசமான்ய யூ. எல். ஏ. அஸீஸ்

முப்பது ஆண்டுகள் நிருவாக சேவை நிறைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Nathi Nadantha Pathai | - | Thesemanu U.L.A. Azees<br>Muppathu Aandukal Niruvaha Savai Niraivu Malar |
| Copyrights | - | Fasith Mohideen - Editor |
| First Edition | : | February 2021 |
| Type Setting & Layout | : | Idroos Farees |
| Cover Design | : | Nawas Sawfi |
| Printed | : | Excellent Print<br>Sainthamaruthu 077 6401296 |
| Pages | : | 270 |
| ISBN | : | 978-624-5513-22-2 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழுவினர்

**பதிப்பாசிரியர்**
**பாசித் முகைதீன்** B.A(Hons), M.A, in Political Science
கிண்ணியா

**செயலாளர்**
**ஏ.எஸ்.எம்.பாயிஸ்**
திட்டமிடல் பணிப்பாளர், சுகாதார அமைச்சு, கி.மா

**பிரதம ஆலோசகர்**
**ஏ.ஆர்.எம். பரீத்**
தலைவர் - கிண்ணியா மஜ்லிஸ் அஷ்-ஷுரா

**ஒருங்கிணைப்பாளர்**
**ஏ.எல்.கே. முஹம்மட்** (SLPS- I)
ஓய்வு பெற்ற அதிபர்

**பொருளாளர்**
**எம். ஐ. பாயிஸ்**
செயலாளர், பிரதேச சபை, அட்டாளைச்சேனை

**உறுப்பினர்கள்**
**ஐதுரூஸ் பாரிஸ்**
கிண்ணியா

**ஏ.ஆர்.எம். சியாத்**
அட்டாளைச்சேனை

**ஐ.ஆஜீத்கான்**
கிண்ணியா

**எஸ்.ஐ. முஹம்மது பாரிஸ்**
கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவினர்



Mr. Fasith Mohideen



A.S.M. Fayis



A.L.K. Mohamed



A.R.M. Fareed



M.I. Fais



Idroos Farees



S.I. Mohamed Farees



A.R.M. Siyath



I. Ajeethkhan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்பொதிந்தவை


பதிப்புரை

1. **ஆசிச் செய்தி** - முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கௌரவ ரோகித்த போகொல்லாகம
2. **ஆசிச் செய்தி** - முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கௌரவ மொஹான் விஜேவிக்ரம
3. **ஆசிச் செய்தி** - முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புள்ளாஹ்
4. **ஆசிச் செய்தி** - முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ நஜீப் அப்துல் மஜீத்
5. **ஆசிச் செய்தி** - பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அஹமட்
6. **மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்** - எஸ்.எச்.எம்.நளீம், தவிசாளர்
7. **முற்றத்து மல்லிகை** - ஆசுகவி அன்புடீன்
8. **பன்முக ஆளுமையின் சிகரம்** - பொன் செல்வநாயகம்
9. **வாழ்த்துச் செய்தி** – ஏ.ஆர்.எம். பரீத், கிண்ணியா
10. **முளையிலே தெரிந்த விளைபயிர் அஸீஸ்**-ஏ.எம்..இப்றா லெவ்வை
11. **தனிமனித குணங்களால் ஆளுமைபெற்ற நிருவாக சேவை அதிகாரி அஸீஸ்!** - கலாநிதி. றமீஸ் அப்துல்லா
12. **மாடுகள் வந்தார்கள்** - சோலைக்கிளி
13. **எங்கள் அஸீஸ் சேர்** - யூ.எல்.நியாஸ், இ.நி.சே, இ.வெ.சே, இஸ்லாமபாத்
14. **உதுமா லெவ்வை அப்துல் அஸீஸ் அவர்கள்பற்றி......** தேசபந்து எஸ்.எல். முஹம்மத் ஹனிபா (இ.நி.சே)
15. **ஆரவாரமில்லாத ஆளுமை அப்துல் அஸீஸ்** - கலாபூஷணம், வரலாற்றில் ஓர் ஏடு ஏ.ஸி.ஏ.எம். புஹாரி (கபூரி) ஜேபி
16. **முப்பது வருட சேவையில் முத்திரை பதித்தவர்** எம். சிறாஜ் அஹமத்
17. **30 வருட நிருவாக சேவையில் தடம் பதித்த முதல் செயலர்** த. கயிலாயபிள்ளை
18. **அஸீஸ் சேர் எங்கள் முதுசம்** - எம்.ஏ.சி.ஏ. நசீல் (இ.நி.சே)
19. **தீ படாத தீக்குச்சி** – கவிஞர் ஈழமதி ஜப்பார்
20. **அஸீஸ் யார்? எனக்கும் அவருக்குமான உறவெது?** விமல் குழந்தைவேல் (பிரித்தானியாவில் இருந்து)
21. **சேவையின் சிகரம் - திருப்தியுடன் 30 வருட நிருவாக சேவையில்** அனிபு லெவ்வை, முன்னாள் பிரதம சட்ட உத்தியோகத்தர்
22. **பெருமையுடன் வாழ்த்துகிறோம்** - அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளம்
23. **எமது தேசத்தின் புகழ்பூத்த, மனிதநேயமிக்க நிருவாக அதிகாரி யூ.எல்.ஏ.அஸீஸ் அவர்கள்** - கலாபூஷணம் மீரா எஸ். இஸ்ஸடீன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. அல்-ஹாஜ் ஐ.எல்.எம். ஹாசிம் சூரி (மதனி) அவர்களிடமிருந்து
25. "**அட்டாளைச்சேனை மண்ணின் அஸீஸ் என்றொரு ஆளுமை**" சொல்லன்பன் நசுறுதீன்
26. **மகத்தான சேவகன்** - ஏ.எஸ்.எம் பாயிஸ், திட்டமிடல் பணிப்பாளர், சுகாதார அமைச்சு, கி.மா
27. **திறமைகளையும், ஞாபக சக்திகளையும் அணிகலன்களாகக் கொன்டவர்** - எஸ்.எம்.எம். ஹனிபா – ஜே.பி
28. **ஆரவாரமின்றி அமைதியாகப் பணியாற்றுபவர்** - ஏ.ஸீ.எம்.முஸ்இல், திட்டமிடல் பணிப்பாளர், கல்வி அமைச்சு,கி.மா
29. **மக்கள் தொண்டன் அஸீஸ் சேர்...** எஸ். தஸ்தகீர், பிராந்திய உணவு மருந்துகள் பரிசோதகர
30. **இதயங்களில் வசிப்பவர்**-கவிஞர் எஸ்.ரபீக்,சிரேஷ்ட அறிவிப்பாளர், இலங்கை வானொலி.
31. **இனவேறுபாடு இல்லாத இனிமையான மனிதர்** - ஞா.பாக்கியராஜா
32. **பழகுதற்கினிய பண்பாளன்** - ஏ.எல்.கிதுறு முஹம்மது இ.அ.சே - 1
33. **ஓய்வில்லாத ஓர் ஒளிவிளக்கு** - செல்வி கே.எம். பாத்திமா ஸுஹா
34. **பிரதேச கல்வி வளர்ச்சிக்கு உந்துதலாக இருந்து வெற்றிகண்ட பெருந்தகை** - ஐ.எல்.எம். றிஸான் சிரேஷ்ட ஊடகவியலாளர்
35. **யூ.எல்.ஏ. அஸீஸ், இ.நி.சே.(விசேட தரம்)** - ஏ.ஆர்.எம். முஹம்மது சைபுல்லாஹ்
36. **மக்கள் மனம் கவர்ந்த சேவகன்** - ஆர்.எம். நழீல் (பீ.ஏ), ஜேபி
37. **கலங்கரை விளக்கு நீ** - வித்தகர். கே.எம்.எம்.இக்பால்
38. **அஷ்ர.்.ப் பாராட்டிய அஸீஸ்** - எம். நிஜாமுத்தீன், ஜே.பி
39. **கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் ஒரு வரலாற்றுப் பொக்கிஷம்** - அப்துல் ஜப்பார் சமீம், ஜே.பி
40. **யூ.எல்.ஏ. அஸீஸ் ஓர் ஆளுமையின் அடையாளம்** - கிண்ணியா ஜே.பிரோஸ்கான்
41. **வேரூன்றிய விருட்சம்** - எம்.எப்..நவாஸ், D.D.O
42. **அகம் சிரிக்க முகம் மகிழும் மாமனிதர்!!!** - திருமதி வ.ஜெயராஜ்
43. **நிருவாக தண்டியலங்காரம்** - சாமஸ்ரீ தேசமான்ய பாசித் முகைதீன்
44. **இதயத்தில் இடம்பிடித்த இனியதொரு சேவகன்**-பொத்துவில் பழீல்
45. **மானமுள்ள கவரிமான் நீ** - எம்.ஏ. நஜீத் அஹமத், திட்டமிடல் பணிப்பாளர்
46. **நீ சிங்கமான தங்கம்** - கவிஞர். ஜே. வஹாப்தீன், ஒலுவில்
47. **இறக்காமம் மக்களின் இதயம் கவர்ந்தவர்** - பிரதேச செயலகம், இறக்காமம்
48. **ஈழத்து முஸ்லிம்களுக்கொரு இலச்சினை** - கவி ஒலி கலா பூஷணம் ஆசுகவி அன்புடீன்
49. **கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் அபிவிருத்திப் புரட்சியின் ஒரு பிதாமகன்**-ஏ.எம்.ஸாஹிர், பிரதம பொறியியலாளர்
50. **கலங்கரை விளக்கமென உயர்ந்து மிளிர்கின்றாய்** அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. **ஊரின் உயர்வுக்காய் உழைக்கின்ற உத்தமன்**
அட்டாளைச்சேனை கிராம அபிவிருத்திச் சங்கம்
52. **உதுமாலெவ்வை அப்துல் அஸீஸ் - சுயமும் பதிவுகளும்**
53. **நிகழ்வுகளின் நிழல்கள் - ஞாபகமான ஞாபகங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி, சட்டமும் ஒழுங்கும், கிராமிய அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில், சுற்றாடல், போக்குவரத்து, சுற்றுலா, வீடமைப்பு மற்றும் கட்டடங்கள் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளராக இருக்கும் உதுமாலெவ்வை அப்துல் அஸீஸ் அவர்கள் இதற்கு முன்பு மாகாண சுகாதார, சுதேச வைத்திய அமைச்சின் செயலாளராகவும் சுமார் 11 வருடங்களுக்கு மேல் கிழக்கு மாகாண சபையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். 1990ம் ஆண்டில் இலங்கை நிருவாக சேவையில் இணைந்து 30 வருடங்களை பூர்த்தி செய்து இந்த மாகாணத்தில் சிரேஷ்ட தரத்தில் உள்ள ஒரு மூத்த அதிகாரியாவார். இவர் நிருவாக சேவையில் இணைவதற்கு முன்பு ஒரு ஆசிரியராக பணி செய்தவர்.

நான் முதலமைச்சில் இவரின் நிருவாகத்தின் கீழ் சுமார் 06 வருடங்கள் பணியாற்றி இருக்கின்றேன். இவர் சேவை நாடி வருகின்ற எந்த ஒரு பொது மகனையும் திருப்பி அனுப்பாமல் முகமலர்ந்து சந்திப்பார். வுழிகாட்டல்களை வழங்குவார். அல்லது ஆறுதலான வார்த்தைகளை கூறியாவது அனுப்பி வைப்பார். பெரும்பாலான அலுவலகங்களில் பொது மக்கள் தினத்தில் மாத்திரமே உயர் அதிகாரிகளை சந்திக்கலாம். ஆனால் இவரின் நிருவாகம் முற்று முழுதாக மக்கள் சேவை நிறைந்தது என்பதால் வாரத்தில் 05 நாட்களும் பொது மக்கள் தினமாகவே இருக்கும். மூவின மக்களையும் சமமாக மதித்து அவர்களின் மத நிகழ்வுகளைக்கூட தானே முன்னின்று நடாத்தி உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் நலன்களில் அக்கறை செலுத்தி ஒரு குடும்பமாக அலுவலகத்தை நடாத்திய பெருமை இவரைச் சாரும்.

கிண்ணியா மீதுள்ள இவரின் பற்றும் இரசனையும் அளப்பரியதாகும். கிண்ணியாவிலுள்ள 31 கிராம சேவகர் பிரிவையும் இங்குள்ள மக்களின் கஸ்டங்களையும் இவர் நன்கு அறிவார். இதனால் வீதிகள், பொதுப்பூங்காக்கள், சுற்றுலா அபிவிருத்தி, கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி, தொழில்வாய்ப்பு என தனிப்பட்ட ரீதியில் இவர் கிண்ணியா மண்ணுக்கு பல ஒதுக்கீடுகளை செய்துள்ளார். குறிப்பாக ஆயிலியடி மற்றும் நடுஊத்து பிரதேசங்களை கிராம அபிவிருத்தி திட்டத்தில் தெரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அங்கு பல அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்துள்ளார். கிண்ணியாவிலுள்ள அரசியல் தலைவர்களுடன் ஆலோசனைகளை நடாத்தி அதனை நிறைவு செய்யும் வரை ஓயாது பின்னால் நின்று ஊக்கப்படுத்துவார்.

இவ்வாறு மக்கள் மனம் கவரும் வகையில் சேவையாற்றும் ஒருவரை அவரது சேவைக்காலத்திலேயே பாராட்டி, மலர் ஒன்றை வெளியிடுவது தொடர்பில் என்னுள் ஏற்பட்ட எண்ணத்தை எனது நண்பர்கள் சிலரிடம் பகிர்ந்து கொண்டேன். இம்முயற்சிக்கு அனைவரும் பச்சைக் கொடி காட்டியதுடன் தங்களாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவதாக என்னை ஊக்குவித்தனர். கிண்ணியா யூத் நெட் உறுப்பினர்கள் நான் பணியாற்றும் KTV குழாத்தினர் மற்றும் அட்டாளைச்சேனை நண்பர்கள் என எல்லோருடனும் கலந்துரையாடி ஜனாப் U.L.A. அஸீஸ் அவர்களின் தன்னலம் கருதாத மக்கள் சேவைக்கு பாராட்டு வைபவம் ஒன்றையும் அதன் ஞாபகமார்த்தமாக மலர் ஒன்றையும் வெளியிடுவதென தீர்மானித்து இதற்காக இவரது சொந்த ஊரிலுள்ள எமது குழுவிற்கு அறிமுகமான சிலரை தொடர்பு கொண்டு ஆக்கங்களை பெற்று கிண்ணியா பிரதேசத்திலுள்ள சிலரின் ஆக்கங்களையும் பெற்று இம்மலரை வாசம் வீச செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் எமது பயணம் தொடர்ந்தது.

இந்த ஞாபக மலருக்கு பெயர் சூட்டுவது தொடர்பில் மலர்க்குழுவினர் கலந்துரையாடியபோது பல்வேறு பெயர்கள் பலராலும் பரிந்துரைக்கப்பட்டன. அனைத்தும் பொருத்தமானவை-களாக இருந்த போதும் செயலாளர் அஸீஸ் அவர்கள் ஆரம்பக் கல்வி முதல் தற்போதைய நிலையை அடையும் வரையில் மிக அதிகமான ஏற்றங்களையும் இறக்கங்களையும் எதிர் நோக்கியவர். இன்பங்களை எவ்வளவு அனுபவித்தாரோ அதை விட பல துன்பங்களுக்கு முகம் கொடுத்தவர். புகழ்ச்சிகளுக்கு மயங்காது தனக்கென்று ஒரு பாணியை அமைத்து அந்தப் பாதையில் பயணிப்பவர். போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும் என் பணி ஓயாது என தனது இலக்கு நோக்கி எப்போதும் முயற்சி செய்பவர். இறுதியில் தன்னை இழந்தாவது மற்றவர்கள் நன்மை பெறுவதற்காக எப்போதும் இயங்குபவர் என்ற செயற்பாடுகளையெல்லாம் உள்வாங்கும் வகையில் பொருத்தமான ஒரு பெயரைச் சூட்டவேண்டும் என மலர்க்குழு ஆலோசித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில்தான் "**நதி நடந்த பாதை...**" எங்களுக்கு பொருத்தமாக தென்பட்டது. இந்நூலை வாசிப்போர் பட்டாளம் இதனை ஏற்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

அந்தவகையில் எமது முயற்சிக்கு ஆலோசனை வழங்கிய பெருந்தகைகளுக்கும், ஆக்கங்களைக் கோரியபோது ஆர்வத்துடன் அவற்றை மனமுவந்து அனுப்பிவைத்த மரியாதைக்குரிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு KTV அலைவரிசைக் குழாத்தினருக்கும் கிண்ணியா யூத் நெட் அமைப்பினருக்கும் மலர்க்குழு சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜனாப். பாசித் முகைதீன், BA Hon's** (அரசியல்)
KTV முகாமையாளர்
கிண்ணியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hon. Rohitha Bogollagama
Former Governor of Eastern Province of Sri Lanka
Former Foreign Minister of Sri Lanka and
Member of Parliament.



## Commemorative Message of 30 years of service by Mr. U.L.A. Azeez, Secretary to the Chief Ministry of the Eastern Province of Sri Lanka

On the occasion of 30 years of public service by Mr. U.L.A. Azeez, currently the Secretary to the Chief Ministry of the Eastern Province of Sri Lanka, I take this opportunity to issue a Commemorative Message complimenting the services extended by Mr. U.L.A. Azeez, as a Government Servant for over three decades. Mr. Azeez, has held important positions during his period and I personally re-call his service during my Tenor as Governor of the Eastern Province of Sri Lanka.

During this period his exemplary conduct in thee discharge of his duties and responsibilities was much to my admiration.

The corner stone of a public Servant's conduct lies in the commitment towards services to the Public at large wth integrity and equal honesty. I have witnessed these charecteristics in Mr. Azeez's career.

Eastern Province of Sri Lanka represents one sixth of Sri Lanka's land mass and diversity of population both ethnically and culturally. In administrating such a Province a Public Servant needs to be above and should always possess qualities of equality to all and discrimination to none. These qualities are represented in Mr. Azeez's routine discharge of his responsibilities.

In conclusion, I wish Mr. Azeez greater responsibilities in the future and good health.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# His Excellency Vice Admiral Mohan Wijewickrama, RSP VSV USP ndc, High Commissioner of Sri Lanka to the Islamic Republic of Pakistan and the first Governor the Eastern Province of Sri Lanka



I am pleased to send this message to the felicitation-special publication being put out as a tribute to the services rendered by Mr. U.L.A. Azeez, SLAS (Special Grade) to the Eastern Provincial Council.

To my recollection, Mr. Azeez joined the Eastern Provincial Council that came in to being in 2007 after the demerger of the Northern/Eastern Provinces, from the district administration of Ampara where he functioned as an Additional GA. I have known him from beginning of 2006 to 2015 as an honest, loyal and hardworking officer.

During his attachment to the EPC he held number of important appointments finally ending as the Secretary to the Ministry of Chief Minister.

At this time of his retirement after 35 of years of service, as a senior Special Grade officer of the Sri Lanka Administrative Service, I wish him all the very best.

**Vice Admiral Mohan Wijewickrama, RSP VSV USP ndc**
**High Commissioner of Sri Lanka to the Islamic Republic of Pakistan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புள்ளாஹ் அவர்களின் ஆசிச் செய்தயி



கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக கடமையாற்றும் சகோதரர் உதுமாலெவ்வை அப்துல் அஸீஸ் அவர்கள் இலங்கை நிர்வாக சேவையில் முப்பது ஆண்டுகள் பூர்த்தி செய்துள்ளதை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள மலருக்கு இவ் ஆசிச் செய்தியை வழங்குவதில் மிகவும் அகமகிழ்கின்றேன் அல்ஹம்துலில்லாஹ்.

சுமார் முப்பத்து ஐந்து ஆண்டுகளாக எனக்கு மிகவும் அறிமுகமான சகோதரர் அஸீஸ் அவர்கள் தனது பதவிக் காலங்களில் பன்முக ஆளுமைகளைக் கொண்டவராகக் காணப்பட்டார்.

1990ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவையில் சித்தியடைந்து புத்தளம் மாவட்ட உதவி அரசாங்க அதிபராக அவர் கடமை செய்த காலங்களில் பல தடவைகள் அவருடன் நான் தொடர்புகளை ஏற்படுத்தியதுண்டு. வட மாகாணத்தில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை புத்தளத்தில் மீளக் குடியேற்றுவதில் அவர் பாரிய பங்களிப்புக்களை வழங்கி சிறப்பாக செயற்பட்டவர்.

1993ம் ஆண்டு தொடக்கம் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக பதவியேற்ற நாள் முதல் அப்பிராந்தியத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் அஸீஸ் அவர்கள் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி ஆற்றிய பணிகள் அளப்பரியனவாகும். நான் தபால்தந்தி, தொலைத்தொடர்புகள் ஊடகத்துறை பிரதி அமைச்சராக இருந்த காலகட்டத்திலும் மறைந்த தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் அவர்களது மிக முக்கிய செயற்பாடுகளிலும் அபிவிருத்திப் பணிகளிலும் இவரது வகிபாகம் அளப்பரியது.

விஷேடமாக ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம், புனர்வாழ்வுத் திட்டங்கள், மீள்குடியேற்ற மாதிரிக்கிராமங்கள் என்பவைகள் அக்காலத்தில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளாகும். இவைகள் அனைத்துக்கும் சகோதரர் அஸீஸ் அவர்கள் தலைவர் மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்களுக்கு பக்கபலமாக இருந்து பாரிய பங்காற்றினார். இவையெல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல் அட்டாளைச்சேனையில் 1997ம் ஆண்டு நடைபெற்ற தேசிய மீலாத் விழா நிகழ்ச்சி இன்றும் எல்லோராலும் சிலாகித்துப் பேசப்படுகின்ற ஒரு நிகழ்வாகும். இதற்காக இரவு பகலாக தன்னை அர்ப்பணித்த பிரதேச செயலாளர் அஸீஸ் அவர்களை நாங்கள் எல்லோரும் வெகுவாகப் பாராட்டியது மட்டுமன்றி தலைவர் மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்கள் இவருக்கு 'மக்கள் தொண்டன்' என்ற பட்டத்தை மக்கள் முன்னிலையில் வழங்கி கௌரவித்தமையும் எனக்கு இன்றும் ஞாபகமிருக்கின்றது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சராக நான் கடமையாற்றிக் கொண்டிருந்த 2008/2009ம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த அமைச்சுக்கு செயற்றிறன் மிக்க செயலாளர் ஒருவர் தேவைப்பட்டபோது சகோதரர் அஸீஸ் அவர்களின் கடந்தகால செயற்பாடுகளில் பெரும் திருப்தியடைந்திருந்த நான் எனது அமைச்சின் செயலாளராக அவரை நியமித்துக் கொண்டேன்.

2008ம் ஆண்டு தொடக்கம் 2011ம் ஆண்டு வரையில் கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்திய, விளையாட்டு, சிறுவர் நன்னடத்தை, சமூக சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சராக நான் பணியாற்றிய காலத்தில் இத்துறைகள் அனைத்தும் பெரும் முன்னேற்றங்களை அடைந்தன என்று கூறலாம். இதற்கான அனைத்து செயற்பாடுகளிலும் செயலாளர் அஸீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் என்னுடன் இணைந்து பெரும் பணியாற்றியதை இங்கு நன்றியுடன் ஞாபகப்படுத்துகின்றேன்.

மேலும் 2019ம் ஆண்டு முதல் கிழக்கு மாகாண ஆளுநராக நான் நியமனம் பெற்று கிழக்கு மாகாணத்தில் வாழும் சகல இன மக்களும் திருப்தியடையும் வகையில் சகல துறைகளிலும் முன்னேற்றமான செயற்பாடுகளை நான் மேற்கொண்டதை சகலரும் அறிவர். அந்தக் குறுகிய காலத்துக்குள் எனது செயற்பாடுகள் அத்துனைக்கும் மாகாண சபையில் கடமையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களும் பெரும் பங்களிப்பினை வழங்கினர் என்றே கூறவேண்டும். அதிலும் செயலாளர் சகோதரர் அஸீஸ் அவர்களது இரவு பகல் பாராத ஒத்துழைப்பும் எனக்கு பெருமளவு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது கிழக்கு மாகாண சபையில் கடமையாற்றும் செயலாளர்களில் மிகவும் சிரேஷ்ட தரத்தில் உள்ள சகோதரர் அஸீஸ் அவர்கள் இதைவிட உயர்பதவியில் இருந்திருக்க வேண்டும் என விரும்பியவர்களில் நானும் ஒருவன். ஆனால் இறைவனின் நாட்டம் அது கைகூடவில்லை.

இருக்கும் மிகுதிக் காலங்களில் அவரது மக்கள் பணி சிறப்பாக அமைவதற்கு வல்ல இறைவனுடைய அருள் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு அவர் இன்னும் நீண்ட ஆயுளுடன் தனது குடும்பத்தோடு சந்தோசமாக வாழ வேண்டும் எனப் பிரார்த்தித்து அவரை வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**Dr. அல்-ஹாஜ் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புள்ளாஹ்**
முன்னாள் அமைச்சர் மற்றும் முன்னாள் ஆளுநர்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் அல்–ஹாஜ் நஜீப் ஏ மஜீத் அவர்களின் ஆசிச்செய்தி



கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் ஜனாப் U.L.A.அஸீஸ் அவர்கள் 30 வருடங்களை இலங்கை நிருவாக சேவையில் பூர்த்தி செய்துள்ளமையை பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் KTV ஊடக நிறுவனத்தினரால் வெளியிடப்படவுள்ள பாராட்டு மலருக்கு ஆசிச்செய்தியை வழங்குவதில் சந்தோசம் அடைகின்றேன்.

ஜனாப் U.L.A.அஸீஸ் அவர்கள் என்னுடைய செயலாளராக சுமார் இரண்டரை வருடங்கள் பணியாற்றியுள்ளார். நான் முதலமைச்சராக கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் தெரிவு செய்யப்பட்ட காலப்பகுதி பல்வேறு அரசியல் நெருக்கடி நிறைந்த காலம். குறிப்பாக கிழக்கின் முதலமைச்சர் பதவி என்பது தேசியரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எனவேதான் பல இன மக்களையும் பிரதேசங்களையும் இணைத்து சுமுகமான நிர்வாகத்தை கொண்டு செல்வதற்கு ஒரு செயலாளர் தேவைப்பட்டபோது பலரும் ஜனாப் U.L.A.அஸீஸ் அவர்களை என்னிடம் சிபாரிசு செய்தனர். இதனால் நான் ஆளுநரிடம் இவரை முதலமைச்சுக்கு செயலாளராக நியமிக்கும்படி கோரிக்கை விடுத்தேன்.

நாம் எதிர்பார்த்ததை போலவே மூன்று மாவட்டங்களையும் மூவின மக்களையும் இணைத்து அமைச்சின் செயற்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் என்னுடன் இணைந்து முன்னெடுத்தார். அமைச்சர் வாரியத்தின் செயற்பாடுகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் என்பவற்றை ஒழுங்குபடுத்தல் போன்றவற்றில் இரவு பகலாக உழைத்தார். இதனால் அவரின் செயற்பாடுகளில் நான் திருப்தியடைந்ததோடு ஒருபோதும் தடையாக இருந்ததுமில்லை.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளிலெல்லாம் இவர் மனம் சளைக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுறுசுறுப்பாக பணியாற்றுவார். இவர் விடுமுறை எடுத்ததை நான் கண்டிருக்கவில்லை. அந்தளவு தனது தொழிலில் சிரத்தையுடையவர். மேலும் எப்போது தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினாலும் இவரிடமிருந்து எனக்கு பதிலும் பிரச்சினைக்கு தீர்வும் கிடைக்கும்.

சுனாமி அனர்த்த காலத்தில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கல்முனையில் தனியான அலுவலகத்திலிருந்து செயற்பட்டமையை நான் அறிவேன். அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் அமைச்சர் பேரியல் அஸ்ரஃப் மற்றும் பல்வேறு அரசியல் தலைவர்களுடனும் இணைந்து பல்வேறு வீட்டு திட்டங்களையும் மீள் குடியேற்ற செயற்பாடுகளையும் முன்னெடுத்தமை என்றும் நினைவில் கொள்ளத்தக்கவைகளாகும்.

மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார் மற்றும் யாழ்ப்பாண வட பகுதி மக்களை புத்தளம் பிரதேசத்தில் குடியேற்றுவதில் உதவி அரசாங்க அதிபராக இருந்து பல சேவைகளை வழங்கியமையும் பெருந்தலைவர் மாமனிதர் மர்ஹூம் எம்.எச்.எம் அஸ்ரஃப் அவர்களின் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் ஒலுவில் துறைமுகம் போன்ற பாரிய செயற்திட்டங்களுக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக இருந்து பக்கபலமாக செயற்பட்டமையும் அதிகம் மெச்சத்தக்கது.

அதேபோல் கிண்ணியா பிரதேசத்தின் அபிவிருத்திக்கு நான் திட்டங்களை வகுத்தபோதெல்லாம் அதற்கு பக்கபலமாக இருந்து செயற்பட்டமையை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன். எனவே, இவ்வாறு ஒரு நல்ல உள்ளம் படைத்த ஒரு சிரேஷ்ட அதிகாரியை பாராட்டி அதன் ஒரு அங்கமாக மலர் ஒன்றையும் வெளியிடுவதானது மகிழ்ச்சிக்குரியதாகும். இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் இறைவன் பொருந்திக்கொள்ள வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

**அல்-ஹாஜ். நஜீப் அப்துல் மஜீது**
முன்னாள் முதலமைச்சர்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் அவர்களின் ஆசிச்செய்தி



ஒருவர் வரலாற்றில் இடம்பெறுதல் என்பதும் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு பாராட்டப்படுதல் என்பதும் அவ்வளவு இலகுவான காரியமல்ல அதற்கென தியாகம், தூரநோக்கு சமூக சேவையென பல்வேறு கட்டங்களையும் சவால்களையும் கடந்து வந்திருக்க வேண்டும்.

அந்த வகையில் U.L.A. அஸீஸ் அவர்கள் தனக்கான தனியான இடத்தைப் பெற்று அனைவரின் மனங்களிலும் அசைக்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளார் என்பதற்கு Youth Net, KTV இணைப்பின் ஏற்பாட்டில் இடம்பெறும் பாராட்டும், நூல் வெளியீடும் சாட்சியம் கூறுகின்றது. அந்த வகையில் U.L.A. அஸீஸ் அவர்களின் 30 வருட நிருவாக சேவையை முன்னிட்டு வெளியிடப்படும் நூலுக்கு இவ் ஆசிச்செய்தியினை வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

சகோதரர் அஸீஸ் அவர்களை இன்று நேற்றல்ல நெடுங்காலமாக நான் அறிவேன். நான் முதலமைச்சராக இருந்த காலத்தில் பக்கத்தில் இருந்து அவரது பணிகளை முகாமை செய்யும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. எனது எண்ணங்களையும் திட்டங்களையும் அவர் செயற்படுத்தியவிதம் மிகவும் மெச்சத் தக்கதாக அமைந்தது. கிழக்கு மாகாண முதலமைச்சர் என்ற வகையில் என்னால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பணிகளிலும் என்னோடு இணைந்து சிறப்பாக செயற்பட்டவர்தான் சகோதரர் அஸீஸ் அவர்கள். கிழக்கு மாகாணத்திலுள்ள எல்லாச் சமூகத்தவர்களுக்கும் சமமானவகையில் அபிவிருத்திகளும், சேவைகளும் கிடைக்க வேண்டும் என்பதில் இவர் எப்போதும் கவனமாகச் செயற்பட்டவர். சொல்லப்போனால் எனது சிறப்பான ஒரு ஆலோசகராக இவர் செயற்பட்டவிதம் பாராட்டத்தக்கது. நான் முதலமைச்சராக சேவையாற்றிய காலத்தில் உள்ளூராட்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடமைப்பு, போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை போன்ற முக்கிய துறைகளின் வளர்ச்சிக்கு செயலாளர் என்றவகையில் இவர் வழங்கிய பங்களிப்பும் ஒத்துழைப்பும் இன்றும் மெச்சத்தக்க வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுனாமி காலகட்டம், யுத்த காலகட்டங்களில் இவர் மக்களின் தேவையை அறிந்து செயற்பட்ட விதம் இன்னும் மறக்கப்படாமல் நினைவூட்டப்படுவது இவரது பணிக்குள்ள நிலையான சான்றாகும். இவர் பிரதேச செயலாளராக இருந்த காலகட்டத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஒலுவில் துறைமுகம் போன்ற செயற் திட்டங்களுக்கு தோள்கொடுத்து உதவியமைக்காக தலைவர் மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்களினால் '***மக்கள் தொண்டன்*** பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட சான்று இவரது சமூகப்பணிக்கு உள்ளங்கை நெல்லிக்கணியான ஆதரங்களாகும்.

இவ்வாறு நிர்வாகத்துறையிலும் மக்கள் பணியிலும் மனதார சிரத்தையுடன் செய்றபட்டு இன்று போற்றப்படுகின்ற சகோதரர் அஸீஸ் அவர்களின் முப்பதாண்டு கால சேவை எப்போதும் நிலைத்திருக்கும் என்பதோடு, இவர் இன்னும் சேவைகள் செய்து நலம்பெற்று வாழவும் இறைவனின் ஆசி கிடைக்கவும் என்றும் வாழ்த்தி பிரார்த்திக்கின்றேன்.

**நசீர் அஹமட் (Eng)**
பாராளுமன்ற உறுப்பினர்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - பிரதித்தலைவர்
முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்



கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் ஜனாப் ரு.டு.யு.அஸீஸ் அவர்கள் தனது 30 வருட கால நிருவாக சேவையைப் பூர்த்தி செய்துள்ளதைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வுக்கான ஞாபகாரத்த மலருக்கு இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

செயலாளர் அஸீஸ் அவர்கள் உண்மையிலேயே வாழ்த்துவதற்கும், கௌரவப்படுத்துவதற்கும் மிகவும் தகுதியானவர் என்பது எனது கருத்தாகும். கிண்ணியா மண்ணை மிகவும் நேசிக்கின்ற ஒருவராகவும், தான் ஒரு சிரேʻட அதிகாரியாக இருந்த போதிலும் எவ்வித மமதையும் இல்லாமல் எல்லோரிடமும் அன்பாகவும், மனிதாபிமானத்துடன் பழகக்கூடிய ஒருவர் . அத்துடன் சேவை நாடிவருபவர்களுக்கு தன்னாலான அத்தனை உதவிகளையும் மனமுவந்து சிரமம் பாராது செய்து உதவக்கூடியவர்

கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக இருந்து மிகவும் நீண்ட காலமாக மாகாண உள்ளூராட்சித் துறையை சிறப்பாக வழிநடாத்தும் செயலாளர் அஸீஸ் அவர்கள், கிண்ணியா நகரசபையின் செயற்பாடுகளில் மிகவும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் பல உதவிகளைச் செய்து கொண்டிருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிண்ணியா நகர சபையின் தலைவர் என்ற வகையில் என்னுடனும் இப்பிரதேசத்திலுள்ள ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுடனும் அன்பாகவும் மரியாதையாகவும் பழகும் இவர் எங்களால் முன்வைக்கப்படும் நியாயமான கோரிக்கைகள் எதனையும் நிறைவேற்றித்தரப் பின் நின்றதில்லை.

உள்ளூராட்சி மன்ற செயற்பாடுகள் மட்டுமன்றி, முதலமைச்சின் கீழ் வருகின்ற சுற்றுலா, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகளிலும் இப்பிராந்திய மக்களுக்கு தன்னாலான பங்களிப்புக்களை சிறப்பாக வழங்கியுள்ளமையை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

இவர் ஒரு ஆசிரியராக தனது பணியை தொடங்கி 1990 ம் ஆண்டு தொடக்கம் உதவி அரசாங்க அதிபராக, மேலதிக அரசாங்க அதிபராக, பிரதேச செயலாளராக, உள்ளூராட்சி மன்றங்களின் விசேட ஆணையாளராக மற்றும் அமைச்சுக்களின் செயலாளராக பல்வேறுபட்ட பதவிகளை வகித்துள்ளதுடன் பணியாற்றிய இடங்களில் எல்லாம் மக்கள் நலன் கருதி பெரும் பணி செய்துள்ளதுடன் அப்பிரதேச மக்களின் மனங்களையும் வென்ற ஒரு சிறந்த சிரே'ட அதிகாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.


அந்த வகையில் மரியாதைக்குரிய செயலாளர் அஸீஸ் அவர்களை வாழ்த்தி வெளியிடும் மலருக்கு இச்செய்தியை வழங்கக் கிடைத்தமையை பேறாகக் கருதுவதுடன், மலர்க்குழுவிற்கு எனது நன்றியைத் தெரிவித்து இவரது செயற்பாடுகளுக்கு எல்லாம் வல்ல இறைவனின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**எஸ்.எச்.எம்.நளீம்**
கௌரவ தவிசாளர்
நகர சபை, கிண்ணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேச விவகாரங்களில் முதுமாணிப்பட்டம் பெற்றபோது
(கொழும்பு பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்து மல்லிகை

-ஆசுகவி அன்புடீன்

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக நீண்ட காலமாக மக்கள் பணியாற்றும் ஜனாப் U.L.A. அஸீஸ் அவர்கள் நிர்வாகச் சேவையில் 30 வருடத்தைப் பூர்த்தி செய்து தொடர் பணியாற்றுவதை முன்னிட்டு வெளியிடப்படும் ஞாபக மலருக்கு அவர் தொடர்பான இச்செய்தியை வழங்குவதில் மட்டற்ற **மகிழ்ச்சி** அடைகின்றேன்.

## 01. பிறந்த மண்

இலங்கையில் முஸ்லீம்கள் ஆகக் கூடுதலாக வாழும் ஒரு மாவட்டம் அம்பாரை மாவட்டமாகும். அம்பாரை மாவட்டத்தில் கடற்கரையோடு அண்மித்துள்ளப் பிரதேசம், தென்கிழக்கு பிரதேசமாக கருதப்படுகிறது. கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் முதலான இந்த தென்கிழக்குப் பிரதேசத்திற்குள் அடங்கும். தென்கிழக்குப் பிரதேசத்தில் பொத்துவில் தொகுதியில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த முதுமை நிறைந்த ஓரூர் அட்டாளைச்சேனை.

12433

1815அளவில் பிபில பிரதேசத்தில் உள்ள "கொட்டபோவ" எனும் கிராமத்தில் இருந்து மக்கள் இங்கு வந்து குடியேறி, "அட்டாளைகட்டி" சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டதாக அறியமுடிகின்றது. அதனால் தான் இவ்வூருக்கு அட்டாளைச்சேனை என்று பெயர் வந்ததாகவும் தெரிய வருகின்றது. இந்தியாவில் கேரளப் பிராந்தியத்தில் இருந்து மார்க்கப் பிரச்சாரத்திற்காக வந்த பல அறிஞர்கள் இவ்வூர் வாசிகளாகவும் மாறியுள்ளன. இதனால் தான் இவ்வூரில் ஆலிம்களும், மார்க்கப் பற்றாளர்களும் அதிகம் என்பது ஆய்வாளர் கருத்து. 1921ம் ஆண்டில் குடிசன மதிப்பீட்டில் அட்டாளைச்சேனையில் 315 குடும்பங்கள் இருந்தன. இன்று 17கிராம சேவகர் பிரிவுகளாகவும் ஏறக்குறைய 27836 மக்கள் தொகையையும் கொண்ட அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலை, கல்விக் கல்லூரி, கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி ஆகியவற்றை உள்ளடக்கிய பூமியாகவும் மறைந்த மாமனிதர் அஷ்ரஃப் அவர்களது கனவான தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை தன்னகத்தே கொண்ட பிரதேசமாகவும் திகழ்கின்றது. இதுவே நமது செயலாளர் அஸீஸ் அவர்கள் பிறந்த ஊராகவும் பெருமை பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. பாடசாலைக் கல்வி

அஸீஸ் அவர்களது கல்விப் பிரவேசம் தொடங்கிய பாடசாலை அட்டாளைச்சேனை அல்முனீரா வித்தியாலயம் ஆகும். ஆரம்ப காலத்தில் இப்பாடசாலை ஆண் மாணவர்களையும் உள்வாங்கிய கலவன் பாடசாலையாக இயங்கியது.

இதன் பின்பு ஆறாம் வகுப்பு தொடக்கம் G.C.E. உயர்தரம்வரை இவர் கல்வி கற்ற பாடசாலை அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியாகும். இப்பாடசாலையில் அஸீஸ் அவர்களை ஆற்றுப்படுத்திய சிறப்பு ஆசிரியர்களாக பாறூக் மௌலானா (பொத்துவில்), A.M.இப்றாலெவ்வை (அக்கரைப்பற்று), M.A.உதுமாலெவ்வை (அக்கரைப்பற்று), A.R.A. அஸீஸ் (மருதமுனை) ஆகியோர் மிக முக்கியமானவர்கள். பாடசாலையில் நடைபெறும் விழாக்கள், மாவட்டமட்ட பேச்சு, கட்டுரை, கவிதை பாடல், போட்டிகள் மற்றும் விழாக்கள் அனைத்திலும் அஸீஸ் பங்கு பற்றுவார். பாடசாலை மட்டத்தில் நடைபெறும், அறிவுக்களஞ்சியம் போன்ற போட்டி நிகழ்ச்சிகளுக்கு இவர்தான் தலைவர்.

## 03. எலிபிடித்த மண் பூனை

"கந்தையானாலும் கசக்கிக்கட்டு கூழானாலும் குளித்துக்குடி" என்ற இரு பழமொழிகளும் இவருக்கு இரட்டைக் குழந்தைகள் மாதிரி. மாணவப் பருவத்திலேயே இவர் மிகவும் சுத்தமாக இருப்பார். இவர் அணியும் ஆடைகள் எப்போதும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும். அமைதியான சுபாவம், அடக்கமான மாணவன், பகடிக்காவது பொய் சொல்வதும் இல்லை, ஏமாற்றுவதும் இல்லை, புரளி இல்லாத மாணவன் என்று பெயர் எடுத்தவர்.

ஆனாலும், 1980ல் பாடசாலையில் நடந்த ஒரு மாணவர் புரட்சிக்கு இவர் தான் தலைவன். அநீதிக்கு எதிராகப் போராடும் சுபாவம் அஸீஸிக்கு எப்போதும் இருந்தது. "பார்த்தால் பசு பாய்ந்தால் புலி" என்பார்களே அப்படித்தான் இவர்.

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பாடசாலைக்கு உள்ளேயே நடந்த புரட்சி அது. அந்தப் புரட்சிக்கு தலைமை தாங்கி அநீதிக்கு எதிராக போராடியதற்காக, அஸீஸ் அவர்களும், அவர்களது நண்பர்கள் சிலரும் சிறிது காலம் பாதிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் "பீனிக்ஸ்" பறவைகளாக மீண்டெழுந்து சரித்திரம் படைத்தது தான் வரலாறு. அஸீஸ் சாதுவான ஒருவராக இருந்தாலும், அநீதிக்கெதிரான போராட்டக் குணம் எப்போதும் அவரது மனதில் இருந்து கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. ஒரே ஒருவர்**

*1981ல்* நடந்த க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் அட்டாளைச்சேனை மகா வித்தியாலயத்தில் தேறி (சித்தியடைந்து) பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற ஒரேயொரு மாணவன் அஸீஸ் தான். அவரது பல்கலைக்கழக பிரவேசம் *1982ல்* நடந்தது. *1985ல்* பேராதனைப்பல்கலைக்கழகத்தில் (B.A.சிறப்பு) பட்டதாரியானார். *1912ம்* ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் முதலாவது பட்டதாரியும் இவரே. இதன் பின்பு ஆசிரியராக நியமனம் பெற்று அப்புத்தளை, நிந்தவூர், அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் சிறப்பாக பணியாற்றினார்.

*1987ம்* ஆண்டு நடைபெற்ற இலங்கை நிருவாக சேவைப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றி *1990ல்* சித்தியடைந்தவர்களில் இவர் ஒருவர் மட்டுமே முஸ்லிம் அதிகாரியாவார். *1990ல்* இவருக்கு புத்தளம் பிரதேசத்துக்கான உதவி அரசாங்க அதிபர் நியமனம் கிடைத்தது.

**05. உதவி அரசாங்க அதிபர்**

*1990ல்* உதவி அரச அதிபராக புத்தளத்தில் கடமையேற்ற இந்த காலத்துக்குள்ளேயே வடமாகாண முஸ்லிம் மக்கள் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்டு, அவர்கள் உடுத்த உடுப்புடன் புத்தளத்தில் தஞ்சமடைந்த காலகட்டம் அது. அனாதைகளாக வந்த அவர்களை வழிப்படுத்தி, புனர்வாழ்வமைத்து, வாழ்வளிக்க வேண்டிய பாரிய பொறுப்பு புத்தளம் மக்களுக்கும், புதிய உதவி அரச அதிபருக்கும் இருந்தது.

29வயதையே தொட்ட இளைஞனாக, முதுமை இல்லாவிட்டாலும் முதிர்ச்சியுள்ள மனிதனாக அவர் இருந்தார். சிறுவயதில் வாழ்க்கையில் பெற்ற அனுபவங்கள், மற்றவர்களின் துன்பங்கள், துயரங்கள், தேவைகள் என்பவைகளை அறிந்து செயற்பட ஏதுவாக அமைந்து விட்டது அவருக்கு. அகதிகளாக வந்தவர்களை இன்முகம் காட்டி வரவேற்று எல்லோரும் இருப்பதற்குரிய ஒழுங்குகளை மற்றவர்கள் போற்றும் வகையில் செய்துக் கொடுத்தார் அஸீஸ். மதினா நகர், பாலாவி, தில்லையடி போன்ற பகுதிகளில் மாதிரிக் கிராமங்களை அமைத்து மக்களுக்குத் தேவையான சகல விதமான தேவைகளையும் செய்து கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்த மன்னார், யாழ்ப்பாணம் மக்களின் மனதில் மட்டுமன்றி, புத்தளத்து மக்களது இதயத்திலும் அவருக்கு தனியிடம் உருவாகிற்று. ஏறக்குறைய 03 வருடங்கள் அவரது சேவை புத்தளம் மக்களை திருப்தியில் ஆழ்த்தியது எனலாம்.

### 06. பெற்றோலுக்குள் நெருப்பு

புத்தளம் உதவி அரச அதிபராக 03 ஆண்டுகள் மெச்சத்தக்க வகையில் பணிசெய்து கொண்டிருந்த வேளையிலே இவருக்கு 1993-ஓகஸ்ட் 23ம் திகதி அட்டாளைச்சேனைக்கு பிரதேச செயலாளராக இடமாற்றம் கிடைத்தது. நீருக்குள் நெருப்புக் கொண்டு போகும் செய்கையைப் போல் அல்ல பெற்றோலுக்குள்ளால் நெருப்புக் கொண்டு செல்கின்ற அவதானம் இங்கே அவருக்கு தேவைப்பட்டது. ஊரில் தாய் வழி, தந்தை வழி, சொந்தக்காரர்கள், மனைவி வழி சார்ந்தவர்கள், பள்ளிக்கூட நண்பர்கள், ஊரின் பிரதான புள்ளிகள், பொது மக்கள் இப்படி எல்லோருக்குள்ளும் ஊடாடி கடமை செய்ய வேண்டிய கவனம் அவருக்குத் தேவைப்பட்டது.

“எல்லோரும் இன்புற்றிருப்பதல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே” எனும் கொள்கை சார்ந்தவர் இவர். அந்தக் கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லாமல் 13 வருடங்கள் அட்டாளைச்சேனையில் தலைநிமிர்ந்து பணி செய்தார் அப்துல் அஸீஸ்.

### 07. நான்கு இனம் இரண்டு மொழி

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவு தீகவாப்பி, ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய நான்கு கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசம். இது 04 இனங்கள் இரண்டு மொழி பேசும் மக்கள் வாழும் பிரதேசமாகும். இங்கு முஸ்லிம்களும், சிங்களவர்களும், தமிழர்களும், கத்தோலிக்கர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

தனி ஒரு ஊராக இல்லாமல் நான்கு ஊர்களை இப்பிரதேசம் உள்ளடக்கியுள்ளதால் எல்லா ஊர்களையும், இனங்களையும் சம பார்வையோடு பார்த்து அரசபணி புரிவதென்பது எல்லோருக்கும் ஆகக்கூடிய காரியமல்ல. இங்கு ஒவ்வொரு நாளும் கத்தியில் நடந்தே காரியம் பார்த்தார் அஸீஸ் என்றே கூற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. அபிவிருத்திப் பணிகள்

1973 முதல் ஒரே ஒரு கட்டிடத்தில் இயங்கி வந்த அட்டாளைச்சேனை உதவி அரசாங்க அதிபர் காரியாலயப் பணிகள் பல கட்டடங்களுக்குள் இயங்கத் தொடங்கியது இவரது காலத்தில் தான். காரியாலயத்துக்குத் தேவையான ஆளணிகள் தளபாடங்கள், சுற்றுமதில் பூந்தோட்டம் இப்படிப் பல்வேறு அபிவிருத்திகளையும் "மாவட்டக்கச்சேரியா!" என்று பிறர் கேட்குமளவுக்கு அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்தை மாற்றியமைத்தது இவர்தான்.

மீலாத் நகர், ஹுசைனியா நகர் போன்ற இடங்களில் வீட்டுத்திட்டங்களை உருவாக்கி மாதிரிக் கிராமங்களை அமைத்தார். பயங்கரவாதத்தால் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்களை சம்பு நகர், ஆலம்குளம், தீக்கவாப்பி, திராய்க்கேணி, ஆலிம் நகர் போன்ற இடங்களில் மீளக்குடியமர்த்திய பெருமையும் இவருக்குண்டு.

பாலமுனை விளையாட்டு மைதானம், அட்டாளைச்சேனை விளையாட்டு மைதானம் இவைகளுக்கான காணியைப் பெறுவதில் அஸீஸ் அடைந்த கஷ்டங்கள் சொல்லவொண்ணாதது. இன்று அட்டாளைச்சேனை விளையாட்டு மைதானம் "அஷ்ரஃப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானம்" எனப்பெயர் பெற்று விளங்குவதற்கும் முக்கிய காரணமானவர் அஸீஸ் தான். அதற்கான காணிகளைப் பெற்றதில் இருந்து அவற்றை அபிவிருத்தி செய்து இளைஞர்களின் விளையாட்டுத் தாகத்தைத் தீர்த்து வைக்க பெரும் பணியாற்றினார் இவர். பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களும் தனியாரும் பெருமளவு நஷ்டயீட்டைப்பெற்ற பிரதேசம் அட்டாளைச்சேனை தான் என்பது அதனோடு சம்பந்தபட்டவர்களது கருத்தாகும். எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற இவரது பொது நோக்கு தான் இதற்குக் காரணம் என்பதை சொல்லவும் வேண்டுமா?

தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம், மகபொல சென்றர், வாடிவீடு என்பவைகளை பெருந்தலைவர் அஷ்ரஃப் அவர்களோடு இணைந்து அமைப்பதிலும், இவைகளுக்கான காணிகளைப் பெறுவதிலும் அஸீஸ் சிந்திய வியர்வை அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஸ்தாபகத்தலைவர் மாமனிதர் அஷ்ர∴ப் அவர்கள் கனவு கண்ட பூமி அட்டாளைச்சேனைப் பிரதேசம். மேலே கட்டப்பட்ட நிறுவனங்கள் மட்டுமல்லாது இன்னும் பல கனவுகளை இப்பிரதேசத்தில், குறிப்பாக ஒலுவில் பிரதேசத்தில் உருவாக்க கனவு கண்டார் தலைவர் அஷ்ர∴ப். இப்பிரதேச அபிவிருத்திகள் தொடர்பில் அஷ்ர∴ப் காணும் கனவுகளுக்கெல்லாம் அவர் முதன்முதலில் அபிப்பிராயம் கேட்பது அஸீஸ் அவர்களிடம் தான். ஒலுவில், ஆலிம்சேனைப் பகுதியில் பாரிய அபிவிருத்திக்கும், சம்புநகர்ப் பகுதியில் தென்கிழக்குப் பல்கலையுடன் இணைந்த கலாபீடங்களின் உருவாக்கத்துக்கும் திட்டமிட்டு, அஸீஸ் அவர்களிடம் ஒப்படைத்து காரியங்கள் தொடங்க இருந்த வேளையிலேயே, பெருந்தலைவர் அஷ்ர∴ப் அவர்கள் இறையடி சேர்ந்துவிட்டார். இந்த இழப்பானது இன்றுவரை அஸீஸ் அவர்களைப் பாதித்துக் கொண்டிருப்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

**09. பட்டமும் பொன்னாடையும்**

1997ல் ஏறக்குறைய 07 கோடி ரூபா செலவில் அட்டாளைச்சேனையில் நடந்த மீலாத் விழாவும், அபிவிருத்திப் பணிகளும் அஸீஸ் அவர்களது அயராத சேவைக்கு முத்தான முத்தவையாகும். அவரது காரியாலயத்தில் மீலாத் செயலகம் ஒன்றை அமைத்து அவ்விழாவின் வெற்றிக்காக அயராது பாடுபட்டார் அஸீஸ்.

மாமனிதர் அஷ்ர∴ப் அவர்களது மனம் கவர்ந்த ஒருவராக திகழ்ந்தவர் இவர். இவரை அவர் அஸீஸ் என்று பெயர் சொல்லித்தான் அழைப்பார். அந்த அழைப்பின் தொனியின் கனிவு இளைய சகோதரனை மூத்த சகோதரன் அழைப்பது போல பாசம் பொங்கி வழியும். அஸீஸ், அவர்கள் அஷ்ர∴ப் அவர்களின் அபிமானியாக இருந்தார். அஷ்ர∴ப் தலைவர் தலையசைத்தால் போதும், அஸீஸின் கரங்கள் பம்பரமாக சுழலும். அஸீஸ் அவர்கள், அஷ்ர∴ப் அவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தவர். அதனால் தான் அட்டாளைச்சேனை தேசிய மீலாத் விழா மேடையில் இவருக்கு "மக்கள் தொண்டன்" என்ற பட்டம் சூட்டி கௌரவித்தது மட்டுமன்றி, அங்கு பொது மக்கள் தமக்குப் போர்த்திய பெறுமதிமிக்கப் பொன்னாடையை கழற்றி அஸீஸுக்குப் போர்த்தி அழகு பார்த்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் அஷ்ர∴ப் தலைவர். அந்தப் பொன்னாடையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுச்சின்னமாக அஸீஸ் அவர்கள் இன்றுவரை கவனமாகப் பாதுகாத்து வருவது எத்தனை பேருக்குத் தெரியும்.

## 10. எல்லோராலும் விரும்பப்படுபவர்

அஸீஸ் அவர்களை, அஷ்ர.்.ப் தலைவர் மாத்திரமன்றி எல்லா அரசியல்வாதிகளும், அரசாங்க அதிபர்களும், உயர் அதிகாரிகளும் மிகவும் விரும்பினார்கள். அதற்குக் காரணம் அவரது பண்பாடல்தான். ஒரு பிள்ளையோடு பழகும் போது பிள்ளையாகவும், ஒரு பெரியவரோடு பழகும் போது பெரியவராகவும் பழகுவார். ஆடுகிற மாட்டை ஆடிக்கறக்கவும், பாடுகிற மாட்டைப் பாடிக்கறக்கவுமான அறிவும், திறனும் அவரிடம் அதிகமாக இருந்தது. அதனால் தான் ஏறக்குறைய 17 ஆண்டுகள் அம்பாரை மாவட்டத்தில் பல உயர் பதவிகளை அவரால் அலங்கரிக்க முடிந்தது.

முன்னாள் சிரேஷ்ட அமைச்சர்களாக இருந்த A.R.மன்சூர், M.A.மஜீட், P.தயாரத்ன, றஊப் ஹகீம், திருமதி. பேரியல் அஷ்ர.்.ப், A.L.M.அதாஉல்லாஹ், சேகு இஸ்ஸதீன் போன்ற எல்லோராலும் எடுத்தாளப்பட்டவர் அஸீஸ். அதனால் தான் அனேகரின் ஆசிர்வாதத்துடனும் அம்பாரை மாவட்ட மேலதிக அரச அதிபராக பதவியுயர்வு பெற்று 2005 முதல் 2009 வரை அம்பாரை மாவட்ட கரையோரப் பிரதேச மக்களுக்கு பெரும் பணியாற்றினார்.

அஸீஸ், பூமியைப்போல பொறுமைசாலி. புரிந்துணர்வு உள்ளவர். மற்றவரின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பவர். யாரையும் எப்போதும் பழிவாங்கியது கிடையாது. ஒரு சிற்றூழியர் மீதாவது சீறியதும் இல்லை, சினந்ததும் இல்லை. மரியாதைக் குறைவாக எவருக்கும் பேசியதும் இல்லை. இவரைப் பற்றிய அனேகரின் கருத்து– “சவாலை எதிர்கொள்பவர்”, தூரநோக்குடையவர், மனிதநேயம் குடிகொண்டவர், நல்லறிஞர் அத்துடன் எழுந்தமானமாக எந்தத் தீர்மானத்தையும் எடுக்க மாட்டார். தீரயோசிப்பார். யோசித்து முடிவெடுத்தால் முடிவுதான். அதன் பிறகு முன்வைத்த காலை பின்வைக்க மாட்டார். செயலில் முன்னேற்றம் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக பதவியுயர்வு

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக மாவட்ட மக்களின் நலனில் அக்கறையுடன் கடமையாற்றிய அஸீஸ் அவர்கள், மாகாண சுகாதார சுதேச வைத்திய சிறுவர் நன்னடத்தை விளையாட்டு சமூக சேவை அமைச்சுக்களின் செயலாளராக பதவியுயர்வு பெற்று சென்றதன் மூலம், இன்னுமொரு படி மக்கள் சேவைக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொண்டார் என்று குறிப்பிட முடியும். இது நிகழ்ந்தது 2009 ஜூலை மாதமாகும்.

கிழக்கு மாகண சுகாதார அமைச்சராக இருந்த அல்ஹாஜ். M.L.A.ஆ.ஹிஸ்புல்லாஹ் அவர்களுடனும் அவருக்கு பின்பு பதவியேற்ற M.S.சுபைர் அவர்களுடனும் நெருக்கமாக இருந்து அஸீஸ் அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியனவாகும்.

புல்மோட்டை, மூதூர், வாகரை, தீகவாபி, அட்டாளைச்சேனை, கிண்ணியா, ஹிங்குரான போன்ற பிரதேசங்களில் காணப்பட்ட வசதி குறைந்த அரச வைத்தியசாலைகளை தரமுயர்த்துவதிலும் அவற்றுக்குத் தேவையான வைத்தியர்கள், தாதியர்கள் போன்றவர்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் அவர் பெரும் பங்காற்றியதுடன் அனேகமான கட்டிட வசதிகளையும் அமைத்துக் கொடுத்து மாகாண சுகாதாரத்துறையை உயர்வடையச் செய்வதில் முழுமூச்சுடன் பங்காற்றினார். சுகாதாரத்துறை, வைத்தியர்கள் என்னும் இறுக்கமான வட்டத்தினுள் வைத்தியர்களுடனும், சுகாதாரத்துறை ஊழியர்களுடனும் மிகவும் கண்ணியமாகவும், அன்னியோன்யமாகவும் நடந்து, வைத்தியர்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று செயற்பட்டமையே இவரது வெற்றிக்காரணிகளாக அமைந்தன.

ஆயுர் வேதத்துறையையும் தனது இன்னொரு முக்கிய துறையாக கருதி செயலாளர் அஸீஸ் அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியன. திருகோணமலை, கப்பல்துறை, நிலாவெளி, கிண்ணியா, ஏறாவூர், காத்தான்குடி, பதியத்தலாவ மற்றும் தமன, அட்டாளைச்னை, அக்கரைப்பற்று ஆயுர் வேத வைத்தியசாலைகள் இவரது காலத்தில் பெருமளவு அபிவிருத்திகளைக் கண்டன. இன்று மேலைத்தேய வைத்தியர்களும் ஆயுர் வேத வைத்தியர்களும் இவருடைய சேவைக்காலத்தை பொற்காலம் என சிலாகித்துப் பேசுவதைக் காணக்கூடியதாக உள்ளது. பெருமளவு ஆயுர் வேத மருந்து உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்கள், புதிய கிராமிய வைத்தியசாலைகளின் தோற்றம் பெருமளவு வைத்தியர்களின் நியமனங்கள் என்பனவெல்லாம் நடந்தேறியது இக்கால கட்டத்திலேயே என்பது குறிப்பித்தக்கது.

இதனைவிட இன்னொரு சிறப்பம்சம் சுகாதாரத்துறையில் பெருமளவு சிற்றூழியர்கள் நியமனம் பெற்றதைக் குறிப்பிடலாம். அமைச்சர் அல்ஹாஜ்.M.L.A.ஆ.ஹிஸ்புல்லாஹ் அவர்கள் சுகாதார அமைச்சராக இருந்தவேளை கிழக்கு மாகாணத்தில் சுகாதார தொண்டர் ஊழியராக சுமார் 500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். சுகாதார அமைச்சர் அவர்களுக்கும் அப்போதைய ஆளுநர் அட்மிரல் மொஹான் விஜே விக்கிரம அவர்களுக்கும் இடையில் இது தொடர்பில் பெரும் கயிறிழுப்பொன்று நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டமது.

அமைச்சர் அல்ஹாஜ்.M.L.A.M.ஹிஸ்புல்லாஹ் அவர்களும் அப்போதைய முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களும் இது தொடர்பில் புதியவர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொண்டு ஆளுநருடன் முட்டி மோதிக் கொண்டிருந்த வேளையில் 2009ம் ஆண்டு புதிதாக பதவியேற்ற செயலாளர் அவர்களுக்கு இருபக்கமும் நெருக்கடியேற்பட்டு, யாருக்கு நியமனம் வழங்குவது என்ற பிரச்சினையேற்பட்ட போது ஆளுனர் அவர்களுடனும் முதலமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் அவர்களுடனும் பவ்வியமாக விடயங்களை எடுத்துக்கூறி தொண்டர் அடிப்படையில் கடமையாற்றியவர்களுக்கே முன்னுரிமை வழங்கி சுகாதார ஊழியர் நியமனங்களை வழங்கி, நடவடிக்கை எடுத்து சாதுரியமாக இப்பிரச்சினையை தீர்த்து வைத்தார். இதற்காக ஆளுனர் உட்பட மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் எல்லோரும் இவரது செயற்பாட்டை அப்போது பாராட்டினர். செயலாளர் அஸீஸ் அவர்களால் அப்போது 400க்கும் மேற்பட்ட ஊழியர்கள் நியமனத்தினைப் பெற்றுக் கொண்டனர். அதன் பின்பும் 200க்கும் மேற்பட்ட சிற்றூழியர்கள் சுகாதாரத்துறையில் நியமனம் பெறுவதற்கும் செயலாளர் அவர்கள் முழுமூச்சுடன் முயற்சி செய்து அமைச்சர் M.S.ஆ.சுபைர் அவர்களுடன் இணைந்து பணியாற்றியமை இங்கு குறிப்பிடக்கூடிய ஒரு விடயமாகும்.

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக இருந்து மாகாண விளையாட்டுத்துறைக்கு இவர் ஆற்றிய பணிகள் சிலாகித்துப் பேசப்படுகின்றன. மாகாணத்திலிருந்த பெருமளவு விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தியடைந்ததுடன் பெரும் பிரச்சினையாக இருந்த விளையாட்டு உத்தியோகத்தர்களது நியமனம் இவரது காலத்திலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்து வைக்கப்பட்டது. இன்று கூட மாகாண விளையாட்டு திணைக்களத்தில் பணியாற்றுகின்ற பெருமளவு விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள் எல்லாம் செயலாளர் அஸீஸ் அவர்களது காலத்தில் நியமனம் பெற்றவர்களே. அத்துடன் இன்றும் அக்கால விளையாட்டு வளர்ச்சிகள் நிகழ்ச்சிகள் தொடர்பிலும் அவர்கள் சிலாகித்துப் பேசக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக,**

சுகாதார சுதேச வைத்திய விளையாட்டு, கூட்டுறவுத்துறை அமைச்சின் செயலாளராக கடமையாற்றுகி கொண்டிருக்கும் போது 2013ம் ஆண்டில் மாகாண ஆட்சியில் மாற்றம் ஏற்பட்டது. ஜனாப்.நஜீப்.ஏ.மஜீட் அவர்கள் முதலமைச்சராக பதவியேற்றார். இப்போது ஒரு பிரச்சினையேற்பட்டது. முதலமைச்சர் அவர்கள் ஜனாப் அஸீஸ் அவர்களை தனது செயலாளராக நியமித்துத்தரும் படி ஆளுனர் மொஹான் விஜே விக்கிரம அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். ஆளுனர் அவர்கள் இது தொடர்பில் அஸீஸ் அவர்களுடன் சம்மதத்தைக் கேட்க, தொடர்ந்தும் தன்னை சுகாதார அமைச்சிலேயே கடமையாற்ற அனுமதிக்கும் படி செயலாளர் அவர்கள் கோரிய போதும் முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கிணங்க, ஆளுனர் அவர்கள் செயலாளர் அவர்களை மாகாண முதலமைச்சர் மற்றும் முதலமைச்சுக்கான செயலாளராக நியமனம் செய்தார். கௌரவ நஜீப்.ஏ.மஜீட் மற்றும் கௌரவ நசீர் அகமட் ஆகியோரது ஆட்சியில் இரண்டு முதலமைச்சர்களினதும் செயலாளராக இருந்து எல்லோரும் மெச்சத்தக்க அதிகாரியாக இவர் பணியாற்றியது இவரது நிருவாகத்திறமையின் செயற்பாடே எனலாம்.

திரு.சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் முதலமைச்சராக இருந்த வேளையில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு ஜனாப் அஸீஸ் அவர்களை கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்க சிபார்சு செய்து கடிதங்களை அனுப்பிய வேளை அவை சில அரசியல் சூழ்ச்சிகளால் கை கூடாமல் போனமையும் கவலைக்குரிய ஒரு பதிவாகும்.

முதலமைச்சின் செயலாளராக பதவிேற்றதும் இப்போது புதிய அமைச்சின் கீழ் உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, சிறுவர் கல்வி வீடமைப்பு, சுற்றுலா, சிறு கைத்தொழில் போக்குவரத்து போன்ற முக்கிய துறைகள் உள்ளடக்கப்பட்டன. உள்ளூராட்சி அமைச்சின் கீழ் 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி மன்றங்கள், அதன் தவிசாளர்கள், மாநகர முதல்வர்கள், 37 மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருடனான புதிய நிர்வாக முறையொன்றுக்குள் நுழைய வேண்டிய ஒரு சூழல் உருவானது. அரசியல்வாதிகளுடனான தொடர்பும், அவர்களது கோரிக்கைகளை செவிமடுத்து பூர்த்தி செய்ய வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களினது பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் சுமார் 2500க்கும் மேற்பட்ட சிற்றூழியர் நியமனங்கள் அதனோடு இணைந்த ஏனைய உத்தியோகத்தர் நியமனம் என்பன இக்காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. புறநெகும திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 30 உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டதுடன், வாகன ஏற்பாடுகள், இயந்திர உபகரணங்கள் என்பனவெல்லாம் செயலாளர் அஸீஸ் அவர்களின் ஒத்துழைப்போடு முதலமைச்சர்களின் அனுசரணையுடன் வழங்கி வைக்கப்பட்டன.

உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளுடன் இன்றும் கூட மிகவும் கண்ணியத்துடனுடம் மதிப்புடனும் செயலாளர் அஸீஸ் அவர்கள் நடந்து கொள்வதனால்தான் அத்தனை தவிசாளர்களும் ஏன் உறுப்பினர்கள்கூட இவருடன் மிகவும் நெருக்கமாகவும் கண்ணியமாகவும் பழகி தங்களது தேவைகளை பெற்றுக்கொள்கின்றமை சிறப்பம்சமாகும். முதலமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதிகள், பிராந்திய ரீதியிலும் இனவிகிதாசார அடிப்படையிலும் பங்கிடப்பட்டு அபிவிருத்தி திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றமையும் அவற்றை சமமாகவும், கவனமாகவும் செயற்படுத்துவதில் செயலாளர் அவர்கள் எப்போதும் அக்கறையுடன் செயற்படுகின்றமையும் இங்கு சிறப்பாகக் கூறக்கூடிய விடயமாகும்.

கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றுகின்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளில் செயலாளர் ஜனாப்.அஸீஸ் அவர்கள் மிகவும் சிரேஷ்டமான மூத்த அதிகாரியாவார். 1990ம் ஆண்டு முதல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து 30 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள இவர் 11 வருடங்கள் மாகாண சபையில் செயலாளராக கடமையாற்றுவதுடன், 1984 தொடக்கம் 1990 வரையான காலப்பகுதியில் ஆசிரியராக சேவையாற்றி சிறந்த ஆசிரியர் என்ற நற்பெயரையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆசிரியராக முதலில் அப்புத்தளையிலும் பின்பு நிந்தவூர் மற்றும் அட்டாளைச்சேனை மத்திய கல்லூரிகளிலும் இவர் சேவையாற்றி பல கல்விமான்கள் உருவாவதற்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். பல நீதிபதிகள், சட்டத்தரணிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்காளர்கள், கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளாக இவரது மாணவர்கள் திகழ்கின்றமையும் அவர்களால் அஸீஸ் அவர்கள் இன்றும் கண்ணியப்படுத்தப்படுகின்றமையும் எல்லோரும் அறிந்த விடயங்களாகும்.

இலங்கை நிர்வாக சேவையில் வடமேல் மாகாணம் புத்தளம் பிரதேசத்துக்கான உதவி அரசாங்க அதிபராக பொறுப்பேற்றது முதல் இன்றுவரை அவரது சேவை மெச்சத்தக்க வகையில் ஒரு பிரதேச செயலாளராக, மேலதிக அரசாங்க அதிபராக, அமைச்சுக்களின் செயலாளராக மக்களது நலன் கருதி தொடர்ந்து கொண்டிருக்கின்றமையை பெருமயையாக குறிப்பிட முடியும். இவ்வாறெல்லாம் தன்னலம் கருதாது சமூகப்பணியிலேயே தன்னை அர்ப்பணித்து சேவகம் செய்யும் அப்துல் அஸீஸ் எனும் முற்றத்து மல்லிகையின் வாசத்தை நாம் எல்லோரும் சுவாசித்தொழுக திடசங்கற்பம் பூணுவோம்.

இன்னும் எஞ்சியுள்ள காலங்களில் செயலாளர் அஸீஸ் அவர்களது சேவை சிறந்த முறையில் தொடர்வதற்கு இறைவனுடைய ஆசிகள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக!

**ஆசுகவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Postgratuate Convocation 2010**
**MA International Relation**

M.A - சர்வதேச உறவுகள் பட்டமளிப்பு விழா—BMICH, Colombo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்முக ஆளுமையின் சிகரம்

**பொன் செல்வநாயகம் B.A**
முன்னாள் கிழக்கு மாகாண இளைஞர்
சேவைகள் மன்ற பணிப்பாளரும்,
கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப்
பணியக தவிசாளரும்.
மட்டக்களப்பு

அட்டாளைச்சேனை எனும் அழகிய கிராமத்தில் உதுமாலெவ்வை கதிஜா உம்மா தம்பதிகளுக்கு அருந்தவப்புதல்வனாக அவதரித்து சிறுவயதில் இருந்து சிறந்த ஒழுக்கமும், சிறந்த பண்பும் கொண்டவராக வளர்ந்து ஆரம்பக்கல்வியை பிறந்த மண்ணிலே கற்று தேர்ந்து பெற்றோருக்கும் மற்றோருக்கும் பிரதேசத்திற்கும் நற்பெயரை ஈட்டித்தந்த ஜனாப். அஸீஸ் அவர்கள், இன்று கிழக்கு மாகாணம் முழுவதுமான முதலமைச்சின் செயலாளராக அரும்பணியாற்றும் வேளை அவரது 30 வருட அரச பணியின் மேன்மையினை நினைத்து எடுக்கும் இவ் நினைவு பாராட்டு மலருக்கு அவர் சிறப்பு கூற வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ச்சியுடன் கூடிய நன்றிகள்.

பாராட்டுக்கள் பாராட்டப்படவேண்டியவை மட்டுமன்றி, சமூகத்தின் தொடர் நல்வினைவுகளுக்கு அவசியமானவை. குழந்தைகளையும் சிறுவர்களையும் பாராட்டுவது அவர்களின் வளர்ச்சிக்கு உரமாகும். அவர்கள் பாராட்டுக்கள் மூலம் எண்ணக்கருக்களை உருவாக்கி வளர்ச்சி காண்பவர்கள், முதியோர்களை பாரட்டுதல் அவர்களின் மகிழ்ச்சிக்கு உதவுவதோடு அவர்கள் தங்களின் வாழ்க்கையின் தாக்கத்தை மீள் பரிசீலனை செய்ய உதவுவதுமாகும். அந்த வகையில் இவரது 30 வருட அரச பணியின் மதிப்பீடு மீள்பரிசீலினை செய்யப்படுவது சிறந்ததே.

அரச கடமை என்பது ஒருத்தருக்கு ஆண்டவனால் வழங்கப்படும் பெரும் கொடை. இக்கொடை சிலருக்கு 25 வருடங்களாகவும் பலருக்கு 30 தொடக்கம் 40 வருடங்களாகவும் தூய்மைச் சேவைக்கு வழங்கப்படுகின்றது. ஆண்டவனால் வழங்கப்பட்ட இக்கொடையினை நல்வழியில் திட்டமிட்டு நேர்மையாக செயற்படுத்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்டவர்களின் கடமையாகும். இந்தவகையில் ஜனாப். அஸீஸ் அவர்கள் அரச கடமையில் பல்துறைகள் ஊடாகவும் செயற்பாடுகள் ஊடாகவும் துணிந்து நேர்மையாக பணிகளை செயற்படுத்தியவர் என்று நான் துணிந்து கூறுவேன்.

***''வாழும் போது வாழ்த்தப்படுவது, வாழ்க்கையில் அவர்செய்த நல்ல சேவையின் பொருட்டே ஆகும்.''***

***''இருந்தாலும் நடந்தாலும் ஊர்சொல்ல வேண்டும், இவர்போலயாரென்று பெயர்சொல்ல வேண்டும்.''*** நாடே இவரைச் சொல்கின்றது.

நல்ல ஆசிரியராக, உதவி அரசாங்க அதிபராக, பிரதேச செயலாளராக, விஷேட ஆணையாளராக, மேலதிக அரசாங்க அதிபராக, மாகாண செயலாளராக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேரம், நேர்மை, திட்டமிடல், செயற்படுத்தல், இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, மொழியாற்றல், தொடர்பாடல் அத்தனையும் இவர் தம்வசம் கொண்டு அரச கடமையில் சேவையாற்றுபவர்.

**"இன்முகத்தோடு ஒருவரைப் பார்ப்பது சிறந்த தர்மம் ஆகும்.''** எனும் நபி மொழிக்கு ஏற்ப அரச கடமையில் மாத்திரமின்றி எல்லா இடங்களிலும் இன்முகத்தோடு ஆளுமையுடன் சேவை செய்பவர்.

உளவியலாளர்கள் ஆளுமையின் கூறுகளை இப்படியாக வகுத்துள்ளனர்.

| | |
|---|---|
| உறுதியான மனவெழுச்சி | – Emotional Stability |
| புறமுகமனத்தன்மை | – Extraversion |
| சிறந்த மனமுள்ள இயல்பு | – Openness |
| ஒத்துப் போகும் தன்மை | – Agreeableness |
| மனச்சாட்சிக்கு இணங்க செயற்படல் | - Conslientiousness |

இப்பன்முக ஆளுமையினை அரச கடமை, வாழ்க்கை போன்றவற்றில் திடமாக கடைப்பிடித்தவர் அஸீஸ் (SLAS-1) அவர்கள். இவரோடு பழகியவர்கள் அவரிடம் திகழ்ந்து கொண்டிருக்கின்ற நேர்மை செம்மை, சிரத்தை ஆகியவற்றை விளங்காமல் இருக்கமாட்டார்கள். இவரிடம் பேச்சு, எழுத்து, செயற்பாடு என்பன ஒரு செம்மையாக அவதானிக்க கூடியதாக இருந்தது. நேரிய சிந்தனையின் காரணமாக இவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மையான போக்கு காணப்படுகின்றது. அரச நிர்வாகத்தில் தவறு, குற்றம் தேடிப்பிடிக்க முடியாதளவு திட்டங்களும் செயற்படுத்தல்களும் மதிப்பீடுகளும் அமைந்து இவரிடம் காணப்பட்டது. எந்தவொரு காரியத்தையும் சிரத்தையுடன் செயற்படுத்தும் இயல்பு கொண்ட இவர். மானுட நேயத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பவர். அமைதியான பேச்சும் எதனையும் நிதானமாக அணுகும் தன்மையும், ஆழமான அறிவும், அன்பாகவும், பண்பாகவும் பழகும் தன்மையும் கொண்டவர்.

**''ஒரு சிறந்த மனிதன் உலகின் அனைத்து உயிர்களுக்கும் சிறந்த நண்பனாவான்''** என்று மகாத்மாகாந்தி கூறியதற்கு ஒப்பானவர்.

தன்னை நாடி வருபவர்கள் யாராக இருந்தாலும் இன்முகத்துடன் வரவேற்று, பிரச்சினைகளைக் கேட்டறிந்து உரிய பரிகார நடவடிக்கைகளை செய்வதில் இவருக்கு நிகர் இவரே. எனக்கு இவருடன் 2 விதமான துறைகளில் இணைந்து செயற்பட வாய்ப்பு கிடைத்தது. நான் கிழக்கு மாகாண இளைஞர் சேவை மன்ற மாகாணப் பணிப்பாளராக 1993இன் பின்னர் கடமையாற்றிய போது இவர் அப்போது அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக கடமையாற்றினார். இவருடன் இணைந்து இப்பிரதேசத்தில் இளைஞர் சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டேன். சுனாமி காலத்தில் மேலதிக அரச அதிபராக இருக்கும் போது கல்முனை கரையோர மாவட்ட இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் 1000 துவிச்சக்கர வண்டிகளை அவர்களின் மேம்பாட்டிற்காக கொடையாக வழங்கினோம். இச்சேவையின் பொருட்டு நாங்கள் இருவரும் நண்பர்களாக செயற்பட்டோம். தொடர்ந்தும் பல சேவைகளைச் செய்தோம். 2013 இன் பின் நான் கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியக தவிசாளராக அவரின் கீழ் செயற்பட்ட போது பாலர் கல்விக்காக பல தூய்மையான சேவைகளைச் செய்தோம். பாலர் கல்வியில் அக்கறை கொண்ட இவர் அவர்களின் கல்வி அபிவிருத்திக்காக அவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக பாடசாலை தோறும் விளையாட்டு விழாக்கள், வீதி நாடகங்கள், கண்காட்சி, கல்வி விழாக்கள் போன்றவற்றை செயற்படுத்தல் மூலம் கல்வியினை வளர்க்கலாம் என்று பாலர்கள் விரும்புவார்கள் என்று அறிவுரை வழங்குவார். அத்துடன் கிழக்கில் பாலகருக்காக ஒரே மாதிரியான பாடத்திட்ட நூலினை வெளிக் கொணர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என எங்களுக்கு ஆலோசனையும் வழங்கினார். இதனையும் இவருடன் இணைந்து செயற்படுத்தினோம். வெற்றியும் கண்டோம்.

30 வருட அரசபணி சேவை நிகழ்வு சிறப்புற நடைபெற வாழ்த்துவதோடு, குறுகிய காலத்தில் இடம்பெறவுள்ள ஏனைய பாராட்டு விழாக்களும் சிறப்புற நடைபெறவும் இவரது மக்கள் பணி மேலும் தொடரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

மேலும் இவரது சேவையினைப் பாராட்ட முன்வந்த மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும், ஏற்பாட்டாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




M.A பொது நிர்வாகம் பட்டமளிப்பு விழா – BMICH, Colombo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிண்ணியா அல்–மஜ்லிஸ் அஷ்ஷூரா தலைவரின் வாழ்த்து

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக கடமைபுரியும் ஜனாப் உதுமா லெப்பை, அப்துல் அஸீஸ் அவர்கள் அரச சேவையில் மூன்று தசாப்தத்தை பூர்த்தி செய்திருக்கும் காலப் பகுதியில் அன்னாரின் பணிகளைக் கௌரவித்து வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மிக அண்மைக் காலத்திலே தான் பொது நிருவாகத் துறையில் எமது சமூகம் கால் பதித்து வருகிறது. இந்நிலையில் இத்துறையில் அதி உச்சத்தில் இருக்கும் ஒருவராக அதுவும் முப்பது வருடங்களை நிர்வாகச் சேவையில் இவர் கடந்துள்ளது மிகவும் பெருமை கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

இவரது பொதுத்துறை நிருவாகக் காலம் உள்ளூர்ப் பிரச்சனை, சுனாமிப் பேரலை போன்ற பேரிடர்களும் அனர்த்தங்களும் தொடர்ந்த காலமாகும். இவ்வாறான காலப் பகுதியில் அரச பணிகளிலிருந்து மனிதாபிமானத்துடன் நடந்து பணியாற்ற வேண்டிய பொறுப்பு சகல தரத்தினருக்கும் இருக்கிறது. இவ்வாறு மனித நேயத்துடன் நடந்து கொள்ளும் அரசப் பணியாளர்கள் மக்களால் எப்போதும் மதிக்கப்படுவார்கள். இதற்கு செயலாளர் அஸீஸ் அவர்கள் சிறந்த உதாரணமாவார்.

இவரது சாந்த குணம், உயர்ந்த பண்பு, மற்றோரை வரவேற்று உரையாடும் பாங்கு, மனித நேயத்தோடு எல்லோரையும் மதிக்கும் பண்பு என்பன மறக்க முடியாதவைகள். புத்தளத்திலே உதவி அரசாங்க அதிபராக இருந்து வடக்கில் இருந்து புலம்பெயர்ந்த மக்களை குடியமர்த்துவதில் காட்டிய முனைப்பும், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இருந்த போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆயிரக்கணக்கான வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதில் காட்டிய அக்கறை, அரச அபிவிருத்தித் திட்டங்களை ஒருங்கிணைத்து, கிராமங்களையும் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வதில் காட்டிய தீவிரம் எல்லாம் ஞாபகமாக மக்களால் இன்றும் அசைப்போடப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனிதர் அஷ்ரப் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம் ஆகிய இரு பெரும் திட்டங்களுக்கும் பக்கபலமாக இருந்து இவற்றை நிறைவேற்றுவதில், இவரது இரவு பகல் பாராத உழைப்பும் பெரும் பங்கு வகித்தது எனலாம்.

இதனால் தான், ஒரு அரச அதிகாரியாகவிருந்தும் "மக்கள் தொண்டன்" எனும் சிறப்புப் பெயரைச் சூட்டி தலைவர் அஷ்ரப் இவரைக் கௌரவித்தார்.

ஒரு உயர் அரச அதிகாரியின் பணிகளை கௌரவித்து, ஒரு சிறப்பு மலரே வெளியிடப்படுகின்றது என்றால் அவரது மனிதநேயம் மிக்கப் பண்புகளே இதற்குக் காரணமாகும்.

உதுமா லெப்பை, அப்துல் அஸீஸ் என்ற உயர் உத்தியோகத்தர், அரச அதிகாரியாக முப்பது வருடங்களுக்கு மேலாக தான் பெற்ற கல்வி, நீண்ட அனுபவம் என்பன மூலம் எமது நாட்டுக்கும் குறிப்பாக நமது சமூகத்திற்கும் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும் எனப் பிரார்த்தித்து இவரது எதிர்காலம் சிறப்புற அமைய வாழ்த்துவதோடு, இச்சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதிலும் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**நன்றி**

ஏ.ஆர.எம். பரீத்
தலைவர்
கிண்ணியா மஜ்லிஸ்
அஷ்-ஷுரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முளையிலே தெரிந்த விளைபயிர்

**A.M.இப்றா லெவ்வை**
ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் (SLEAS)
பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறிக்கல்வி
தேசிய கல்வி நிறுவகம், மகரகம

எனது விருப்புக்குரிய மாணவன் அஸீஸ் அவர்களின் சேவையைப் பாராட்டி வெளியிடப்படும் "மலரில்" அவரைப் பற்றிய எனது நினைவுகள் சிலவற்றை நினைவுகூற கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

1975 காலப்பகுதியில் நான் கொழும்பில் இருந்து அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு ஒரு பட்டதாரி ஆசிரியராக இடமாற்றம் பெற்றுச் சென்றேன். அப்போது அங்கு எனக்கு வழங்கப்பட்ட நேரசூசியில், ஏழாம் வகுப்பிற்கும் சில பாடங்கள் போடப்பட்டிருந்தன. நான் அந்த வகுப்பிற்குச் சென்ற போது, எல்லா மாணவர்களும் உற்சாகத்துடன் என்னை வரவேற்றார்கள். அவர்களில் குறிப்பாக ஒரு மாணவன், சிரித்த முகத்துடன் மிகுந்த உற்சாகத்துடன் இருந்ததை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பின்னர், அம்மாணவனைப் பற்றி வினாவிய போது, அவரது பெயர் அப்துல் அஸீஸ் எனவும் அவரே வகுப்புத் தலைவர் (Monitor) எனவும் தெரிந்து கொண்டேன்.

மேற்படி வகுப்பு மாணவர்களுக்கு தொடர்ந்தேர்ச்சியாக A/L வகுப்பு வரை சில பாடங்களை கற்பிக்க நேர்ந்தது. 'கற்பித்தலில் மாணவர்களை விளங்கிக் கொள்ளல்' என்பது மிக முக்கியமானது. அந்த வகையில் எனது விருப்புக்குரிய மாணவன் அஸீஸ் அவர்களிடத்தில் பணிவு, தலைமைத்துவப் பண்பு, அவையை அடக்குதல், அவைக்கு அடங்குதல், பிரச்சினைகளை இன்முகத்தோடு எதிர்நோக்கல், எல்லாவற்றிலும் நல்லதை காணும் மனப்பாங்கு (Positive Attitude) ஆகிய சிறந்த குணாதிசியங்கள் மாணவப்பருவத்திலேயே காணப்பட்டன. எனது சேவைக் காலத்திலேயே அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய கல்லூரியில் மாணவத் தலைவர்கள் தெரிவு இடம்பெற்றது. அஸீஸ் என்ற மாணவனிடத்திலே காணப்பட்ட சிறப்பாற்றல்கள் காரணமாக அவரே சிரேஷ்ட மாணவத் தலைவராக (Senior Prefect) தெரிவு செய்யப்பட்டார். சிரேஷ்ட மாணவத் தலைவராக செயற்பட்ட காலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியில் அவரது நடத்தைக் கோலங்கள் ஏனைய மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருந்ததோடு பாடசாலை நிர்வாகத்திற்கும் உறுதுணையாக அமைந்தன. மட்டுமன்றி ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய காலப்பகுதியில் A/L வகுப்பில் கற்றுக் கொண்டிருக்கும் போது, ஆசிரியர் இல்லாத வகுப்புகளுக்குச் சென்று பாடம் நடாத்ததுவதிலும் ஈடுபாடு காட்டினார்.

G.C.E.O/L பெறுப்பேற்றின் அடிப்படையில் A/L விஞ்ஞானப் பிரிவில் கற்பதற்கு தகைமை பெற்றிருந்தும் கலைப் பிரிவில் கற்பதற்கே விரும்பினார். ஏன் என வினவிய போது கலைப்பட்டதாரியாகி, இலங்கை நிருவாக சேவைக்கு தெரிவாக வேண்டும் எனக் கூறினார். இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக வர வேண்டுமென்று இலட்சியமும், அவாவும் அவரது மாணவப் பருவத்திலேயே முளையிட்டிருந்ததை என்னால் உணரக்கூடியதாக இருந்தது. அவரது கனவு பலிதமாகி இலங்கை நிருவாக சேவைக்கு தெரிவான போது அவருக்கு கற்பித்த ஓர் ஆசிரியன் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்தேன்.

**"வாழ்க்கையில் ஒருவரது உயர்ச்சியினை தீர்மானிப்பது அவரது உளச்சார்பல்ல, உளப்பாங்கே"** என்பதை குறிக்கும் ஒரு பிரபல்யமான கூற்று ஆங்கிலத்தில் உண்டு.

"It is yours attitude, not your aptitude, which determines your attitude in life"

இக்கூற்றுக்கு அமைவாக அஸீஸ் அவர்கள் தனது மாணவப் பருவத்திலேயே உளச்சார்பும், உளப்பாங்கும் ஒருசேரப் பெற்றவராக காணப்பட்டார். அந்த உயரிய குணவியல்பே அவரை வாழ்க்கையில் உயர்ச்சிக்கு இட்டுச் சென்றது என்றால் அது மிகையான கூற்றாகாது. அவ்வாறே

**"கற்றல் இறைவனால் அளிக்கப்பட்டது, பணிவாக இரு,**
**புகழ் மனிதனால் அளிக்கப்பட்டது, நன்றியுள்ளவனாக இரு"**

என இடித்துரைக்கும் பழமொழியும் ஆங்கிலத்தில் உண்டு.

**"Talent is god given, be humble, fame is man given, be thankful"**

இன்று இப்பழமொழிக்கு இலக்கணமாக திகழும் எனது மாணவன் அஸீஸ் அவர்கள் மேலும்


**'நெடுந்தூரம் செல்ல வேண்டும்,**
**நிறையப் பணி ஆற்ற வேண்டும்'**

எனப் பிரார்த்தித்தவனாக நிறைவு செய்கிறேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**General Convocation - University of Peradeniya**
**1986**

B.A - சிறப்புப் பட்டதாரியாக (பேராதனைப் பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிமனித குணங்களால் ஆளுமைபெற்ற நிருவாக சேவை அதிகாரி அஸீஸ் !

**கலாநிதி. றமீஸ் அப்துல்லா**
மொழித்துறைப் பேராசிரியர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

1990கள் நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலம். அப்போது தனது பட்டமேற்படிப்புக்காக அஸீஸ் அவர்கள் பேராதனைக்கு வந்து போகிறபோது அவரோடு நெருக்கமாக பழகுகிற சந்தர்ப்பம் கிடைத்தது. எனது உறவினரும் மற்றுமொரு நிர்வாக சேவை அதிகாரியுமான அஷ்ஷேக் எம்.ஐ.அமீர் முதலானவர்களுடன் தான் அஸீஸ் பேராதனைக்கு வந்தார். அமைதி, புன்முறுவல் என்பவைதான் அஸீஸ் அவர்களின் மிகப்பெரிய ஆளுமை. அந்த அற்புதமான சுபாவம் அவரை இன்றும் இனிய மனிதராகப் பேசுவதற்கு சந்தர்ப்பத்தைத் தந்திருக்கிறது.

இலங்கைக்கு வியாபாரிகளாகவே வந்த முஸ்லிம்கள் பின்னர் சமூக, கல்வி, அரசியல் துறைகளிலும் விழிப்புணர்ச்சி பெற்றனர். அதேநேரம் வடக்கு கிழக்கில் வாழ்கிற தமிழ்பேசும் சமூகத்தில் யாழ்ப்பாணத்தவர் கல்வி ரீதியிலும், நிர்வாகம் மற்றும் நீதித்துறையிலும் முன்னோடிகளாக இருந்திருக்கிறார்கள். பிற்பட்ட காலத்தில் முஸ்லிம்களும் இத்துறைகளில் தனியான அடையாளங்களைப்பெற்றுக் கொண்டனர். அவ்வகையில் இலங்கை சிவில் சேவை அதிகாரிகளாக இருந்த ஏ.எம்.ஏ.அஸீஸ், மக்பூல், ஹபீப் மொஹமட் முதலானவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். பின்னர் ஏற்பட்ட இனநெருக்கடிக் காலத்தில் இதில் ஓர் இடைவெளி இருந்தது.

பின்னர் இலங்கை நிருவாக சேவையில் கிழக்கிலங்கையிலிருந்து சில இளைஞர்கள் முன்னணி வகிக்கத்தொடங்கினர். அவ்வகையில் முதல்வராக வந்தவராக கணிக்கத்தக்கவர்தான் யு.எல்.ஏ.அஸீஸ் அவர்கள். அட்டாளைச்சேனையில் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்ற இவர் இந்தப் பிராந்தியத்தின் உயர் பதவியொன்றில் வீற்றிருக்க வந்தமை அட்டாளைச்சேனை மக்களுக்குக் கிடைத்த மிகப்பெரும் கௌரவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பெற்றுத் தந்த அஸீஸ் அவர்களை அந்த மக்கள் பாராட்டுவது மிக்க மகிழ்ச்சி தருகிற விசயமாகும். அதுமாத்திரமன்றி இந்தப் பாராட்டோடு கிண்ணியா மக்களும் இணைந்து கொள்வது அவரது பரந்த மேன்மையான சமூகக் கடன்மிக்க சேவைக்குக் கிடைத்த பெரும் அங்கீகாரமாகும்.

யு.எல்.ஏ.அஸீஸ் அவர்கள் நிர்வாக சேவைக்கு வந்த காலம் மிக முக்கியமானதாகும். 1990களிலிருந்து வடகிழக்கில் தமிழ்பேசும் சமூகம் மிக நெருக்கடிக்குட்பட்டிருந்தது. எனவேதான் அந்தக்கால கட்டத்தில் அஸீஸ் அவர்களின் பணி உன்னதமாகப் பேசப்பட்டது. அவர் இந்த நிருவாகத்துறைக்கு வந்து வட பிரதேசத்து முஸ்லிம்களை புத்தளம் பிரதேசத்தில் குடியேற்றுவதில் மிக முக்கிய பங்காற்றியிருக்கின்றார். இவ்வாறான பிரச்சினைகள் நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும் அதிர்ச்சி தருகின்ற புதிய அனுபவமாகும். இவற்றிற்கு இடையில் ஒரு நிருவாக சேவை அதிகாரியாக செயற்படுவது மிகக் கஷ்டமானதாகும். அக்காலத்தில் தான் அவர் தன்னை ஒரு நல்ல நிருவாக சேவை அதிகாரியாக புடம்போட்டுக்கொண்டார்.

அதேபோன்று தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம் முதலானவற்றின் உருவாக்கத்தின் போது இந்தப் பிரதேசத்தின் பிரதேச செயலாளராக இருந்து முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ர∴ப் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டார். மேலும் அட்டாளைச்சேனை தேசிய மீலாத் விழா கொண்டாடப்பட்ட போது இப்பிரதேச சமூக, சமய, கலாசார, பௌதீக அபிவிருத்தியில் ஆக்கபூர்வமான பங்களிப்பினை நல்கினார்.

அம்பாறை மேலதிக அரசாங்க அதிபராக இருந்த போது இம்மாவட்ட மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட சூழலில் அவர்களின் மீள் வாழ்வு விடயத்திலே மிக அக்கறையோடு செயற்பட்டார். இந்த நிலைமையிலிருந்து கிழக்கு மாகாண அமைச்சுக்களினதும் முதலமைச்சரினதும் செயலாளராக செயற்பட்ட காலங்களில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் மிக முக்கிய பங்காற்றியவராக அவரை இணங்கான முடியும். ஆனால், இவை எல்லாமே இவரின் தொழில் நிலைப்பட்ட பணிகளாயினும் அவரைப் பாராட்டுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

வடகிழக்கில் நிலவிய யுத்த அவலங்கள், இனமுரண்பாடுகள் இவற்றிற்கு மத்தியிலே இன, மத, பேதமற்ற ஒரு அதிகாரியாக அவர் செயற்பட்ட விதமும் அதேநேரம் தலைவர் அஷ்ர∴ப் அவர்கள் இந்தப்பிரதேசத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திகளில் அக்கறைப்படும் போது அதற்கு மிகப்பெரும் துணையாக இருந்து செயற்பட்டமையும் அவருக்கு மிக முக்கிய பெறுமானத்தைப் பெற்றுக் கொடுத்தது.

அதேபோன்று கிழக்கு மாகாணத்தின் மிக முக்கிய பதவிகளில் இருந்து அவர் செயற்படுகிற போது தமிழ் முஸ்லிம் மக்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொண்டமையும் அவரை இன்னுமொருபடி மேலே உயர்த்தியது. இவை எல்லாவற்றிற்கும் காரணமாக அமைந்தது அவரது தனிமனித குணங்கள்தான்.

பொறுமை, புன்முறுவல், அமைதி, நிதானம், இங்கிதமான உரையாடல் இவை ஒரு நல்ல நிர்வாக சேவை அதிகாரியை நமக்குப் பெற்றுத்தந்தது. அவர் இத்துறையிலிருந்து ஓய்வு பெற்றாலும் இந்த சமூகத்திற்கு உன்னதமான பணியினை செய்யக்கூடிய ஒரு பிரஜையாக என்றும் இருப்பார். அட்டாளைச்சேனை, கிண்ணியா பிரதேச மக்கள் மாத்திரமன்றி இந்த கிழக்கு மாகாண மக்கள் அனைவரும் அஸீஸின் சேவையால் பெருமை பெறுகின்றனர். இவர் போன்ற அதிகாரிகள் நமக்கு வாய்க்கப்பெற வேண்டும். அவருக்கு என்றும் நமது பாராட்டுக்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடுகள் வந்தார்கள்

**- சோலைக்கிளி**

நான் பட்டிருக்கும் கடனை கொஞ்சமேனும் திருப்பிக் கொடுப்பது போல் இந்த வரிகளை நான் எழுதுகிறேன். வரி எழுதிக் கடன் தீர்ப்பவன் கவிஞன் மாத்திரம்தான். அவனது பொருள், பண்டம், எல்லாம் வரிகள் தான். நான் காரியாலயம் என்ற தோட்டத்தில் ஒரு செடியாக முளைத்திருந்த போது அந்தத் தோட்டக்காரனிடம் நான் பட்ட கடனுக்காக இந்த இரவில் விழித்திருந்து எழுதுகிறேன். என் வரிகளில் நிலா நிற்கும். நிலா குளிர்ச்சியையும், கூதலையும் தான் விரும்பும்.

மனதில் எல்லோரும் இடம் பிடிப்பதில்லை. எல்லோரையும் எனது மனதில் சாய்த்துக் கட்டி வைக்க எனது மனது ஒரு மாட்டுத்தொழுவமும் அல்ல. நான் புல்லுடனும் புண்ணாக்குடனும் புளங்குபவனும் அல்ல.

நிலாவை வானம் எடுத்துவைப்பதைப் போலதான் நானும் சிலரை எடுத்துவைக்கிறேன். அப்படி எடுத்துவைத்திருக்கும் ஒருவருக்காக இந்த இரவில் விழித்திருக்கிறேன். என் பேனைப் பயணம் இனிதே இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்றிரவு எனது மனைவி தனிமையில் தான் தூங்குகிறாள். நான் எனக்குள் இருக்கும் குருவிகளைக் கலைத்துக் கொண்டிருக்கிறேன். அவை இங்கு வரிகளாகி கலகலக்கின்றன. மனதின் குருவிகள் வேறெங்கும் போகாது. காகிதங்களில் தான் உறையும். காகிதம் குருவிகளுக்கு பச்சை மரம். என் நினைவின் குருவிகளுக்கு.

யூ.எல்.ஏ.அஸீஸ் என்கின்ற ஒரு நிர்வாகத்தனுக்காக இந்த பால்குடம் தழும்பி வழிந்துக் கொண்டிருக்கிறது. வானத்தில் நிலவும் பூரித்து வழிகிறது. என் கடன் சிறுகத் தீருகிறது. இன்னும் எவ்வளவோ இருக்கிறது. அவர் எனக்காக இதுவரை வீசிய புன்னகைக்காக மட்டும் கடன் இறுக்க நான் வெளிக்கிட்டாலும் இது காணாது, எத்தனை நாளைக்கு நான் விழித்திருந்து எழுதினாலும், எத்தனை நாட்கள் என் மனைவி தனித்துத் தூங்கினாலும் அது சிறுகத்தான், பெருங்கடன், அவருக்கும் எனக்குமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை சிலருக்கு இறைவன் கொடுத்த மலர். இந்த மலரால் காலில் ஏறிய முள்ளைக் கூடப் பிடுங்கி விடலாம். புன்னகை பூக்காத முகம் தாமரைப் பூ பூக்காத தூர்ந்த குளம். எருமை மாடுகளும் நாடி வராது. இப்படி முகம் வைத்திருந்த நிர்வாகிகளையும் நான் சந்தித்திருக்கிறேன். அவர்கள் தங்களின் புன்னகைகளை தங்கள் கச்சைகளுக்குள் ஒளித்து வைத்திருப்பார்கள். அவர்கள் தங்களின் ஆசனங்களில் இருந்தால் மரக்கிளையில் "மந்தி" இருப்பதைப் போன்று இருக்கும். தன் புன்னகையால் "முள்" எடுத்த இந்த அஸீஸ் என்கின்ற அன்பு நிறையோன் தன் ஆசனத்தில் இருந்தாலே காற்றடிக்கும். அப்போது தான் விரிந்த மலர் போன்று ஒரு காட்சி தென்படும். ஆற்றில் ஓடும் மீனைப்போல அவர் குளிர்ச்சியாகவும், தூய்மையாகவும் இருப்பார்.

எங்கள் காரியாலயம் என்கின்ற தோட்டத்தில் திரிந்த சில பிசாசுகளை தன் புன்னகை கொண்டே கழிப்புக் கழித்தவர் அஸீஸ் சேர் அவர்கள். புன்னகை ஒரு மந்திரமல்லவா! இவருக்கு புன்னகை ஒரு "திருக்கைவாலும்". புன்னகையாலேயே சிலருக்கு அடிப்பார். தடித்து எழும்பாது. மணத்து நோகும்.

சிலருக்கு ஊழியர்கள் எப்போதும் அவர்கள் கூப்பிட்டால் கொக்கரிக்க வைத்திருக்கும் கோழிகளைப் போல அவர்கள் "கல்" எடுத்து துரத்தினால் கோழிகள் ஓட வேண்டும். பாழ் வளவா சிலர் நிர்வகிக்கும் காரியாலயங்கள்! எப்போதும் போர்க் கோழிகள் வீரிட்டுக் கொண்டே இருக்கும்.

நான் இவ்வாறானவர்கள் சிலரது மேசைகளில் "எச்சம்" அடித்திருக்கிறேன்.

அஸீஸ் அவர்கள் எங்களை உள்ளங்கைக்குள் வைத்திருந்தார். "மாடுகள் வந்தார்கள்" என்று கடிதம் எழுதிய எழுதுனனைக்கூட அறுவைக்குக் கொடுக்காமல் திருத்தி தமிழ்த் தீனி போட்டு செப்பமாக்கி எடுத்தார்.

இவரிடம் எப்போதும் அறுவைக்குக் கோழிகள் இல்லை.

ஒரு நிறுவனத்தை ஆளுவதற்கு கல்வி மாத்திரம் ஒருவனுக்கு போதாது. அது கடையில் வாங்கும் சரக்கு. அடக்கம், ஒழுக்கம், ஆளுமை, பண்பு என்கின்ற பல மசாலாக்களும் வேண்டும். இவைகள் இல்லாத ஒருவன் மலடனைப் போன்றவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸீஸ் சேர் "மலடன்" இல்லை.

ஒரு "குத்துச்சண்டை" வீரனைப் போல "நியாஸ்" என்ற ஒரு சாரதி இருந்தார். அவர் ஒவ்வொரு நாளும் இவரைக் கொண்டு வந்து வாகனத்தில் இருந்தும் இறக்கி விடும் போது, இரக்கத்தையும் பனியையும் கலந்து செய்த மனிதனை இறக்குவதைப் போல இருக்கும். அந்த வாகனம் வானத்தைப் போல நீல நிறத்தில் இருக்கும். அது இப்போது எங்கே இருக்கிறதோ!

நாங்கள் வாழ்ந்த காரியாலயம் ஒரு குடும்பத்தைப் போன்றது.

நாமெல்லாம் கையைக் கழுவுவது தான் சுத்தம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படியானால் நமது கையும் கரண்டி, அகப்பையை ஒத்தது தான். கைக்கு இன்னும் ஒரு சுத்தம் இருக்கிறது. அந்தச் சுத்தம் மிக்க நிறைந்தவர் எனது அன்பான அஸீஸ் சேர்.

இந்தச் செவ்வரத்தை பூத்து சும்மா உதிராது. அஸீஸ் சேரைப் பற்றி நினைத்தால் பூப்பூவாய் உதிர்கின்றன.

இப்படி ஒன்றை எழுதித்தர வேண்டுமென்று "பாஸித்" என்பவர் ஒரு நாள் நானும் + நானும் இருவருமாக வரும் போது, எங்கள் இரண்டு சில்லு வண்டியை கௌவ வரும் பூனையைப் போல பின்னால் வந்தார். கூப்பிட்டு இருப்பாட்டியதும் கையில் இருந்த நெடிய உறையைத் தந்தார். இது மறைந்து கனகாலம் ஆகிறதே! இதன் சமுதாயம் அழிந்துக் கொண்டிருக்கிறது. இப்போது காதலிப்பவளும் நெடிய உறையைத் தேடுவதில்லை. தன் எண்ணங்களை எழுதி தன் கனவில் வண்ணம் தீட்டுபவனுக்கு கொடுக்க, "கக்கூசுக்குள்" இருந்து காதுக்குள் ஒன்றை வைத்து குசுகுசுத்து தன் காதலை நகர்த்திக் கொள்கிறாள். நாம் நீண்ட தூரம் நகர்ந்து விட்டோம். ஆனால், நொண்டியானோம்!. மூக்கிற்கும் இப்போது தொட்டில் கட்டுகிறோம். நமது மூக்கும் இப்போது சின்னப் பிள்ளையாகி விட்டது. ஓ..... காலமே! கொஞ்சம் கனிந்து இந்த அஸீஸ் சேரின் விழாவை நடத்திவை.

ஒழுக்கத்தில் மிகவும் ஓம்பிய ஒரு மகான்! அப்போது எத்தனையோ கொக்குகள் பறந்தன எங்களுக்குள். ஒரு "செம்பட்டைக் கொக்கு" சிரித்துச் சிரித்தே நம் சீவியத்தைத் தின்றது. ஒரு கொக்கிற்கு இவர் கண்ணிவைத்த கதை கிடையாது.
காலமே நீ கொஞ்சம் என் கதை கேட்டு நட!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ ஆளுநர் அநுராதா யஹம்பத் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோருடன் கிழக்கு மாகாண சுற்றுலாப்பணியகத்தின் சுற்றுலாக் கையேடு வெளியிடும் நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அஸீஸ் சேர்

**U.L. Niyas, SLAS, SLFS**
Head of Chancery and Counsellor – SLHC/Islamabad, Pakistan
B.A(Hons.), M.A
Former DS/Addalaichenai & Pottuvil

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

***"Strive not to be a success, but rather to be of value" - Albert Einstein***

தனது நீண்ட கால அரச சேவையை முடித்துக்கொள்ளவிருக்கும் மதிப்பிற்குரிய அஸீஸ் சேர் அவர்ளது சேவைப் பாராட்டு வெளியீட்டில் இந்த செய்தியைப் பதிவுசெய்வது பெருமையாகவும் கௌரவமாகவும் இருக்கிறது. அஸீஸ் சேர் மிகச் சாதாரண தளத்தில், ஒரு தொழில் மையப் போக்கில் இவ்வளவு காலமும் சேவையாற்றியிருந்தால் இப்படியான ஒரு முயற்றியின் தேவைபற்றி நிறையக் கேள்வி எழுப்பியிருக்க முடியும். ஆனால், அவரது இயங்குமை, எல்லோருக்கும் பழக்கப்பட்ட ஒரு சாதாரண பரப்பைத் தாண்டி மிகவும் விரிவானது. தனது சேவைக்காலத்தை ஒரு 'வேலை நாட்குறிப்பேட்டு' த் தொகுப்பிலிருந்து தூரப்படுத்தி, 'பெறுமானம்' மைய்யப்பட்ட பார்வை- அணுகுமுறையோடு தன்னையும் தனது வேலைகளையும் தன்னைச் சாந்தவர்ளையும் வழிப்படுத்தியதன் அடிப்படையில் அஸீஸ் சேர் வேறுபட்டவர். இந்த வெளியீட்டின் நியாயத்தை அங்குதான் காணமுடிகிறது.

மிக வேறுபட்ட பின்னணியிருந்து, முதற்தடவையாக ஒரு நிருவாக அதிகாரியாக அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளராக 2004ஆம் ஆண்டு நான் பொறுப்பேற்றுச் சென்றபோது, எனது முதலாவது தலைமை அதிகாரியாக இருந்தவர் அஸீஸ் சேர் என்பது எனக்கு மிகப் பலமான ஒரு அடித்தளத்தை அமைத்துத் தந்தது. சக அதிகாரிக்கான அங்கீகாரத்தை வழங்குவதும், அவர்களது அரச சேவைப்பயணத்திற்கான வழிகாட்டல்களை அமைத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவதும், மிக முக்கிய இடங்களில் தனது உதவி அதிகாரியை தனக்கு நிகராக அறிமுகப்படுத்திவைப்பதும் ஒரு சாதாரண மனிதனிடம் காண்பது மிக அரிது. ஆனால், அஸீஸ் சேரிடம் இருந்து அது எனக்குப் போதுமானளவு கிடைத்தது. எனது 18 வருட கால நிருவாக, வெளிநாட்டு சேவைகளில் தவிர்க்கமுடியாத அடித்தளங்களாக அவருக்குக் கீழே வேலைசெய்த அந்தநாட்கள் மாறின.

எப்போதுமே மனிதர்களைப் பெறுமானங்களோடு பார்க்கவேண்டும் என்பது அவரது சிந்தனையாக இருக்கும். தான் அமர்ந்திருக்கும் கதிரைக்கு வெளியில் இருக்கும் பரப்பில் அவரது பார்வையின் வீச்சு பதிந்திருச்கும். மக்களையும் பிரச்சினைகளையும் விரிந்த பார்வையூடாக் கையாளவேண்டும் என்ற போக்கைக் கடைசிவரைக் கடைப்பிடித்தவர் அவர். சிறிய எல்லைக்கோடுகளால் அவரது செயல் வீச்சின் பரப்புகளைக் கத்தரிக்க முடியவில்லை. அதனால் அஸீஸ் சேர் அவர்கள் எதிர்கொண்டவைகளும் இழந்தவைகளும் இன்றுவரை ஏராளம்.

"A great man shows his greatness by the way he treats little man"
– Thomas Carlyle

அஸீஸ் சேர் தனது முழு சேவைக் காலத்தையும் மக்கள் தளம் (People based) சார்ந்ததாக அமையும்படி பார்த்துக் கொண்டவர். ஒரு AGA ஆக, வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களது அவலங்களைச் சுமப்பதிலிருந்து அவரது நிருவாக சேவை ஆரம்பித்தது. அன்றிலிருந்து இன்றுவரை மக்கள் நலன் மையப்பட்டதான, அவர்களது வாழ்வியல் பிரச்சினைகளோடு பின்னிக்கிடக்கின்ற பொறுப்புகளே அவருக்கு தொடர்ந்தும் வாய்த்து வந்துள்ளமை ஒரு விஷேட அம்சம். கிழக்கு மக்களின் ஏறத்தாள 4 தசாப்த ஏற்ற இறக்கங்கள், சவால்கள், அச்சம் நிறைந்த நாட்கள், அழிவுகளும் அபிவிருத்திகளும் குவிந்த காலங்கள்... என எல்லாப் பரிமாணங்களினூடாகவும் பயணித்த அந்த பன்முகத் தன்மைதான் அஸீஸ் சேர் அவர்களது ஆளுமையின் மிகப் பெரிய பலம்.

அவரது எண்ணம் எப்போதும் 'நசுங்கிய குரல்' தட்டு (week and voiceless mass layer) மக்களின் திசையில் குவியம் கொண்டிருக்கும். தனக்குக் கிடைத்த எந்த சந்தப்பத்திலும் சபையிலும் குரல் அற்றவர்களுக்குக் குரலாக ஒலிப்பது அவரது ஆளுமைகளில் ஒன்று என அடையாளப்படுத்தப்பட்டார். வேர்க்கால் மனிதர்களை (Root-mass) உயர்தட்டு மட்டத்திலும் கையாளும் அவரது இயல்பின் பின்னணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பெருந்தன்மை-ஆளுமை என்பது எப்போதும் குத்திட்டுத் தெரியும்.

'It is not what he has or even what he does which expresses the worth of a man, but what he is'- Hentry-Frederic Amiel

கிழக்கு மக்களின் அந்த 4 தசாப்த வாழ்வியல் வரலாற்றின் ஒரு தொகுப்பாக வலம்வரும் அஸீஸ் சேர் தனது அனுபவங்களை இந்த Digital Generation க்கு நகர்த்தித் தரவேண்டும். பன்முகக் தளங்களில் இந்த சமூகத்தைப் பார்க்கக்கிடைத்த அவர், அதன் மீதான தனது பார்வைக் கோணத்தை முறையாகப் பதிவுக்குக் கொண்டுவரவேண்டும். ஒற்றைப் பரிமாண வட்டகைக்குள் தம்மைச் சிறைப்படுத்திக் கொண்டவர்களால் மக்களுக்குக் காட்டப்பட்ட குறும்பார்வை-வழிப் பயணங்களின் ஆபத்துக்கள் பற்றி அவர் சுதந்திரமாக நிறையப் பேசவேண்டும். இந்த தொகுப்பினூடாக ஓரளவிற்கேனும் அந்த ஆரம்பம் சாத்தியமாகலாம்.

அஸீஸ் சேர் அவர்களது நீண்ட ஆயுளுக்காகப் பிரார்த்திக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதுமா லெவ்வை அப்துல் அஸீஸ் (SLAS-Spcl.) அவர்கள்பற்றி......**

தேசபந்து S.L.முஹம்மத் ஹனிபா (**S.L.A.S**)
பிரதேச செயலாளர்,
சம்மாந்துறை.

ஜனாப் U.L.A.அஸீஸ் சேர் அவர்களின் 35 வருடங்களுக்கு மேற்பட்ட அரச சேவைக் காலத்தில் 30 வருடங்களை இலங்கை நிருவாக சேவையில் பூர்த்தி செய்துள்ளமையை பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் KTV ஊடக நிறுவனத்தினரால் வெளியிடப்படவுள்ள பாராட்டு மலருக்கு அவருடனான சில ஞாபகப் பதிவுகளை பகிரக்கிடைத்தமையை எனக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பமாகக் கருதுகிறேன். அதுவும் நான் அரச சேவையில் 30 வருட காலத்தைப் பூர்த்தி செய்யும் இத்தருணத்தில் இவ்வாறானதொரு வாய்ப்புக்கிடைத்தமையை எண்ணி இறைவனைப் புகழ்வதுடன் ஏற்பாட்டுக் குழுவினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு துடிப்புள்ள வாலிபராக, முற்போக்கு சிந்தனையாளராக, சமூகசேவை ஆர்வலராக, மார்க்கப்பற்றுமிக்க ஒரு பண்பாளராக மேலும் நான் பிறந்து வாழ்ந்த அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய பிரதேசத்தில் தனது நண்பர்களுடன் அடிக்கடி சஞ்சரிக்கும் ஒருவராக என்னால் அடையாளப்படுத்தப்பட்ட அஸீஸ் சேர் அவர்கள் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக கடமையேற்ற 1993ம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு பொது எழுதுவினைஞராக அவ்வலுவலகத்தில் கடமைபுரிந்த எனக்கு சுமார் 08 வருட காலம் அவரோடு தொடர்ச்சியாகப் பணியாற்றக்கிடைத்தது.

அஸீஸ் சேர் அவர்களுடன் ஒன்றிணைந்து பிரதேச செயலகத்தின் உள்ளக மற்றும் வெளிக்களப் பணிகளில் ஆத்மார்த்தமாகப் பயணித்த குழுவினரில் நானும் ஒருவன் என்ற நினைவுகளுடன் அன்னாரதும் அவரைப் போன்றவர்களது வழிகாட்டல் மற்றும் ஈர்ப்புக் காரணமாக அதே பாணியில் ஒரு பிரதேச செயலாளராக, மக்களது தேவைகளை உணரக்கூடிய மனோநிலையுடன் பணியாற்றக் கிடைத்துள்ளமையை பெருமிதத்துடன் கூறக்கூடியதாகவுள்ளது. என்னைப்போன்று அவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகர்சிக்கப்பட்டவர்கள் பலர் இன்று பொதுத் துறையில் பல்வேறு மட்டங்களில் பிரகாசிக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அல்-ஹம்துலில்லாஹ்.

ஜனாப் அஸீஸ் சேர் அவர்கள் ஓர் அதிகாரியாக மாத்திரமன்றி அட்டாளைச்சேனை மண்ணின் நேசராக ஊர் நலனில் அக்கறைகொண்டு பல பொதுப் பணிகளிலும் கல்வி மேம்பாட்டுச் செயற்பாடுகளிலும் தனது இளம்பராயத்திலிருந்து ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஈடுபட்டு வருகின்றமை இன்றைய இளைஞர் சமூகம் அறிந்து பின்பற்றவேண்டிய சிறந்த வழிகாட்டலாகும். அவ்வாறே அட்டாளைச்சேனை மண்ணுக்கு பெருமைசேர்த்த மூத்த நிர்வாக சேவை அதிகாரிகள் என்ற வரிசையில் அஸீஸ் சேர் அவர்களுடன் அல்-ஹாஜ் A.L. இப்றாலெவ்வை சேர் அவர்களையும் நினைவுகூர்வது இவ்விடத்தில் பொருத்தமானதாகும்.

அட்டாளைச்சேனைக் கிராமத்தில் மார்க்கப்பற்றும் கடின உழைப்பும் அனைவரோடும் அன்பாகப்பழகி அரவணைத்து வாழும் பண்புமிக்க ஒரு குடும்பப் பின்னணியுடன் தனது வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்த அஸீஸ் சேர் அவர்கள் பல சவால்களுக்கு மத்தியில் கல்வி கற்று தனது அயராத முயற்சியின் காரணமாக பல பட்டங்கள் பதவிகளுடன் இன்று ஒரு மாகாண அமைச்சின் செயலாளர் என்ற உயர் பதவிவரை உச்சத்தைத் தொட்டுள்ளார்.

தான் கல்வி கற்கும் காலத்தில் தனது பாடசாலையின் அபிவிருத்தி நலன் கருதி அக்காலத்தில் நிலவிய முறைகேடு ஒன்றைக் கண்டித்து அநீதிக்கெதிராக ஒருங்கிணைந்த போராட்டமொன்றை நடாத்துவதில் மாணவர் குழுவை தலைமைதாங்கி வழிநடாத்தியதுடன் தனதும் தன்னுடன் இணைந்து போராடிய சக தோழர்களின் எதிர்காலத்தையும் அடகுவைத்து அதில் வெற்றிகண்டமை அன்னாரை பொதுப் பணியின்பால் சிறுபராயத்திலேயே அடையாளப்படுத்திய நிகழ்வாகக் கருத முடியும்.

தனது மாணவப் பருவத்தின்போதும் பின்னரும் அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியின் அபிவிருத்திப் பணிகளிலும் அங்கு கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுச் செயற்பாடுகளிலும் 'கல்வி வட்டம்' என்ற ஓர் அமைப்பை உருவாக்கி தன்னோடு ஆர்வமுள்ள தனது நண்பர்கள் பலரையும் இணைத்துக்கொண்டு திறம்பட வழிநடாத்தி பல சாதனைகளுக்குக் களம் அமைத்தவராவார். பிற்பட்ட காலப்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வமைப்பு அட்டாளைச்சேனைப் பிரதேச கல்வி வளர்ச்சியில் ஆற்றிய பங்களிப்பு அபரிமிதமானது.

அண்மைக்காலத்தில் பல புலமையாளர்களுடன் ஒன்றுசேர்ந்து 'அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகம்' என்ற ஓர் அமைப்பை தோற்றம்பெறச் செய்து இப் பிரதேச கல்வி, கலாசார, பொருளாதார மேம்பாட்டுப் பணிகளை ஆர்வத்துடன் செய்து வருகின்றமையும் இளைஞர்களை அதன்பால் ஆர்வமூட்டி ஒருங்கிணைத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அட்டாளைச்சேனையில் பெயர் பெற்ற பல விளையாட்டுக் கழகங்களின் போசகராகவும், ஆலோசகராகவும் செயற்பட்ட அஸீஸ் சேர் அவர்கள் தான் பிரதேச செயலாளராக பதவியேற்ற புதிதில் அன்றைய அமைச்சர் மர்ஹூம் A.R.M.மன்சூர் அவர்களதும் அட்டாளைச்சேனையின் அரசியல் மற்றும் சமூக மட்ட அமைப்புகள், தலைமைகள் அனைவரையும் ஒருங்கிணைத்து தீர்க்கதரிசன சிந்தனையுடன் பொருத்தமான இடமொன்றை இனங்கண்டு ஆரம்பித்துவைத்த விளையாட்டு மைதானம், தொடர்ச்சியாக அபிவிருத்திசெய்யப்பட்டு இன்று கிழக்கு மாகாணத்தில் பெயர்கூறக்கூடிய ஒரு விளையாட்டு மைதானமாகக் காணப்படுவதும் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகள் பல தடவைகள் அதில் நடைபெற்றுள்ளமையும் அன்னாரது சிந்தனை வெளிப்பாட்டின் பிரதிபலிப்பாகக் கூறமுடியும்.

அஸீஸ் சேர் அவர்கள் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய காலகட்டம் யுத்த சூழ்நிலை நிலவிய பயங்கரமானதும் மக்களது தேவை அதிகரித்துக் காணப்பட்டதுமான ஒரு மாறுபட்ட காலப்பகுதியாகும். பெருந் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ர∴ப் அவர்களின் அரசியல் செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட நிலையில் வினைத்திறனாகவும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றி அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாபி, திராய்க்கேணி, ஆலங்குளம் போன்ற பிரதேசங்களின் துரித அபிவிருத்திப் பணிகளை செயற்படுத்துவதில் இரவு பகலாக முன்னின்று உழைத்தார்.

இதன் பயனாக அஷ்ர∴ப் நகர் என்று ஒலுவிலிலும் ஹுசைனியா நகர் என்று பாலமுனையிலும் மீலாத் நகர் என்று அட்டாளைச்சேனையிலும் மாதிரிக் கிராமங்கள் தோற்றம் பெற்றன. தீகவாபி அபிவிருத்தி, திராய்க்கேணியில் மீள் குடியேற்றத் திட்டம், ஆலங்குளம் மற்றும் சம்புநகர் கிராம அபிவிருத்தி என பல்வேறு துரித செயற் திட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரது பெயரை இம்மண்ணில் இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

பரந்துபட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள், இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்குதல், தென்கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிகள், அட்டாளைச்சேனையில் நடைபெற்ற தேசிய மீலாத் விழா என்பன அஸீஸ் சேர் அவர்களது காலப்பகுதியில் நடைபெற்ற முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளாகும்.

இவ்வாறான அபிவிருத்திப் பணிகளின் பின்புலத்தில் அரசியல் பிரமுகர்களின் பங்களிப்பு காணப்பட்டபொழுதிலும் அவற்றை கன கச்சிதமாகத் திட்டமிட்டு எவ்வித பிழையும் பிசகுகளும் ஏற்படாவண்ணம் துரிதமாக செயலுருப்படுத்திக் காட்டியதன் பின்புலத்தில் இவரது ஆக்கத்திறனும் அழகுணர்வும் பொறுப்புக்கூறலுக்கான பண்புணர்வும் கூடுதலாக மறைந்திருக்கின்றன.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு மக்கள் அல்லலுற்ற காலப்பகுதியில் பிரதேச செயலாளராகவும் பின்னர் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் இருந்து அவர் அட்டாளைச்சேனைக்கும் அம்பாரை மாவட்ட கரையோரப் பிரதேசம் முழுவதற்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியது.

அஸீஸ் சேர் அவர்கள் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய 13 வருட காலப்பகுதியை அவரோடிணைந்து பணிபுரிந்த எவராலும் மறக்க முடியாத நினைவுகளைச் சுமந்த, வாழ்க்கையின் ஒரு பகுதியாகக் கருதுவார்கள் என்பதில் ஐயமில்லை. பாடசாலைப் பருவத்தை நினைக்கும்போது எவ்வாறு நாவூறுகிறதோ அவ்வாறே அக் காலகட்டமும் பார்க்கப்படக்கூடியது.

இவரது காலத்தில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகம், அம்பாரை மாவட்டத்திலுள்ள ஏனைய பிரதேச செயலகங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த ஒரு சாந்தி இல்லமாகக் காணப்பட்டது. வீட்டிலிருப்பதைவிட காரியாலய நேரங்களை அதிகம் நேசிக்கக்கூடிய மனோநிலையை ஏற்படுத்தக்கூடிய சூழல் அங்கு நிலவியது. காரியாலய உத்தியோகத்தர்களாக பல ஊர்களிலிருந்தும் பல்வேறு பதவி நிலைகளிலும் இணைந்துகொண்டவர்கள் அங்கு ஏற்பட்ட பிணைப்பின் காரணமாக குடும்ப உறவினர்கள்போன்று மாறி, இன்றும்கூட உணர்வுபூர்வமாக உரையாடுவதையும் ஒன்றுகூடுவதையும் சுக துக்கங்களில் பங்கேற்பதையும் குறிப்பிட்டுக்கூற முடியும். இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பியிருந்ததுடன் வினைத்திறன்மிகுந்த சேவை வழங்கும் நிலையமாகவும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தை அடையாளப்படுத்தியிருந்தது.

தற்போது அஸீஸ் சேர் அவர்கள் பல பொறுப்புக்களைச் சுமந்த அமைச்சுக்களின் செயலாளராக பணியாற்றும் ஒருவராக இருந்த பொழுதிலும் அன்றுபோல் இன்றும் நட்பாகவும் அன்பாகவும் பழகக்கூடிய நல்ல பண்பாளர். ஆரம்ப கால நண்பர்களை மறவாது அவர்களை தொடர்ச்சியாகப் பேணி வருவதும் அதற்காக நேரத்தை ஒதுக்கிச் செயற்படுவதும் அவரில் காணப்படும் நல்ல பண்புகளாகும். தான் பிறந்த ஊரினதும் பிரதேசத்தினதும் சரித்திரம், குடும்பங்கள், குடிவழி மற்றும் தனி நபர்கள் தொடர்பான விளக்க விபரங்களை விலாவாரியாகத் தெரிந்திருத்தல், நல்ல ஞாபக சக்தி என்பன இவரில் சுட்டிக்காட்டத்தக்க சிறப்பம்சங்களாகும்.

அண்மையில் நடைபெற்ற புகழ்பூத்த கவிஞர் ஆசுகவி அன்புடீன் அவர்களது 50 வருட இலக்கியப் பணியை பாராட்டுமுகமாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்த பிரமாண்டமான பொன் விழா நிகழ்வை நடாத்தி முடிப்பதிலும் 350 பக்கங்களைக்கொண்ட 'சிற்பம் செதுக்கிய சிற்பி' என்ற நினைவுமலர் வெளியீட்டுப் பணிகளிலும் பிரதம ஆலோசகராக இருந்து அவர் வழங்கிய பங்களிப்பை அவ் விழாக்குழுவின் செயலாளராகப் பணியாற்றியவன் என்றவகையில் நன்றியுடன் நினைவுகூர்வது அன்னார் மற்றவர்களின் மகிழ்ச்சியில் எக்காலமும் மகிழ்வுறுபவர் என்பதை எடுத்துக்காட்டப் பொருத்தமானதாகும்.

அன்னாரது எதிர்கால வாழ்க்கை மென்மேலும் சிறப்பாகவும் ஆரோக்கியம் நிறைந்ததாகவும் அமையப்பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வாழ்க வளமுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ ஆளுநர் அவர்களுடன் மற்றும் பிரதம செயலாளருக்கு, கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் சுற்றுலாக் கையேடு வழங்கும் நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரவாரமில்லாத ஆளுமை அப்துல் அஸீஸ்

**கலாபூஷணம், வரலாற்றில் ஓர் ஏடு**
மௌலவி ஏ-ஸி-ஏ-எம்-புஹாரி (கபூரி) ஜேபி
சம்மாந்துறை

இலங்கைத் தீவு முழுவதற்குமான அறிவுக்கருவூலங்களை தன்னகத்தே கொண்ட ஊர்தான் அட்டாளைச்சேனை. இங்கு 1948லேயே அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும், அதன்பின் கிழக்கிலங்கை அறபுக்கல்லூரியும், பின்னர் அரசினர் கல்விக்கல்லூரியும் அமைந்திருந்தது. இவை அனைத்திற்கும் சிகரம் வைத்தது போல் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஆரம்ப அமைவிடமும் அட்டாளைச்சேனைதான் என்ற செய்தி நம்மையெல்லாம் பிரமிக்க-வைக்கின்றது.

இங்கு துறைசார்ந்த புத்தி ஜீவிகளுக்குப் பஞ்சமில்லை. ஆத்மீகம், அரசியல், சட்டம் நீதி, கலை, கலாசாரம், இலக்கியம் போன்ற துறைகளில் புலமைவாய்ந்த பலர் மறைந்தும், பலர் வாழ்ந்தும் புகழ் தேடித்தந்துள்ளனர்.

அந்த வரிசையில் நானறிந்தவரை அஷ்ஷெய்க் உமர் அலியார் ஹஸ்ரத், அப்துர் ரஹ்மான் ஆலிம் புலவர், பெரியம்பி ஆலிம், சின்னாலிமு என்ற முகம்மதலி ஆலிம், கல்வி அதிகாரி E.L.H.சுலைமா லெவ்வை, சம்சுதீன் மௌலானா M.A.சம்சுதீன் அதிபர், மௌலவி அப்துல் ஹபீல் ஆசிரிய கலாசாலை அதிபர் ஜலால்தீன், M.P, ரிஸ்வி சின்னலெவ்வை, M.P போன்றோர் மறைந்தாலும் மண்ணுக்குப் புகழ் தேடித் தந்துள்ளனர். இவர்களுடன் நீதித்துறையில் அல்-ஹாபிழ் N.M. அப்துல்லாஹ் அவர்கள் உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் M.S. சம்சுதீன் அவர்கள் மாவட்ட நீதிபதியாகவும் அட்டாளைச்சேனையின் ஆளுமைகளாக பிரகாசிக்கின்றனர்.

இந்த துறைசார்ந்தோர் வரிசையில் தான் வாடாத மல்லிகையாக, ஆரவராமில்லாத பெருமகனாக வலம் வந்து கொண்டிருப்பவர்தான் நமது மதிப்பிற்குரிய சகோதரர் அப்துல் அஸீஸ் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர் அஸீஸ் அவர்கள் சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பிருந்தே எனக்கு மிகவும் பரிச்சயமானவர். அவரது நேர்மை, வேகம், விவேகம், துணிவு, ஆளுமை, அரவணைப்பு, அன்பு, பாசம், இரக்கசுபாவம், சாணக்கியம், தலைமைத்துவப்பண்பு போன்ற அனைத்து குணாதிசயங்கள் மூலமும் அதிக அளவில் பேசுபொருளாக உள்ள ஒருவராகவே நாம் அவரை நன்கறிவோம்.

**உதவி அரச அதிபர்**

ஆறு வருடங்கள் ஆசிரிய சேவையில் பணியாற்றிய அவர், நிருவாகசேவை போட்டிப்பரீட்சைக்குத்தோற்றி சித்தி பெற்று 1990ல் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு உதவி அரச அதிபராக நியமனம் பெற்றமை அவரது திறமைக்கு ஒரு சான்றாகும்.

சிலரிடம் பட்டம் பதவி அந்தஸ்து வரும் போது அவர்களது அலைபேசி அஸ்தமித்து விடும். ஆனால், அஸீஸ் அவர்களின் அலைபேசியோ (மொபைல்) அல்லது தொலைபேசியோ எப்போதும் விழித்துக் கொண்டே இருக்கும்.

**பாரபட்சம் பாராத பண்பாளன்**

படித்தவர், பாமரர், வலியவர், எளியவர், பெரியவர், சிறியவர், அதிகாரிகள், சிற்றூழியர் போன்ற அனைவரையும் அரவணைத்து அன்பாகவும், பண்பாகவும் பேசி அவர்கள் தன்னை நாடிவந்த வேலைகளை மிகவும் கச்சிதமாகச் செய்து முடித்து அவர்களைத் திருப்திப்படுத்தி அனுப்புவதில் சகோதரர், அஸீஸ் அவர்களின் சாமர்த்தியம் சளைத்ததல்ல.

**குடியேற்றக்கிராமங்கள் புனர்நிர்மாணம்**

தலைவர் அஷ்ரப் அவர்கள் கப்பல்துறை, துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராகப் பதவி வகித்தபோது பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சாதி, மத, பேதமின்றி புனர்வாழ்வளிக்க மீலாத்நகர், ஆலங்குளம், ஹீசைனியா நகர், சம்பு நகர், ஆலிம்சேனை, தீகவாப்பி, திராய்க்கேணி போன்ற கிராமங்களில் குடியேற்றங்களை நிறுவி, மீள் குடியேற்ற வசதிகளை ஏற்படுத்தி, தொழில் வழிகாட்டல் சேவையையும் இக்கிராம மக்களுக்கு பெற்றுக் கொடுக்க அமைச்சர் அஷ்ரப் அவர்களை பயன்படுத்தி கொண்டவர்களுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர் அஸீஸ் அவர்கள் முதலிடம் பெற்றுள்ளார் என்று குறிப்பிடுவது பொருத்தமென்று எண்ணுகின்றேன்.

**தேசிய மீலாத் விழா**

1997ல் அம்பாறை மாவட்டத்திற்கான தேசிய மீலாத் விழாவை அட்டாளைச்சேனையில் நடாத்த அமைச்சர் அஷ்ரப் அவர்கள் தீர்மானித்து அட்டாளைச்சேனையை வளம் கொழிக்கும் பிரதேசமாக மாற்றும் பொறுப்பை சகோதரர் அவர்களிடம் வழங்கி அட்டாளைச்சேனையையும் அதன் தவப்புதல்வாரன அஸீஸ் அவர்களையும் கௌரவப்படுத்தினார்.

**மக்கள் தொண்டன்**

அஸீஸ் அவர்களின் தன்னலம் பாராத செயல்களினால் திருப்தி அடைந்த அமைச்சர் தேசிய மீலாத் விழா மேடைக்கு அவரை அழைத்து " மக்கள் தொண்டன்" என்று பட்டம் வழங்கி பொன்னாடையும் போர்த்தி கௌரவித்து நிகழ்வு இன்றும் எனது மனக்கண் முன் தோன்றிக் கொண்டிருக்கின்றது.

**உயர் அதிகாரிகளின் நம்பிக்கைக்குரியவர்**

அமைச்சர் அஷ்ரப்புடன் மட்டுமன்றி எந்தெந்த அமைச்சர்களின் கீழ் பணி செய்தாலும் அவர்களின் நல்லெண்ணத்தைப் பெற்று அவர்களால் தன்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற பொறுப்புக்களை மிகத்திறமையாகவும், நேர்மையாகவும், நம்பிக்கையுடன் செய்து முடிப்பதில் அஸீஸ் முன்மாதிரியானவராகத் திகழ்ந்தார்.

கிழக்கு மாகாண முதல் அமைச்சர்களாக கௌரவ சந்திரகாந்தன், கௌரவ ஹிஸ்புல்லாஹ், கௌரவ நஸீர் அஹ்மத் ஆகியோர் பதவி வகித்த போது அவர்களுக்கும் வலக்கரமாகவிருந்து சேவை செய்ததில் வல்லவராகத் திகழ்ந்தார்.

**பொது மக்கள் சந்திப்பு**

மாகாணசபை கலைக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் பதவி இழந்த போது கிழக்கு மாகாண ஆளுனர்களாகவிருந்தவர்கள் வாரந்தோறும் பொதுமக்கள் சந்திப்புக்களை நடாத்துவதுண்டு. ஆயிரக்கணக்கில் முண்டியடித்துக்கொண்டு மக்கள் திரண்டிருப்பர். இவர்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளிப்பதற்காக அஸீஸ் அவர்கள் படும்பாடு, சிரமங்கள் அனைத்தையும் அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் நன்கறிவர்.

நேரத்திற்கு உண்ணாது உறங்காது உறவுகளின் உரிமைகளுக்கு முக்கியத்துவமளிக்காது அளவுக்கு மீறிய கரிசனையை கருத்திற் கொண்டு மக்கள் தொண்டாற்றும் ஒருவருக்கு மக்கள் தொண்டன் என்று மகுடம் சூட்டியது மிகமிகப் பொருத்தமானதே.

அஸீஸ் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவனாக பயின்று கொண்டிருக்கும் போதே சகோதரர் M.H.M. அஷ்ரஃப் அவர்களுடன் நெருக்கமான உறவைப் பேணிவந்துள்ளார். சகோதரர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவேளையில் அஸீஸ் அவர்கள் 1993 காலப்பகுதியில் புத்தளம் உதவி அரச அதிபராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். தலைவர் அஷ்ரஃப் அவர்கள் அடிக்கடி நீதிமன்ற விடயமாக புத்தளம் செல்லும்போதெல்லாம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இல்யாஸ் அவர்களின் வீட்டிலிருந்து அஸீஸ் அவர்களைக் காரியாலயத்திலிருந்து அழைத்து பகலுணவு உண்டு எதிர்கால விடயங்கள் குறித்தெல்லாம் கலந்துரையாடிய அனுபவங்களை எல்லாம் அஸீஸ் அவர்கள் என்னுடன் இரைமீட்டியதை நான் இன்றும் எண்ணிப் பார்க்கின்றேன்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தோற்றத்துக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து அமைச்சர் அஷ்ரஃப் இட்ட கட்டளையின்படி காணிகளை சுவீகரித்து நீதிமன்ற வழக்குகளை வருடக்கணக்கில் எதிர்கொண்டு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு வழங்கி பல்கலைக்கழக நிர்மாண வேலைகளை எல்லாம் அவ்வப்போது தலைவர் அஷ்ரஃப் அவர்களுக்கு இற்றைப்படுத்தி அவர் பட்ட கஷ்டங்கள் எனக்கு நன்கு தெரியும். இருந்தாலும் இவரைப்போன்றவர்களின் தியாகத்துக்கு இவர் இதுவரையில் எதையுமே அனுபவித்ததில்லை என்பது கவலைக்குரிய விடயமே.

இருந்தாலும் இவரது கறைபடியாத கரங்களும், நேர்மையான எண்ணங்களும் சிந்தனைச் செயற்பாடுகளும் காரணமாகத்தான் இன்றுவரை அவரை இந்தளவுக்கு இறைவன் கண்ணியம் பெறச் செய்துள்ளான் என்று குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியனாக உதவி அரச அதிபராக, மேலதிக மாவட்டச் செயலாளராக, அமைச்சுக்களின் செயலாளராக, முதல் அமைச்சின் முதன்மைச் செயலாளராகவிருந்து ஊருக்கெல்லாம் உழைத்த உத்தமர் அஸீஸ் அவர்கள் அண்மையில் ஓய்வு பெறப்போகிறாராம் என்பதை அறிந்த போது மனம் வேதனைப்பட்டேன். அதேவேளை ஆச்சரியமும் அடைந்தேன். ஏனெனில் முப்பது வருடங்களுக்கு முன் அஸீஸை எந்த உருவத்தில் பார்த்தேனோ அதே உருவம், இளமை, சுறுசுறுப்பு, வேகம் இன்றும் சற்றும் குறையவில்லை.

கடந்த 37 வருடங்களுக்கு மேலாக அரச சேவையில் இணைந்து ஊருக்கெல்லாம் உழைத்து மக்கள் தொண்டன் என்று பெயர் வாங்கிய சகோதரர் அஸீஸ் அவர்கள் இனிமேல் வீடு குடும்பம், மனைவி, மக்கள், உறவுகள் என்பவர்களுக்கு தொண்டாற்றி " மனைவியின் தொண்டன்" என்ற மகுடத்திற்குரியவராக மாறட்டும் என வாழ்த்துகிறேன் கோடி நன்றிகள்.

அல்லாஹ் அன்னாருக்கு நீடித்த ஆயுளையும் தேக ஆரோக்கியத்தையும் நிறைந்த பாக்கியங்களையும் வழங்குவானாக, அவரது உழைப்பைப் பொருந்திக் கொண்டு மறுவாழ்வில் அதற்கான பரிசுகளையும் வழங்கி வைப்பானாக, ஆமீன்

" ஜஸாகுமுல்லாஹு ஹைரன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பது வருட சேவையில் முத்திரை பதித்தவர்

**எம். சிறாஜ் அஹமத்,**
ஓய்வுநிலை வெளிநாட்டு தூதரக அதிகாரி,
அட்டாளைச்சேனை.

'அறிவுமண்' என போற்றப்படும் அட்டாளைச்சேனை பிரதேசம் பல்வேறு பெருந்தகைகளால் பெருமை பெற்றுள்ளது. ஆன்றோர்கள், சான்றோர்கள், சன்மார்க்கப் பெரியார்கள், அரச உயர் அதிகாரிகள், மற்றும் பல்துறைசார்ந்தோர்கள் போன்றோர் தங்களது திறமைகளினால் முத்திரை பதித்து இப்பிரதேசத்திற்கு வரலாறு படைத்துள்ளனர்.

இந்த வரிசையில், கிழக்கு மாகாண முதலமைச்சு செயலாளராக அரும்பணியாற்றும் ஜனாப். யூ.எல்.ஏ. அஸீஸ் அவர்கள், இலங்கை நிருவாக சேவையில் முப்பது ஆண்டுகளை நிறைவு செய்து மண்ணுக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளமை எம் நெஞ்சங்களை நிறைக்கும் இனிய செய்தியாகும். இதனை முன்னிட்டு வெளிவரவிருக்கும் 'சேவை நலன் பாராட்டு' மலருக்கு வாழ்த்துச் செய்தியொன்றினை வழங்குவதிலும், அதற்காக முன்னின்று உழைக்கும் கிண்ணியா Youth Net மற்றும் KTV அலைவரிசை செயற்பாட்டாளர்களைப் பாராட்டுவதிலும் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த உதுமாலெவ்வை கதீஜா உம்மா தம்பதியின் புதல்வரான ஜனாப். அஸீஸ் அவர்கள், தனது கல்வியை அட்-அல்முனீறா வித்தியாலயம், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை என்பவற்றில் கற்று, பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறி, உதவி அரச அதிபராக, இலங்கை நிருவாக சேவை திறந்த போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று 1990 முதல் நியமனம் பெற்றார்.

உலகில் அதியுயர்ந்த நிர்வாக சேவைப் பதவியை வகிப்பவராக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கருதப்படுகின்றார். இலங்கை வரலாற்றில் 'சிவில் சேர்விஸ்' பரீட்சையில் சித்தியடைந்த முதல் முஸ்லீமாக மர்ஹூம் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் மதிக்கப்படுகிறார். இந்த வகையில், இலங்கை நிருவாக சேவையில் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நியமனம் பெற்று, முப்பது ஆண்டுகளை நிறைவு செய்து, அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சாதனை படைத்தவராக யூ.எல்.ஏ. அஸீஸ் அவர்கள் கருதப்படுகிறார். இச்சந்தர்ப்பத்தில் அரச பதவிகளில் பல உயர் பதவிகளை வகித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈற்றில் இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தராக நியமனம் பெற்று, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிறப்பாக சேவையாற்றியதன் மூலம் பிரதேசத்திற்கு பெருமை சேர்த்த ஓய்வுநிலை உத்தியோகத்தர் அட்டாளைச்சேனைப் பிறப்பிடமாகக் கொண்ட அல்-ஹாஜ் ஏ.எல். இப்றாலெப்பை அவர்களையும் நினைவுகூர்வது சாலப் பொருத்தமானதாகும்.

ஜனாப். யூ.எல்.ஏ. அஸீஸ் அவர்கள் நிருவாக சேவையின் முதன் நியமனமாக புத்தளம் மாவட்டத்தில் உதவி அரச அதிபராக சேவையாற்றி 1993 முதல் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றார். அதேவேளை, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் விசேட ஆணையாளராகவும் பணியாற்றினார். இக்காலத்தில் பிரதேச சபையின் செயலாளராக நான் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். பிரதேசத்தில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும் மிகவும் சிறப்பான முறையில் நிறைவேற்றுவதில் அக்கறையோடு செயற்பட்டார். இதன் மூலம் பிரதேச மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

1994 முதல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பிரதேச சபை நிருவாகத்தினை பொறுப்பேற்றனர். அதைத் தொடர்ந்து, பிரதேச செயலகமும், பிரதேச சபையும் சுமுகமான உறவைப் பேணி பிரதேசத்தில் சகல அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்வதற்குப் பக்கபலமாக ஜனாப். அஸீஸ் அவர்கள் செயற்பட்டார்.

இக்காலப்பகுதியில் மறைந்த தலைவர் மர்ஹூம் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் சிந்தனையில் மலர்ந்த தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம், குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கம் உட்பட்ட பல்வேறு துறைகளிலும் பரந்துபட்ட அபிவிருத்திப் பணிகள் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டன. அத்தனை செயற்றிட்டங்களையும் செவ்வனே நிறைவேற்றுவதில் இரவு பகலாக அயராது உழைத்தார்.

1997ல் அட்டாளைச்சேனையில் மிகக் கோலாகலமாக நடைபெற்ற 'தேசிய மீலாத் விழா' தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் மற்றொரு சாதனையாகும். அதனை முன்னிட்டு 'மீலாத் கிராமம்' உட்பட பாரிய அபிவிருத்திப் பணிகள் இப்பிரதேசத்தில் இடம்பெற்றன. 'அம்பாறை மாட்ட முஸ்லிம்கள் வரலாறு' எனும் நூலும் அவ்வமையம் வெளியிடப்பட்டது. 'மீலாத் செயலகம்' பிரதேச செயலக கட்டிடத்தில் திறக்கப்பட்டு 'மீலாத் செயற்குழுவும்' அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. இவை அத்தனை பணிகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றி விழா சிறப்பாக நடைபெற காத்திரமான பங்களிப்புக்கள் வழங்கிய பிரதேச செயலாளர் ஜனாப் யூ.எல்.ஏ. அஸீஸ் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயராத முயற்சிகள் போற்றிப் புகழத்தக்கனவாகும். குறித்த 'மீலாத் செயற்குழுவில்' துணைச்செயலாளராக எனக்கும் அப்போது பணியாற்றக் கிடைத்தமை மகிழ்வுக்குரியதாகும்.

மேற்படி மீலாத் விழா இறுதி நிகழ்வின் போது, தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள், பிரதேச செயலாளர் ஜனாப். யூ.எல்.ஏ. அஸீஸ் அவர்களின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, 'மக்கள் தொண்டன்' எனும் பட்டம் வழங்கி கௌரவித்தமை அன்னாரின் சேவைக்குக் கிடைத்த அங்கீகாரம் எனில் அது மிகையாகாது.

தனது முப்பது வருட நிர்வாக சேவைக்காலத்தில், ஜனாப். அஸீஸ் அவர்கள் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக, மாகாண சுகாதார அமைச்சு செயலாளராக கிழக்கு மாகாண முதலமைச்சுச் செயலாளராக, மாகாண உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, கிராமிய தொழிற்துறை, போக்குவரத்து, சட்டமும், ஒழுங்கும் மற்றும் சுற்றுலா அமைச்சுச் செயலாளராக மட்டுமன்றி இன்னும் பல உயர் பதவிகளில் அரும்பணியாற்றி மூவின மக்களினதும் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். அத்தோடு, 'இலங்கை இனங்களுக்கான நல்லுறவு தேசிய அமைப்பு' ஜனாப் யூ.எல்.ஏ. அஸீஸ் அவர்களின் சேவைகளைப் பாராட்டி '***தேசமான்ய***', '***சாமஸ்ரீ*** இ '***சமூக சேவை சிரோன்மணி*** ஆகிய விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளமையும் பெருமையுடன் குறிப்பிட வேண்டியவையாகும்.

இவ்வாறு அரச உத்தியோகத்தர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும், மக்கள் குறைகள் அறிந்து உதவும் உயர் அதிகாரியாகவும், சக பணியாளர்கட்கு வழிகாட்டும் ஆசானாகவும் அனைவருடனும் அன்போடு பழகும் அழகிய பண்பாளராகவும் திகழும் எமது பிரதேசத்தின் முதுசம்களில் ஒருவரான ஜனாப். யூ.எல்.ஏ. அஸீஸ் அவர்களின் முப்பது வருட நிர்வாக

சேவை நிறைவினைப் பாராட்டி விழா எடுப்பது மிகவும் பொருத்தமானதும், மகிழ்வுக்குரியதுமாகும். இதனால், அட்டாளைச்சேனை மண் பெருமையடைகிறது - கிழக்கு மாகாணம் பெருமிதம் கொள்கிறது. இதற்காக முன்னின்று செயற்படும் கிண்ணியா Youth Net மற்றும் KTV அலைவரிசை செயற்பாட்டாளர்கள் நன்றிக்குரியவர்கள். அந்த நல்லுள்ளங்களின் பணி என்றும் நினைவு கூரத்தக்கதாகும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் ஜனாப். அஸீஸ் அவர்களுக்கு நற்சுகத்தையும், நீடித்த ஆயுளையும் வழங்குவானாக – அன்னாரது பணிகள் மேலும் தொடர துணைபுரிவானாக எனப் பிரார்த்திக்கின்றேன்.

அல் ஹம்துலில்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஷான் விஜேலால் டி சில்வா அவர்களுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 வருட நிருவாக சேவையில் தடம் பதித்த முதல் செயலர்

ஜனரஞ்சக மிக்க ஜனாப் யூ.எல்.ஏ. அஸீஸ் என்னும் கனவானின்
மனக் குன்றின் அகலொளியில், மனம் மகிழ்ந்தோம்,
கன மிக்கான், கனதி சொல்ல வசனமில்லாத் தனமதனால்
மனம் வந்த சில குவித்தோம் சினந் தணிவீர் குணமனைவீர்.

நிருவாகத் திறன்மிக்க திருவாளர் அஸீஸ் ஐயா,
உருவாகக் கருவான பெற்றோர்கள் திருத்தவத்தின்,
திருவினையும் திருவினையின் பெருவினையும் வருவினையின்
கருவினையும் கண்ணுற்றோம் அனைவருக்கும் இனிய சலாம்

நன்றியுடன் அமுதம் போல் நறுஞ்சொற்கள் விஞ்சிவிட,
புன்னகையால் மகிழ வைக்கும் தண் ஒளிகள்,
மனக் கண்ணொளியில் காட்சிதந்து மாட்சித்தர,
கண்ணீர் பணிக்கிறது, கை கன்னம் துடைக்கிறது.

முப்பது வருட மதிநுட்பத்தில் மூத்தவனை,
குப்பத்தை மேடாக்கி சொர்க்கத்தைக் குவித்தவனை,
நட்புக்கு நட்பற்றாய் நாட்டத்தை கொண்டவனை,
இட்டமுடன் பாட்டெழுத ஈடுபட்டேன் நாட்டமுடன்

சாதி மதங் கடந்து, கடிதுயரச் சாதித்தாய்,
பாதி வழி வந்து நயம் பேசி அமர வைத்தாய்,
சேதி மதித்து விதி மாய்க்கும் சொல்லுதிர்த்து நலங் காத்தாய்,
அதிசயமே! நதி வளமே! மதி மணியே! துதித்தோமே!

வயல் வெளியில் மகிழ்ந்தோம், வாரி பெருகும் வழி கண்டோம்,
துயர் கண்ட பிள்ளைகளை தூக்கி விட முயன்று நின்றோம்,
வாயடைத்துப் பலரும் பார்ப்பதற்கு வழி சமைத்தோம்,
தயாளகுணசீலனே! தாயினும் சாலப்பரிந்த நீ! பாரியனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவன் நீ! என்ற பெரிய குணம் உனக்கில்லை,
விரிகின்ற நதி போல கரிசனையாய் பரிந்து விரைந்து,
புரிகின்ற மொழியினிலே பூப்போல வரிபேசி பணிபெருக்கும்,
பரிவான வாரிசே! நீ! தார் பெறும் நாள் இன்று பொன்நாளே!

நன்றியுடன்,

இறைபணி செம்மல்
**த. கயிலாயபிள்ளை** JP
தலைவர்
சுவாமி விபுலானந்தா சிறுவர்
அபிவிருத்தி நிலையம்
ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று-07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸீஸ் சேர் எங்கள் முதுசம்

M.A.C.A. நசீல் (SLAS)
உதவி பிரதேச செயலாளர்,
அட்டாளைச்சேனை.

ஜனாப் யூ.எல்.ஏ. அஸீஸ் சேர் அவர்கள், நிர்வாக சேவையில் முப்பது ஆண்டுகால சேவையைப் பூர்த்தி செய்வதையிட்டு அவரின் சேவையை இரைமீட்டிப் பார்க்கும் நோக்கோடு KTV அலைவரிசையூடாக கிண்ணியா Youth Net மற்றும் KTV அலைவரிசை என்பன இணைந்து வெளியிடும் இப்பாராட்டு மலருக்கு இச்சிறுகுறிப்பை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அட்டாளைச்சேனையில் பிறந்து வளர்ந்து தனது ஆரம்பக் கல்வியையும், உயர் கல்வியையும் அல்-முனீறா வித்தியாலயத்திலும், தேசிய பாடசாலையிலும் கற்றுத் தேர்ந்தவர். 1912ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் இருந்து 1982 ல் பல்கலைக்கழகம் சென்ற முதலாவது பட்டதாரி அஸீஸ் சேர் அவர்களே.

ஆசிரியராக தனது முதல் பணியை 1984ம் ஆண்டு காலத்தில் ஆரம்பித்து 1990 வரையில் ஹப்புத்தளை, பண்டாரவளை, நிந்தவூர், அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி ஆகியவற்றில் திறம்பட செய்து ஒரு நல்லாசிரியர் என்ற பெயரைப் பெற்றவர். அவர் ஆசிரியராக இருந்த காலத்திலேயே இலங்கை நிருவாக சேவைப் பரீட்சைக்குத் தோற்றி 1990ல் சித்தியடைந்த ஒரேயோரு முஸ்லிம் இவரே என்பது இங்கு குறிப்பிட்டுக்காட்ட வேண்டிய ஒரு விடயமாகும். அதிலும், 1987ம் ஆண்டு இலங்கை நிருவாக சேவை பரீட்சை எழுதி அதன் பெறுபேறு தாமதமாகிய போது, 1989ல் மீண்டும் இப்பரீட்சைக்குத் தோற்றி அதிலும் இவர் சித்தியடைந்தார் என்பது சிறப்பாக குறிப்பிடப்பட வேண்டியதாகும். அப்போது இவரை Double SLAS என அழைத்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

1990 முதல் 1993 வரையில் வடமேல் மாகாண புத்தளம் பிரதேசத்தில் உதவி அரசாங்க அதிபராக சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருந்த இவர், அட்டாளைச்சேனை பிரதேச புத்திஜீவிகள், சமூக அமைப்புக்கள், உயர் அதிகாரிகள் மற்றும் பிரதேச அரசியல் தலைவர்களது வேண்டுகோளுக்கு இணங்க, விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இப்பிராந்தியத்தில் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோங்கிக் காணப்பட்ட 1993 காலப்பகுதியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக கடமையை பொறுப்பேற்று இப்பிரதேசத்திலுள்ள பல்வேறுபட்ட துறையினரையும் ஒன்றிணைத்து பிரதேச நிர்வாகத்திலும், சமூக ஒற்றுமையிலும் தனது நிர்வாக சேவைக்காலத்தில் 13 வருட காலத்தை அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக இருந்து அம்பாறை மாவட்ட நிர்வாக துறையில் ஒரு முன்னோடியாக தடம்பதித்தார். இதற்கு அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் அவருக்கிருந்த நல்ல உறவும், பிரச்சினைகளை முன்கூட்டியே இனங்கண்டு உதவிகேட்டு வருபவர்களை உறவுப் பெயர் கூறி அழைத்து புன்சிரிப்புடன் செயற்படுவதுமே காரணங்களாக அமைந்தன.

நான், அஸீஸ் சேர் அவர்களுடன் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நீண்டகாலம் ஒன்றிணைந்து கடமையாற்றியுள்ளதுடன், இன்றுவரை அவருடன் ஆத்மார்த்தமான நல்ல உறவையும் பேணி வருகிறேன். அஸீஸ் சேர் அவர்களின் நிர்வாக செயற்பாடுகள், வழிகாட்டல்கள், அவரது ஆளுமை, பிரச்சினைகளை அணுகும் முறை என்பவற்றால் ஈர்க்கப்பட்டதன் விளைவே எனக்குள்ளும் பொதுத்துறையில் தடம்பதிக்க வேண்டும் என்ற ஒரு ஆர்வம் தோற்றம் பெறக்காரணமாயிற்று.

குறிப்பாக, அட்டாளைச்சேனைப் பிரதேசம் மூவின மக்களை தன்னகத்தே கொண்டுள்ளதால், அவ்வப்போது ஏற்பட்ட பொதுமக்கள் பிரச்சினைகள் மற்றும் கிராம எல்லைப் பிரச்சினைகள், மாறுபட்ட கருத்துடைய அரசியல்வாதிகளது எதிர்பார்ப்புகள் என அனைத்தையும் தனது அறிவுத்திறமையால், மிக புத்திசாதுர்யமாக சமரசம் செய்து அதில் வெற்றிகண்ட ஒரு சிறந்த நிர்வாகியாக அவரை நான் காண்கிறேன். இதன் காரணமாகவே அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் 13 வருட காலம் பிரதேச செயலாளராக கடமையாற்றும் வாய்ப்பை அட்டாளைச்சேனை மக்களும், இப்பிரதேச அரசியல்வாதிகளும் அவருக்கு வழங்கியிருந்தனர் என்பதை குறிப்பிட்டேயாக வேண்டும்.

கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தேசிய கல்விக் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களைக் கொண்ட தனித்துவமான பிரதேசமான எமதூரில், 1997ம் ஆண்டு மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களது சிந்தனையினால், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மிக விமர்சையாக கொண்டாடப்பட்ட தேசிய மீலாதுன் நபி விழா நிகழ்வின் மூலம், அட்டாளைச்சேனை பிரதேசத்தை ஒரு எழுச்சிமிக்க பிரதேசமாக மாற்றுவதற்கு அஸீஸ் சேர் மேற்கொண்ட முயற்சியை இப்பிரதேச மக்கள் இலகுவில் மறந்துவிட முடியாது. குறிப்பாக, மீலாத் நகர் மாதிரி வீட்டுத்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகுவதற்கும், தேசிய பாடசாலை அபிவிருத்தி செய்யப்படுவதற்கும், அதனோடு இணைந்த அபிவிருத்தி நிகழ்வுகளுக்கும் இவரது பங்களிப்பு மிகவும் மேலானதாக அமைந்திருந்ததை ஞாபகமூட்டாமல் இருக்க முடியாது. இதனால்தான் இவரது அயராத செயற்பாடுகளை பாராட்டி தலைவர் அஷ்ர∴ப் அவர்களால் 'மக்கள் தொண்டன்' என பெயர்சூட்டி கௌரவிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதே போன்று, அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானம் அமைவதற்கான இடத்தை அடையாளப்படுத்தி கொள்வனவு செய்து, முன்னாள் அமைச்சர்களான மர்ஹூம் ஏ.ஆர்.எம். மன்சூர், மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர∴ப், கௌரவ ரவூப் ஹக்கீம் ஆகியோரது அமைச்சுக்களின் மூலம் நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று மக்கள் பங்களிப்புடன் மைதான அபிவிருத்திப் பணிகளை அந்நாட்களில் மேற்கொண்டு, இம்மைதானத்திற்கு அஷ்ரப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானம் என பெயர் சூட்டினார். இக்காலகட்டத்தில் அட்டாளைச்சேனை இளைஞர் சமூகத்திற்கு அன்றாட உணவைவிட இம்மைதானத்தின் தேவையே பெரிதாக உணரப்பட்டதை சுட்டிக்காட்டியேயாக வேண்டும்.

தற்போது, கிழக்கு மாகாணத்தில் 400 மீற்றர் ஓடுபாதையைக் கொண்ட இரண்டு விளையாட்டு மைதானங்களே உள்ளன. அம்பாறை நகர சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற வீரசிங்க பொது விளையாட்டு மைதானம், மற்றொன்று அட்டாளைச்சேனை பிரதேச சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற நமது அஷ்ர∴ப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானம் ஆகியவைகளே அவை. அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானம் இன்று இவ்வாறு வீறுநடைபோடுவதற்கு அஸீஸ் சேரின் உழைப்பு மிகப்பிரதானமானதாகும். அன்று அவரால் வடிவமைக்கப்பட்டு நடப்பட்ட பெயர்ப்பலகையே இன்றும் இம்மைதானத்தின் பெயர்ப் பலகையாக கம்பீரமாக காட்சியளித்துக் கொண்டிருப்பது வரலாற்று நினைவாகும்.

மேலும் 1990 தொடக்கம் 1993 வரையான காலப்பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம், மன்னார், உறுகாமம் போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களை இன்முகத்துடன் வரவேற்று அட்டாளைச்சேனை பிரதேசத்திற்குட்பட்ட பாலமுனை கிராமத்தில் குடியமர்த்தி அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அந்த மக்களை நிம்மதியாக வாழ்வதற்கு வழியேற்படுத்திக் கொடுத்தது மட்டுமன்றி ஹுசைனியா நகர் என பெருந்தலைவரின் தந்தையாரின் பெயரை இக்கிராமத்துக்கு சூட்டி பெருமை கொள்ளச் செய்தவரும் அஸீஸ் சேர் அவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று, இனப்பிரச்சினைகள் காரணமாக 1990 காலப்பகுதியில் இடம்பெயர்ந்த திராய்கேணி மக்களை மீளக்குடியமர்த்தி அந்த மக்களுக்கு கோயில், பாடசாலை, சந்தை வசதிகள் என எல்லாவற்றையும் ஏற்படுத்தி கொடுத்ததுடன், இனங்களுக்கிடையே காணப்பட்ட விரிசல்களையும் தப்பபிப்பிராயங்களையும் இல்லாமலாக்குவதிலும் முனைப்பாக செயற்பட்டவர் இவர் என்றால் அது மிகையாகாது.

அதுமட்டுமல்லாமல், தீகவாபி மக்களது மனங்களை வென்று தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுடன் இணைந்து தீகவாபி கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கும், சிங்கள மக்களுடனான உறவை இப்பிரதேசத்தில் வளர்ப்பதற்கும் செயலாளர் அஸீஸ் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டப்பட வேண்டியது. இதனாலேயே தீகவாபி கிராமத்தில் இன்றும் இவரைப்பற்றி சிலாகித்துப் பேசப்பட்டு வருகிறது. இப்போதுகூட தீகவாபி விகாராதிபதிகள், பொது மக்கள் ஆகியோரால் அஸீஸ் சேர் அவர்கள் தொடர்ந்தும் ஞாபகப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் சிந்தனையில் உருவான ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தோற்றத்துக்கும் நிர்மாணத்திற்கும் அவசியமானதாக அடையாளம் காணப்பட்ட சுமார் 200 ஏக்கர் காணியை சுவீகரிப்பதிலும் அதன் உரிமையாளர்களுக்கு அதற்கான நட்டஈட்டினை பெற்றுக்கொடுப்பதிலும் மிகவும் முனைப்பாகச் செயற்பட்டார் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்மாணச் செயற்பாடுகளில் தலைவர் அவர்களுக்கு பக்கபலமாக இருந்து இவர் வழங்கிய பங்களிப்புகள் மறைக்க முடியாத உண்மைகளாக இருந்து கொண்டிருக்கின்றன.

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் இடநெருக்கடி ஏற்பட்ட போது, அப்பிரதேசத்தில் நெசவாலைக்கட்டிடம் அமைந்திருந்த காணியை பெற்றுத்தருவதில் அவர் பெரும் பங்காற்றினார். இதனால்தான் இன்று அவ்விடத்தில் நிலாமியா வித்தியாலயம் தோற்றம் பெற்றதுடன், அப்பிரதேச சிறார்கள் சிரமம் இன்றி கல்விகற்க ஒரு அரிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, கடந்த 2005ம் ஆண்டு மேலதிக அரசாங்க அதிபராக கடமையேற்று சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத வேறுபாடின்றி பல்வேறுபட்ட உதவிகளைச் செய்வதற்கும் தன்னை அர்ப்பணித்திருந்தார் என்றே கூறவேண்டும்.

குறிப்பாக, 2004.12.26ம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முறையான நிவாரணம் கிடைக்கப்பெறாமையால், புனர்வாழ்வு அமைச்சின் கொள்கைகளையும், திட்டங்களையும் இப்பிரதேசத்தில் தாராளமாக பயன்படுத்தியதன் மூலம் வீடமைப்பு, வீடமைப்பு மானியம், தொழில் முயற்சிகள், தனியார் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள், சமூக சமய நிறுவனங்களுக்கான புனர்வாழ்வு மானியம் என்பவற்றை மிகத்தாராளமாக இப்பிரதேசத்தில் வழங்கியது மட்டுமல்லாமல், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை ஆலங்குளம், அஷ்ரப் நகர், போன்ற கிராமங்களில் மீள்குடியேற்றியதுடன், சம்புநகர் கிராமத்தில் முதியோர் மற்றும் விஷேட தேவையுடையோருக்கான கூட்டு வீட்டுத் திட்டம் ஒன்றையும் ஏற்படுத்திக் கொடுத்தது மட்டுமன்றி, பெரிய நீலாவனை தொடக்கம் லாஹுகலை வரையில் ஏறக்குறைய 30க்கும் மேற்பட்ட வீட்டுத்திட்டங்களை உருவாக்கி 10,000க்கும் மேற்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதில் அப்போதைய அமைச்சர்கள், மேலதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றுவதில் இவர் வழங்கிய பங்களிப்புகளை இங்கு கட்டாயம் ஞாபகப்படுத்துவது எல்லோரதும் கடமையாகும்.

அரசினது காணி உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் பாலமுனைக் கிராமத்தில் சுவீகரிக்கப்பட்ட காணிகளை மீட்டுக் கொடுப்பதற்கும், தனிப்பட்டவர்கள் இக்காணிகளை ஆக்கிரமிப்பதை தடைசெய்து அவற்றை பாலமுனை மக்களது உதவியுடன் மீட்டெடுத்து அக்காணியில் மீள்குடியேற்றக் கிராமம், ஹுசைனியா நகர், மின்ஹாஜ் மகா வித்தியாலயம், பாலமுனை பொது விளையாட்டு மைதானம், மாவட்ட விவசாய பயிற்சி நிலையம், கமநல சேவை நிலையம் என்பன அமைவதற்கு கால்கோளாக அமைந்தவர் செயலாளர் அஸீஸ் சேர் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

அத்துடன், அட்டாளைச்சேனை கிராமத்திலுள்ள கோணாவத்தை ஆற்றை மிகுந்த போராட்டத்திற்கு மத்தியில் நீர்ப்பாசன திணைக்களம், கரையோரம் பேணல் திணைக்களம், சுற்றாடல் திணைக்களம் மற்றும் பிரதேச சபை ஆகிய அனைத்து அரச நிறுவனங்களையும் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து எல்லையிடும் பணியை முதன் முதலில் ஆரம்பித்து வைத்த பெருமை இவரையே சாரும்.

இதன் பின் 2009ம் ஆண்டு கிழக்கு மாகாண சுகாதார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றதன் மூலம் அட்டாளைச்சேனை ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் சுகாதார துறை, விளையாட்டுத்துறை என்பவற்றை அட்டாளைச்சேனை பிரதேசத்தில் முன்னேற்றுவதற்கு முன்னின்று உழைத்தவர் செயலாளர் அஸீஸ் சேர் அவர்களே.

இவரது நேர்த்தியான நிர்வாகத் திறமையை இணங்கண்ட கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் அவரை கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளராக பதவி உயர்வு வழங்கி கௌரவித்ததன் பயனாக அட்டாளைச்சேனை பிரதேசமும் பல அபிவிருத்திகளைக் கண்டுள்ளது. குறிப்பாக, சிறு கைத்தொழில் திணைக்கள விற்பனை நிலையம், அட்டாளைச்சேனை 03ம் பிரிவில் அமையப் பெற்றுள்ள கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடம், ஆலங்குளம் பலநோக்குக் கட்டிடம் மற்றும் உள்ளூராட்சி மன்றம், கிராம அபிவிருத்திகள் என்பனவும் இக்காலத்தில் இவரது முயற்சியினால் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடைந்தவைகள் ஆகும்.

தனக்குக் கிடைத்த பதவிகளை எல்லாம் தனது சுய வளர்ச்சிக்காக இல்லாமல், பொது மக்களுக்காவே செய்து பெயர்பெற்ற ஒரு மூத்த நிருவாக சேவை அதிகாரியான இவர், எதிலும் ஆரவாரமின்றி, அமைதியும், அடக்கமும் உடையவராக காரியங்களை கச்சிதமாக நிறைவேற்றி வெற்றி காண்பவர். இன்றைய இளம் நிருவாகிகளுக்கு இவரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய பண்புகள் ஏராளம் உள்ளன. 30 வருடங்கள் இலங்கை நிருவாக சேவையில் பூர்த்தி செய்துவிட்டு 31வது வருடத்தில் காலடி வைத்துள்ள அஸீஸ் சேர் அவர்கள், அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், படித்த - பாமர மக்கள் என அனைவரதும் அன்பையும் அபிமானத்தையும் பெற்ற ஒருவராக திகழ்வதுடன், இவ்வாறான ஒருவரை அட்டாளைச்சேனை மண் ஈன்றெடுத்ததில் பெருமையும் புளகாங்கிதமும் அடைகின்றது.

இவரது சேவையும், வழிகாட்டலும் எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு என்றென்றும் கிடைக்கவும், எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு சுகமான வாழ்வையும் நீண்ட ஆயுளையும் வழங்கவும் பிரார்த்திக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ ஆளுநர் மற்றும் அதிகாரிகளுடன் போக்குவரத்து அதிகாரசபை நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீ படாத தீக்குச்சி

-ஈழமதி ஜப்பார்

அட்டாளை மாதா பெற்றெடுத்த கட்டழகன்
வட்ட வதனமுள்ள வடிவழகன் அப்துல் அஸீஸ்
பட்டம் பல சுமந்திருக்கும் பெரும்சொத்து கடல் முத்து
வருகின்ற மக்களை வாஞ்சையுடன் வரவேற்று
பருகத் தேநீரும் பல்சுவையில் கடிப்பானும்
தருவித்து உபசரிக்கும் குணமுள்ள குணசீலன்

அறிவோடு ஆற்றல் அதற்கேற்ப சாந்த குணம்
பரிவோடு பாசம் பாவையரின் மென்மையுள்ளம்
நெறியோடு கற்று நேர்வழியில் பயணித்து
குறியோடு இலக்கை வாழ்வில் குதூகலமாய் அடைந்து
வறியோர்க்கும் விசேட தேவையுள்ளோர்க்கும்
புரிந்துணர்வோடு உதவுகின்ற உசாத்துணை

சீற்றம் நெஞ்சில் அற்பளவும் இல்லாமல்
ஆற்றிடும் பணியை ஊரறியும் நாடறியும்
பற்றோடு அனைவரோடும் பழகுகின்ற பண்பாளன்
சிற்றூழியர்களையும் சிறப்பாய் நடாத்தும் இவர்
உற்றார் உறவினர் சுற்றத்தார் அனைவரையும்
பெற்றோர் போல் மதிக்கின்ற தயாள மனம் படைத்தோன்

மும்மொழி வித்தகன் ஆளுமைக்கோர் ஆசாரியன்
முத்தான கல்விக்குள் வித்தாகி விருட்சமாகி
எத்திவைக்கும் ஆசானாயிருந்து பணி செய்த பின்னர்
உத்தமமாய் மதிக்கின்ற நிருவாக சேவைக்குள்
சித்திபெற்று பிரதேச செயலாளராய் உள்வாங்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்திக்கும் புகழோங்க இனிய பணி தொடர்கின்றார்.

பதின்மூன்றாண்டுகள் பிரதேச செயலாளராய்
பதித்த முத்திரையில் பணி செய்த அப்துல் அஸீஸ்
மதிநுட்பமுள்ளதொரு மேலதிக அரச அதிபராய்
பதவியில் உயர்வு பெற்று சுமார் ஐந்தாண்டுகள்
எதிலும் குறைகள் ஏற்பட்டுவிடாவண்ணம்
சுதியாய் சேவைசெய்த சேவைக்கோர் செம்மல்

உள்ளூராட்சி மன்றத்தின் விசேட ஆணையாளராய்
ஒன்பதாண்டுகள் ஒய்யாரப்பணி புரிந்தார்
சேதியாய் கிடந்த வீதிகளைச் செப்பனிட்டார்
வீதித்தெருவிளக்கு நிறுவி ஊரெல்லாம் வெளிச்சமிட்டார்
ஓதிடும் வார்த்தையில் உண்மையே வெளிப்படுத்தி
ஆதியிறைவனின் அருளுக்கும் ஆளானார்

சராசரிக்கும் அப்பால் சற்றுயர்ந்து செயற்பாடு
நிராகரித்து எதற்கும் முகம் சுழி(ளி)க்காத நிலைப்பாடு
வீறாப்பு வீண்வம்பு வாழ்வில் சேரா வெளிப்பாடு
ஆராவமுதம்போல் பணியாற்றும் கடப்பாடு
தீராத தாகத்தில் சமூகப்பணி தொடரும் இவர்
வாராவதிபோல் வழிதிறக்கும் பேராண்மை

எண்ணுவதில் செல்வந்தர் இரங்குவதில் ஏழை இவர்
பன்னுவதில் பாண்டித்தியம் பாடுவதில் சூடாமணி
கன்னல் இனித்திட கதைக்கின்ற கலைவாணன்
கண்ணியம் காருண்யம் கரிசனை கொண்ட இவர்
வண்ணமிகு செயற்பாடும் ஈருலக வழிபாடும்
தன்வசம் கொண்டு செயற்படும் சமூக ஜோதி

பொன் கொழிக்கும் தென்கிழக்குப்பல்கலைக்கழகம்
மீன்பிடித்துறைமுகம் போன்றவற்றின் அபிவிருத்திகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை முழுமூச்சாய் அர்ப்பணித்த அப்துல் அஸீஸ்
மறைந்த மாமனிதன் மனிதநேயம் அஸ்ர.்.ப்பின்
நிறைந்த நெஞ்சுக்குள் உறைந்திருந்த அபிமானி
குறைகண்டு கொள்ளாத கோகிலம் இவருக்கு
மறைந்த பெரும் தலைவர் "மக்கள் தொண்டன்" எனும் பட்டம்
சூட்டி அழகுபார்த்த வரலாறு கண்டீர்

தேசிய மீலாதுவிழா (1997) இல் நடந்த வேளை
ஊசியில் நூல் போல் ஒட்டியிவர் செயற்பட்டார்
வீசியெழுந்த சுனாமி பேரலை வீட்டுத்திட்டத்தில்
பெரிய நீலாவணை தொடக்கம் லகுகல வரையில்
நிர்மாணிக்கப்பட்ட மாதிரிக்கிராம திட்டத்தில் இவர்
பாரிய பங்களிப்பை நல்கினார், ஒத்துழைத்தார்

அரச சேவையின் அந்திம காலத்தில் இவர்
நிரந்தர நினைவினை நிலைநிறுத்துதற்காய்
சிறந்ததோர் தூபியை சேனையூர் மத்தியில்
நிறுவுவதற்கு நிதர்சனமாய் செயற்பட்டார் வெற்றிகண்டார்
வரமே இவர் பிறப்பு அதிலும் மிகச்சிறப்பு
மறக்காது இவர் நினைப்பு பின்னாலும் இவர் இறப்பு

கிழக்கு சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின்
விளப்பமுள்ள ஒரு செயலாளராய் பணி புரிந்த காலத்தில்
அட்டாளை மண் சுமந்த ஆயர்வேத மருந்தகம்
அரச சுற்றயக்கூறு வைத்தியசாலை அதனோடு
பொது விளையாட்டு மைதானம் போன்றவற்றின்
வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இவருமொரு காலானார்

என்னதும் வாழ்வில் இறுமாப்புக்கொள்ளாமல்
தன்னலம் கருதாது உழைத்து வரும் அப்துல் அஸீஸ்
சொன்னதைச் செய்திடும் பொன்மனச்செம்மல்
அன்றுபோன்று இன்றும் ஒருமித்த மனதோடு இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் செய்திட்ட எண்ணற்ற சேவைகளை
ஏட்டில் எழுதவொண்ணா, பட்டியல் நீண்டு போகும்

எப்படியாகினும் அரச நிருவாகம் செய்திடாமல்
இப்படித்தான் செய்ய வேண்டுமென்ற வரையறைக்குள்
முப்பத்தைந்து ஆண்டுகளாய் தப்படி ஏதுமின்றி
நுட்பமாய் பணி செய்து காட்டிய சேவையின் சிகரம்

முதலமைச்சின் (கிழக்கு) முதற்தர செயலாளராய்
இதமாய் பணி செய்திடும் இனியவர் அப்துல் அஸீஸ்
பதம் பார்த்த பதவிகள் பாரினிலே ஏராளம்
மூவின மக்களோடும் சினேகிதமாய் பழகிடும் இவர்
எதனையும் பெரிதாய் அலட்டிக்கொள்ளாதவர் இவர்
அடுத்த வருடம் *(2021)* பதவியில் ஓய்வெடுத்துக் கொள்கின்றார்

காதல் கனிந்தமையால் சீதனத்தை விரட்டியிவர்
ஆதனங்கள் பாராமல் ஆசையுடன் மணமுடித்தார்
வேதனத்தில் மட்டும் வாழ்க்கை வண்டி ஓட்டும் இவர்
சோதனைகள் எதுவரினும் சுகமாக அனுபவித்து
சாதனைகள் படைத்தமையை சரித்திரம் சான்று கூறும்
நீதமுள்ள நீதிபதி இவர் போதனைக்கோர் போஷகன்

கிழக்கு மண்ணுக்கு கீர்த்தியாகி, சீர்த்தியாகி
இலக்கோடு அரச அதிபருக்கும் தகுதியாகி
விளக்கு போல் பிறருக்கு ஒளியூட்டும் தியாகியாகி
கலங்கரை விளக்கு போல் திகழ்கின்ற அப்துல் அஸீஸ்
நூறாண்டு நிலம் வாழ இரு கரம் ஏந்தி நான்
பாராளும் இறைவனிடம் பக்தியுடன் இறைஞ்சுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் ஆளுநர் கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புள்ளாஹ் அவர்களால் கிழக்கு மாகாண வீடமைப்பு, போக்குவரத்து மற்றும் சுற்றுலா அதிகார சபைகளுக்கு பணிப்பாளராக நியமனம் வழங்கி வைக்கப்பட்ட நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸீஸ் யார்?

## எனக்கும் அவருக்குமான உறவெது?

**- நண்பன் விமல் குழந்தைவேல்**
(பிரித்தானியாவில் இருந்து)

சிலர் மனதில் இந்த கேள்விகள் எழலாம். இது பாராட்டல்ல, பலராலும் பாராட்டப்படும் அஸீஸ் என்பவருக்கு நான் பாடசாலை காலத்து நண்பனாக இருந்திருக்கிறேன் என்ற தற்புகழ்ச்சி மடலெனவும் எடுத்துக் கொள்ளலாம்.

எண்பதுகளின் நடுவில் எங்கள் உயர்தர பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்பிற்கு வந்தபோது தான் முகம்மட், அஸீஸ், நியாஸ், வஹாப் குழுவினரை முதலில் சந்திக்க முடிந்தது. கண்டதும் காதல் கொள்வதுபோல என்னை தங்களுக்குள் ஈர்த்துக் கொண்டது. அந்த ஐவர் கூட்டம் அன்று தொடங்கியது தான்.....

மரணிக்கும் வரை நினைத்துப் பார்த்து பெருமைபடும் அளவிற்கு சுத்தமானது எங்கள் நட்பு வாழ்வு. அன்றிலிருந்து இன்று வரைக்கும் என்னை மாற்று மதத்தவன் என அவர்கள் நடத்தி நான் உணர்ந்ததே இல்லை. இன்றைக்கும் நான் அவர்களுக்கு எங்கள் விமல், நம்ம விமல் தான்.

நகைச்சுவையாளன், கோவக்காரன், பிடிவாதக்காரன், தன்னை விட மற்றவனிடம் அதிக நெருக்கம் காட்டுகிறாய் என்ற பொறாமைக்காரன் என எங்களுக்குள் ஒவ்வொரு குணாம்சங்களுடன் நாங்கள்..... இதில் அஸீஸ்?? அமைதியும், நேர்மையும், மரியாதையும் அஸீஸின் இருப்பிடம். வார்த்தைகளை அளந்தே பேசும் அஸீஸ் சிரிக்கையில் கண் இமைகள் மூடிக்கொள்ளும் அழகை அவர் இரசித்திருக்க வாய்ப்பே இல்லை..... நாங்கள் இரசித்திருக்கிறோம்.

அக்கரைப்பற்று கோளாவிலிலெல்லாம் எங்களின் சைக்கிள் சக்கரம் உருளாத ஒழுங்கைகளே இருக்காதென்றே நினைக்கின்றேன். அட்டாளைச்சேனையில் எங்கள் பாதம் படாத ஒழுங்கைகளே இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் நடைராஜாக்களாக கன நாட்கள் களித்திருக்கிறோம். பனங்காடு பாலம் இருந்து தைக்காவடி மதுரை மரத்தடிக்கு குழுவாக நடந்து வந்து அங்கிருந்து ஒவ்வொருவராக பிரியத் தொடங்கி எஞ்சியிருக்கும் ஒருவன் என்னை மீண்டும் சைக்கிளில் ஏற்றி கோளாவிலுக்கு கொண்டு வந்து விட்டு செல்வது... நினைத்துப்பார்த்தால் இப்போது இத்தனைப் பெறுமைக்குரிய அஸீஸ் என்ன ஒரு கல்வியாளன் ஒரு காலத்தில் இப்படியான பைத்தியங்களுடனெல்லாம் நட்பாக இருந்திருப்பாரா என்பது நம்ப முடியாத விசயமாகத் தான் இருக்கும். ஆனாலும் அது தான் உண்மை.

நாங்கள் நடந்த பாதைகள், பார்த்த சினிமாக்கள், நாங்கள் சென்ற பயணங்கள், முழு நிலவு கடற்கரையில் உண்டு களித்து உறங்காமல் உரையாடி விடிய வைத்த பொழுதுகள், திருவிழா நாட்களில் மோதகத்திற்கும், பொங்கலுக்கும் அவர்கள் காத்திருந்த நாட்கள், கந்தூரி சோத்துக்கும், நோன்புக் கஞ்சிக்கும் நான் காத்திருந்த நாட்கள், சுன்னத்துக் கல்யாணத்திற்கும், காவீனுக்கும் பந்தல் போட நான் சென்றது என்வீட்டு மருமகள்களின் சாமத்திய வீட்டு அலங்காரங்களில் அவர்கள் பங்கு கொண்டது..... இப்படி எத்தனை மறக்க முடியாத நாட்களில் எல்லாம் அஸீஸும் கூடவே இருந்திருப்பார்...... இப்போதய என் எழுத்துக்களின் கதாப்பாத்திரங்களுடன் எங்கோ ஓர் இடத்தில் அஸீஸும் வந்து போவதை என்னாலேயே தவிர்க்க முடிவதில்லை.

படித்தோம், நாட்டின் அரசியல் சூழல் என்னை எங்கெல்லாமோ தூக்கி வீசியடித்தது. ஓரிடத்தில் வந்து வீழ்ந்து, நிமிர்ந்து பார்த்தபோது தான் தெரிந்தது என்னோடு படித்தவர்கள் எல்லோரும் எத்தனை பெரிய பதவியில் இருக்கிறார்கள் என்று.

தலைமை ஆசிரியராக, அரசாங்க அதிபராக, வங்கி முகாமையாளராக பலரும் பல பதவிகளில்..... இவர்களின் அஸீஸ் மட்டும் ஆசிரியராக, உதவி அரசாங்க அதிபராக, பிரதேச செயலாளராக, முதலாவது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக..... தற்போது கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக..... விமல்குழந்தைவேல் என்கின்ற நான் ஒரு காலத்தில் அஸீஸ் என்பவரின் நண்பராக இருந்திருக்கிறேன் என்று சொல்லி பெருமைபடும் அளவிற்கு எத்தனையோ பதவிகளில் இருந்த அஸீஸ் விமல்குழந்தைவேல் என்பவர் என்னோடு படித்தவர், எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பரென சொல்லி பெருமைப்படுமளவிற்கு என்னிடம் எதுவுமே இல்லை என்பதுதான் உண்மை….. இருந்தும் அஸீஸ் மாறவேயில்லை…. என்றும் எங்களின் அதே அஸீஸாகத்தான் இருக்கிறார்.

ஆறு வருடங்களுக்கு முன்பு தான் அஸீஸை கடைசியாகக் கண்டேன். ஏன் மூத்த தமைக்கையாரின் மரண வீட்டிற்கு வந்திருந்தார். வந்திறங்கிய வாகனமும், கூடவே வந்த அதிகாரிகளும் அஸீஸின் அருகில் செல்ல எனக்கு தயக்கம் காட்டிய போது அஸீஸ் நெருங்கி வந்து என்னை கட்டியணைத்து **“நம்மட மூத்தக்காவா போயிற்றா”** என கேட்டபோது **“அஸீஸ்”** என்றபடி நான் தோளில் முகம் புதைத்தேன். அதுதான் எனக்கும் அஸீஸுக்குமான நட்பும் உரிமையும்.

அஸீஸ் நீங்கள் இன்னும் பல உயர் பதவிகள் பெற்று பெருமையுடனும், புகழுடனும், நலமுடனும் வாழ என் வாழ்த்துக்களும் அன்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையின் சிகரம்

## திருப்தியுடன் 30 வருட நிருவாக சேவையில் ......

**அனிபு லெவ்வை**
பிரதம சட்ட உத்தியோகத்தர்
கிழக்கு மாகாணம்.

அட்டாளைச்சேனை மண்ணின் மகிமையை தீவுமுழுக்க பரப்பியவர்கள் வரிசையில் U.L.A அஸீஸ் அவர்களும் ஒருவர். இவர் உதுமாலெப்பை மற்றும் ஹதிஜா உம்மா ஆகியோருக்கு புத்திரராகப் பிறந்து அட்டாளைச் சேனை தேசியப் பாடசாலையில் கல்வி கற்று ஆசிரியர் சேவையில் இருந்து இலங்கை நிருவாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

தனது சேவையினால் சமூகத்தின் அடிமட்ட மக்கள் முதல் மேல் மட்ட மக்கள் வரை தன்பால் ஈர்த்த மிகவும் திறமை வாய்ந்த ஒரு சிறந்த நிருவாக அதிகாரியாகவே நான் அஸீஸ் அவர்களை காண்கின்றேன்.

இவர் தனது அதிகாரத்திற்கு அப்பால் சென்று இன மத மொழி வேறுபாடுகளை மறந்து முழு இனத்திற்கும் சேவையாற்றியவர் எதனையும் பொதுநல நோக்குடன் எப்போதும் சிந்தித்து அதன்பால் கருமங்களை ஆற்றக் கூடியவர். பிரதேச மற்றும் பிராந்திய அபிவிருத்திகளை அரசியல்-நிர்வாக பலத்துடன் மிக சாதுர்யமாக மேற் கொண்டு அடைந்து காட்டியவர்.

யுத்தம், சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டிருந்த மக்களுக்கு தனது சேவைக்காலத்தில் மீள்குடியேற 7500 இற்கும் மேற்பட்ட வீடுகளையும் வாழ்வாதார உதவிகளையும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பின் ஊடாகப் பெற்றுக்கொடுத்து மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றிய மிகப் பெரும் சாதனையாளர் என்பது வெள்ளிடைமலை.

இவர் தனது ஆற்றல், அர்ப்பணிப்பு மற்றும் சலிப்பற்ற தன்மை போன்றவற்றினூடாக கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சு, சுகாதார அமைச்சுக்களின் செயலாளராகவிருந்து அமைச்சுக்களை முன்னேற்றப்பாதையில் கொண்டுசென்றதன் காரணத்தினால் கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் ஆளுநருமான M.L.A.M. ஹிஸ்புல்லா முதலமைச்சர்களான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், நஜீப் அப்துல் மஜீத் மற்றும் ஹாபிஸ் நசீர் அஹமட் ஆகியோரின் பாராட்டுக்களையும் விருதினையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்கொப்ப இவர் எப்போதும் எதனையும் சிரித்தமுகத்துடன் திறத்தவர்களின் மனம் நோகாமல் அவர்களின் பிரச்சினைகளை அணுகி இருபாலாரும் திருப்தி காணும் அளவுக்கு தீர்வுகளை வழங்கியவர். இதன் காரணத்தினால்தான் இவர் முன்னாள் ஆளுநர் தற்காலத்தில் பாகிஸ்தான் நாட்டின் இலங்கைத் தூதுவராக செயற்படும் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம அவர்களினால் "My ever Laughing Secretary" என அழைக்கப்பட்டு அவரின் புகழாரத்தையும் பெற்றுக் கொண்டவர்.

ஓட்டுமொத்தத்தில் அஸீஸ் செயலாளர் அவர்கள் நற்பண்பு நல்லொழுக்கம் விடாமுயற்சி சமூகப்பற்று மனிதாபிமானம் ஆகியவற்றை தன்னகத்தே கொண்ட ஓர் சிறந்த நிர்வாகி. பகிரங்க சேவையில் 30 வருடங்கள் பூர்த்தியைப் பெற்றாலும் எதிர்காலத்தில் அவர்சார்ந்த சமூகத்திற்கு அவர் பெற்றுக்கொண்டவைகளை அடுத்தவாரிசுகளுக்கும் கைமாற்றவும் பயிற்றுவிக்கவும் அவர்களை பண்படுத்தி சக்தியூட்டவும் நீண்ட மனமகிழ்வுடன் கூடிய தேகாரோக்கியமான ஆயுளையும் ஆற்றலையும் உழைப்பையும் எல்லாம் வல்ல அல்லாஹ் அவருக்கு வழங்கி அருள்பாலிக்கவேண்டும் எனப் பிரார்த்தித்து எனது இந்த வாழ்த்துரையை வழங்க சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு அல்லாஹ்விற்கும் நன்றிக்கடன் தீர்க்கின்றேன்.

நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்..............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம்
අක්කරපත්තු සමස්ථ මුස්ලිම් පල්ලි සම්මේලනය
FEDERATION OF AKKARAIPATTU MOSQUES
Tel: 0777 043000 | Email : akppljumal@gmail.com Jummah Grand Mosque, Akkaraipattu, Sri Lanka

My No: AKK/FE/MOS/
Date : 25.11.2020

**பெருமையுடன் வாழ்த்துகிறோம்**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்.

கௌரவம் பெறும் கிழக்கு மாகாண செயலாளர், அல்-ஹாஜ் U.L.A. அஸீஸ் (SLAS. Spl) அவர்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதில் பெருமையுடன் இணைந்து கொள்கிறோம்.

அட்டாளைச்சேனை மண் பெற்றெடுத்த அருந்தவப்புதல்வர்களுள் ஒருவரான அல்ஹாஜ் அஸீஸ் (SLAS. Special) அவர்கள், இலங்கையின் நிருவாக சேவையில் இணைந்து அதன் உச்சம் தொட்டவர் ஆசிரியராக கல்விப் பணியை ஆரமபித்து மாணவரகளினதும், சக ஆசிரியரகள் பெற்றோர்களினதும் அபிமானத்தை பெற்றவர். நிந்தவூர் அல் அஷ்ரக் மகா வித்தியாலயம், அட்டாளைச்சேனை மத்திய கல்லூரிகளில் இப்பணிகளைச் செய்து பாராட்டுப்பெற்றவர்.

"ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும" எனும் வாசகத்திற்கேற்ப தன்னை ஒழுக்கநெறிகளோடும், சமயப்பற்று, சமூகப்பற்று என்பவற்றுடன் சாதிக்கவேண்டும் என்கிற ஆத்மார்த்தமான பண்புகள் நிரம்பிய ஒருவர். இவ்வாறான ஒருவரிடம் இலங்கையின் உயர் தரம்மிக்க சேவைகளில் ஒன்றான இலங்கை நிருவாக சேவையை இறைவன் வழங்கியிருந்தான். இந்தச் சேவையின் ஒரு பங்கினை புத்தளத்தில் ஆற்றி, அந்த மக்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்திருந்ததையும் நாம் அறிவோம்.

தனது சொந்த ஊரான அட்டாளைச்சேவையின் பிரதேச செயலாளராக பணியாற்றி சிறப்பான முறையில் நிருவாக சேவையினை வழங்கியிருந்தார். இக்காலப்பகுதியில் எமது பிரதேசங்களைத் தாக்கிய சுனாமி பேரவலத்தினை ஓரளவு தீர்ப்பதற்குரிய சக்தியை இறைவன் இவரிடம் வழஙகினான். அம்பாரை மாவட்டத்திற்கான மேலதிக அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராக இருந்து பொத்துவில் தொடக்கம் மருதமுனைப பிரதேசம் வரையிலான அனைத்து மக்களுக்கும் சுனாமியின் பின்னரான வாழ்க்கைக் கட்டமைப்பினை தனது ஆளுகைக்குட்பட்ட வகையில் வழமையான வாழ்க்கை முறைக்கு கட்டியெழுப்ப உதவிய அரச அதிகாரியாக திகழ்ந்தார். மக்களோடு மக்களாக பழகும் நற்குணம் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்தமையினால் இந்தப் பதவியின் மூலம் மக்களின் மனங்களில் தன்னை நிரந்தரமாக்கிக் கொண்ட ஒருவர்.

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சின் செயலாளராக இருந்து கிழக்கின் நிருவாகக்கட்டமைப்பினை மேம்படுத்தி அனைத்து இன மக்களுக்குமான சேவையினை வழங்கிய அல்ஹாஜ் U.L.A. அஸீஸ் (SLAS. Spl) அவர்கள், சிறந்த நிருவாகியாக அடையாளப்படுத்தப்பட்டவர். முதலமைச்சுக்குரிய பல்வேறு அமைச்சின் செயலாளர் பதவியின் மூலம் கிழக்கின் ஒளி போன்று, மாகாணத்தின் நிருவாக விடயங்களில் செயலூக்கமுள்ள ஒருவராக அறியப்பட்டார். குறிப்பாக, எமது பக்கத்து கிராமத்தைச் சேர்ந்தவர் என்ற வகையிலும் எமக்கும், எமது பிரதேசத்திற்கும் பல்வேறுபட்ட உதவிகளை அரச நிருவாகத்திற்குட்பட்ட வகையில் மேற்கொண்டிருந்தமையை நாம் மறந்துவிடவில்லை.

அந்த வகையில் கிண்ணியா மக்கள் எமது மாகாணத்தின் செயலாளருக்கு ஆத்மார்த்தமான இப்பெரு விழாவினை ஏற்பாடு செய்துள்ள, இச்சந்தர்ப்பத்தில் மனிதநேயப் பண்புகளோடு மிக நீண்ட கால நிருவாகப் பணிபுரிந்த அல்ஹாஜ் U.L.A. அஸீஸ் (SLAS. Special) அவர்களுக்கு அத்மார்த்தமான வாழ்த்துக்களைக் தெரிவித்துக் கொள்வதில் மன நிறைவு கொள்கிறோம்.

அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளத்தின் சார்பாக,

**அல்ஹாஜ். HCM. லாபீர் JP**
கௌரவ தலைவர்
**அல்ஹாஜ் MB. அப்துல் ஹமீது BA.**
**(Rtd.Principal)**
கௌரவ செயலாளர்

**AFFILIATED MOSQUES**

1) Akkaraipattu Jummah Grade Mosque - 067 2277361
2) Akkaraipattu Jummah Town Mosuque - 067 2277460
3) Akkaraipattu Jummah New Mosque - 067 2277215
4) Pallikkudyiruppu Jummah Mosque - 077 6160934
5) Paddiyadipitty Jummah Mosque - 077 2172333
6) Kathiriya Jummah Mosque - 067 2278154
7) Nooraniya Jummah Mosque - 071 8225423
8) Badur Jummah Mosque - 077 6381117
9) Essankanicheemai Jummah Mosque - 077 9895392
10) Alimnagar Jummah Mosque - 077 9226675
11) Iukkuchenai Jummah Mosque - 077 4645635
12) Velamarathuveli Jummah Mosque - 075 8608182
13) Mullaithivu Jummah Mosque - 077 7353844



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிரதேசத்தின் புகழ்பூத்த, மனிதநேயமிக்க நிருவாக அதிகாரி

**கலாபூஷணம் மீரா எஸ். இஸ்ஸடீன்,**
B.A, PGD, Cert. in Journ
தலைவர்
அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம்

இலங்கை நிருவாக சேவையில் நீண்ட காலம் பணியாற்றியுள்ள மரியாதைக்குரிய சகோதரர் யூ.எல்.ஏ. அஸீஸ் அவர்களைப் பற்றி நினைவுப் பெட்டகத்திலிருந்து சில பதிவுகளை உங்கள்முன் வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அன்புச் சகோதரர் அஸீஸும் நானும் பாட்டன் வழிச்(சகோதரர்கள்) சொந்தக்காரர்கள். இவர் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளராகக் கடமையைப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து நான் ஒரு ஊடகவியலாளனாகவும், தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் ஊடக இணைப்பாளராகவும் இருந்ததனால் பணியின் நிமித்தம் எங்களிருவரினதும் உறவு மிகப்பலமடைந்தது.

இவர் அட்டாளைச்சேனையின் பிரதேச செயலாளராக இருந்த காலம் ஒரு பொற்காலமாகும். இவரது நிருவாக எல்லைக்குள் மூவின மக்களும் வாழ்ந்து வந்தனர். இவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

அப்போது நமது தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்கள் கப்பல் துறைமுககங்கள் அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சராகப் பணியாற்றியமையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணியாற்ற இவருக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்தது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களையும், இடம்பெயர்ந்தவர்களையும் மீளக்குடியேற்றம் செய்ததுடன் நஷ்டஈட்டுத் தொகையையும், வாழ்வாதார உதவிகளையும் பெற்றுக் கொடுத்து மக்களின் கண்ணீரைத் துடைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலாளர் அஸீஸ் - தலைவர் அஷ்ர.்.ப் ஆகியோருக்கிடையே இருந்த நெருக்கம் மற்றவர்கள் மத்தியில் அதிகம் பேசு பொருளாக இருந்தது, ஏனைய நிருவாக அதிகாரிகள் கையைப் பிசைந்து கொண்டிருந்த நிலைமையும் காணப்பட்டது.

தீகவாப்பி, திராய்க்கேணி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளால் சிங்களவர்களும், தமிழர்களும் இவரால் அதிக நன்மையடைந்தனர். அனேகமாக இவரால் அடையாளப்படுத்தப்படும் விடயங்கள் சரியாக இருக்கும் என்று தலைவர் அஷ்ர.்.ப் நம்பினார்.

தலைவரின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் பயனாளிகளின் ஒத்துழைப்புடனான வீடமைப்புத் திட்டத்தில் இவருடைய நிருவாகக் கட்டமைப்புக்குள் அதிக வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்கு பயனாளிகளின் நீண்ட தொடர் பட்டியலில் தலைவரின் கையொப்பத்தைப் பெற்றுக் கொண்டார் எனலாம்.

தலைவரின் மறைவுக்குப் பின்னர் அவருடைய துணைவியர் முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துஜறு அமைச்சர் பேரியல் அஷ்ர.்.ப் அவர்களின் நம்பிக்கைக்கு உரியவராகவும் இருந்து தனது செயற்பாடுகளை சகோதரர் அஸீஸ் முன்னெடுத்தார்.

அமைச்சர் பேரியல் அஷ்ர.்.ப் அவர்களின் முயற்சியினால் சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சவூதி அரேபிய அரசின் உதவியுடன் 500 வீடுகளும் அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்துவதில் முன்னின்று உழைத்தவர்களில் இவரது பங்களிப்பை யாரும் மறந்திருக்கமாட்டார்கள்.

சுனாமிக்குப் பின்னரான காலகட்டத்தில் கரையோரப் பிரதேச மக்களின் அத்தியாவசியத் தேவைகளை கரையோரக் கச்சேரியின் மேலதிக அரசாங்க அதிபராக இருந்து நிவாரண உதவிகளின் உட்பாய்ச்சல்களை கரையோரத்தை நோக்கித் திருப்பியதுடன் நிருவாக செயற்திறனையும் விருத்தி செய்து கொண்டார்.

அமைச்சர்களான றஊப் ஹக்கீம், ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் மற்றும் இம்மாவட்ட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் சுமுகமான உறவைப் பேணியவர். டீ.எஸ். அஸீஸ் எல்லா அரசியல் தலைவர்களினதும் அன்பைப் பெற்றவர். செல்லப் பிள்ளையும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பணிவான மனித நேய நடவடிக்கைகள் எப்போதும் இவருக்கு மகுடம் சூட்டிக் கொண்டிருந்தன.

ஒருநாள் நானும், டெய்லிநியுஸ், தினகரன், வீரகேசரி பத்திரிகைகளின் ஊடகவியலாளரான சகோதரர் ஐ.எல்.எம். றிஸானும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அமைச்சர் பேரியல் அஷ்ர∴ப் பங்குபற்றிய கூட்டமொன்றுக்கு செய்திகளை சேகரிக்கச் சென்றிருந்தோம். கூட்டம் நிறைவடைந்து அதிகாரிகள் சென்றுகொண்டிருக்கும்போது இவர் தனியாக நின்றுகொண்டிருந்தார். சகோதரர் றிஸான் என்னிடம் 'தலைவர் நமது சங்க உறுப்பினர்களுக்கும் வாழ்வாதார உதவி கேட்டுப் பாருங்களேன்' என்றார்.

மறுப்பேதுமின்றி டீ.எஸ். அவர்களை அணுகி 'ப்றதர்'! அம்பாரை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கும் வாழ்வாதார உதவி தாருங்கள் என்றேன். மறுகணம் அவர் 'சகோதரரே'! உங்களுக்கு இல்லாததா? உங்கள் சங்கத்துக்கு மட்டுமல்ல கரையோரப் பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் சேர்த்துத் தருகின்றேன் லிஸ்டைத் தாருங்கள் என்றார்.

சகோதரர் றிஸானிடம் விடயத்தைக் கூறி சகலரது பெயர்களைம் ஒன்று சேர்த்து சுமார் 70 பேர் என்று நினைக்கின்றேன். அனைவருக்கும் சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொதிகளைத் தந்து உதவினார் என்பதை இத்தருணத்தில் நன்றியுணர்வோடு வெளிப்படுத்துகின்றேன்.

இன்னுமொரு நாள் ஊடக சகோதரர் ஒருவர் தொலைபேசியில் அவசரமாக என்னோடு உறவாடி பொலிசார் என்னைப் பிடிப்பதற்கு வலை வீசுகின்றார்கள். ஓஐசியுடன் பேசி என்னைக் காப்பாற்றுங்கள் என்று கூறினார்.

பொலிஸ் அதிகாரியைச் சந்தித்தபோது அவர் என்னிடம் உனக்கு உதவி செய்யுறதென்டா டீ.எஸ். அஸீஸ் மன்னிப்புத் தரவேண்டும். இல்லாட்டி அவர கூட்டுல போறத்தவிட எனக்கு வேற வழியில்லடா? என்று கண்டிப்புடன் தெரிவித்தார். அவரிடம் இன்ஷாஅல்லாஹ் சொல்லியவனாக

ஓரிரு நாட்கள் மறைந்திருந்த ஊடக சகோதரனை அழைத்துக்கொண்டு அஸீஸ் அவர்களைக் காணச் சென்றேன். அப்போது அவர் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றுண்டி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் அமரச் சொல்லி சிற்றுண்டியையும் வரவழைத்துத் தந்தார்.

அழைப்பாளர்கள் அவரது அலுவலகத்தைவிட்டு வெளியேற, வாங்க 'ப்ரதர்'! என்றவர் கூட வந்தவரையும் அழைத்து அவர் அமரச் செய்து நண்பர் தொடர்பில் சில விடயங்களைக் கூறி பொலிஸ் அதிகாரிக்கு அழைப்பை ஏற்படுத்தினார். அவருடைய பெருந்தன்மையைக் கண்டு நண்பன் ஆறுதல் பெருமூச்சுவிட்டான்.

தன்னைப்பற்றி பேஸ்புக்கில் யாரோ ஒருவன் கிறுக்கியதை யாருமே கண்டுகொள்ளாத நிலையில் அவரிடம் உறவாடிய ஒருவன் மாத்திரம் அந்த கிறுக்குக்கு 'லைக்' பண்ணியதைக் கண்டு மனம் சஞ்சலப்பட்டு தனது நண்பர்கள் சிலரிடம் கவலைப்பட்டாராம். அந்தளவு மென்மையான உள்ளம் கொண்டவர் சகோதரர் அஸீஸ் அவர்கள்.

ஆசிரியராக அரச சேவையைத் தொடங்கி, பிரதேச செயலாளராக, மேலதிக அரசாங்க அதிபராக, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக, முதலமைச்சின் செயலாளராக நிருவாகத் துறையில் விசேட தர அதிகாரியாக நாடறிந்த அதிகாரி, அன்புச் சகோதரன் சுகதேகியாக நீடூழிகாலம் வாழ்ந்து நாட்டு மக்களுக்கும், குறிப்பாக முஸ்லிம் சமூகத்துக்கும் தனது அனுபவப் பலத்தின் மூலம் நற்பணியாற்ற வல்ல நாயன் அல்லாஹ் அருள்புரிவானாக!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்–ஹாஜ் ILM. ஹாசிம் சூரி (மதனி) அவர்களிடமிருந்து

அஷ்ஷெய்க் I.L.M. ஹாசிம் சூரி (மதனி)
ஸ்தாபக அதிபர்: ஸஹ்வா அறபுக் கல்லூரி
தலைவர்: JASKA நலன்புரி அமைப்பு –
பாலமுனை

بسم الله الرحمن الرحيم

இளமை தொடக்கம் இன்று வரை எம்மோடு அன்புடனும் பண்புடனும் பழகிக்கொண்டிருக்கும் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் சகோதரர் அப்துல் அஸீஸ் அவர்களுக்கு

வழங்கப்படவிருக்கும் பாராட்டு மலருக்கு ஆசிச் செய்தி எழுதக் கிடைத்தமையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

சகோதரர் அவர்களிடம் நல்ல பல குணாதிசயங்களும் நற் பண்புகளும் காணப்பட்டன. அவைகளுள் ஆளுமை, அமைதி, பணிவு, மக்களோடு மக்களாய் பழகுதல், காரியத்தில் கண்ணாயிருத்தல் போன்றவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இப்பண்புகள் இருந்தமைக்கமைய பல பதவிகளும் இவரைத் தேடி வந்தன. பிரதேச செயலாளராக, மாகாண அமைச்சின் செயலாளராக, முதலமைச்சின் செயலாளராக நீண்ட காலம் அரச பணி புரிந்த இவர் இன்று பாராட்டப்படுவது எல்லோரினது மனங்களையும் மகிழ வைக்கின்றது.

மனித மனங்களில் குடிகொண்ட இவருக்கு திருமலை மக்கள் அளப்பெரிய பாராட்டைத் தெரிவிக்கின்ற இவ்வேளையில் அவரை நானும் பாராட்டுவதோடு திருமலை மக்களின் நன்றி உணர்வையும் பாராட்டையும் நன்கு மதிக்கிறேன். பாராட்டுபவர்களையும் பாராட்டுகிறேன்.

இன்னும் இப்பாராட்டு இவரது எஞ்சிய கால வாழ்வில் ஆன்மீக வழி நடக்கவும் அதன் பணி புரியவும் வழி சமைக்கும் என கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நீண்ட ஆயுள் பெற்று வாழவும் நற்பணிகள் பல புரியவும் வல்ல அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன்.

— அன்புளமும் ஆளுமையும் அழகிய புன் சிரிப்பும்
இன்னும் பல உளது இவரிடத்தில் என்றார்கள்.

— நற்பண்பு பெற்றவர்கள் நாமம் அழிவதில்லை
இப்பண்பு பெற்றவருள் இவரொருவர் என்றார்கள்.

— பண்பில் சிறந்ததனால் பல பதவிகள் உமக்கு
தந்தான் இறைவன். இது தகுதிதான் என்றார்கள்.

— அன்றிருந்து இன்று வரை அமைதி உந்தன் பண்பதனால்
அல்லாஹ்வின் அருள் பெறுவீர் என்று உமை
வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அட்டாளைச்சேனை மண்ணின் அஸீஸ் என்றொரு ஆளுமை"

சொல்லன்பன்
நசுறுதீன்
ஒலுவில்

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் மதிப்புக்குரிய யூ.எல்.அப்துல் அஸீஸ் அவர்களின் நிருவாக சேவையில் 30 வருட பூர்த்தியை முன்னிட்டு வெளியிடப்படும் பாராட்டு மலருக்கான ஆக்கம்.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

சுற்றும் பூமியின் சுறு சுறுப்பான உலகில் சற்றும் தளராத சாதனை மனிதர்களை சரித்திரம் பதித்து வைத்துள்ளது. பிறந்தவர்களும், இறந்தவர்களும் எண்ணில் அடங்காத மனித வாழ்வில், சமுத்திரத்தில் பெய்த மழைத்துளி ஒன்றைக் கவ்வி முத்துச் சிப்பியானதும் உண்டு.

மானிட வாழ்வு மறைந்த போதும் மங்காத நினைவுகளுக்குச் சொந்தக்காரர்களும் இல்லாமல் இல்லை. தன்னலம் கருதாது பொதுப் பணிகளில் தன்னை அர்ப்பணித்த வரலாறுகளை பூமிப்பந்து புன்னகையோடு தன் முதுகில் சுமக்காமலும் இல்லை.

துன்பங்களும், துயரங்களும், சோதனைகளும், வேதனைகளும், கஷ்டங்களும் நஷ்டங்களும் இதற்குப் பின்னால் இருப்பது என்பதும் உண்மையே.

உண்மையும், உறுதியும், விடாமுயற்சியும், வினைத்திறனும், சிந்தனையில் தெளிவும், மனதில் பக்குவமும், அணுகுமுறையில் புதுவடிவமும், ஆர்ப்பாட்டமில்லாத நகர்வுகளும், சிறப்பாக செயலாற்றும் நடைமுறையும், புன்னைகையோடு பழகுவதும், பொதுவுடமைகளில் பேணுதலும், பணிகளில் நேர்மையும், பார்வையில் ஒற்றுமையும் எல்லோர்க்கும் அமைவதில்லை.

அல்லாஹுத்தாலாவின் அருளும், அவனது தெரிவும், பார்வையும் சிலருக்கு சில நேரங்களில் கிரீடம் அணிந்து தரணியைத் தத்தெடுக்க வைக்கிறான். சமூகத்திற்கு சேவை செய்ய அனுப்புகிறான் அப்படிப்பட்ட ஒருவர்தான் ஜனாப் யு.எல்.ஏ.அஸீஸ் அவர்கள்.

பச்சைப் பட்டாடை அணிந்து பசுமைப்புரட்சியால் போர்த்திய இயற்கையின் எண்ணற்ற தாவரச் சோலை, பலவர்ணப் பறவைகள் பாடித்திரியும் நீர் நிலைகள், பழங்கால நிழல் மரங்கள் விரிந்த பிரதேசம். வானுக்கு முட்டுக் கொடுக்கும் வேளாண்மை வயல், வெட்டிப் பிரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் ஊரோடு ஒட்டிக் கிடக்கும் நீலக்கடல், சந்தனக் காற்றுக்கு தலையசைத்து வளி அனுப்பும் தென்னஞ்சோலை, குளங்களும், வளங்களும், மனங்களும் நிறைந்த அட்டாளைச்சேனை மண்ணின் புன்னகைமலர் இவர்.

பிறந்த இடம் எதுவாக இருந்தாலும் கிழக்கு மாகாணத்தை பொதுவாகவே பார்த்தார்கள். நிர்வாகத் துறையில் புதிய யுக்திகளை கையாழும் பாண்டித்தியமும், தன்னோடு பணியாற்றும் உத்தியோகத்தர்களை வழிநடத்தும் செயல்திறனும், பொதுமக்களோடு இணைந்து அவர்களின் பிரச்சினைகளை காதுதாழ்த்தி கவனமெடுக்கும் செயல்திறனும் காரியாலயங்களில் மக்களை காத்திருக்க வைக்காமல் களத்தில் இறங்கி தொழில்படும் விவேகமும், வினைத்திறன் மிக்க சேவையும் காலத்தால் அழியாத காவிய நாயகனின் கண்ணிறைந்த பாத்திரம்.

ஆசிரியராக உதவி அரசாங்க அதிபராக, பிரதேச செயலாளராக, தவிசாளராக, அமைச்சுச் செயலாளராக இன்னும் எத்தனையோ அத்தனை பதவிகளை சுமந்ததுடன்,

சாமஸ்ரீ, சமூக சேவை சிரோன்மணி, தியாக தீபம் ஆகிய விருதுகளை பெற்றும் இருக்கிறார்கள். இம்மண்ணை கௌரவப்படுத்தி இருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் மேடைப் பேச்சுக்களிலே தனக்கென்று ஒருபணியை அமைத்துக் கொள்வார். இலக்கிய ரசணையோடு பேசி பார்வையாளர்களை கலக்கிடும் அபார திறமைபடைத்தவர். ஆரம்பம் முதல் இறுதி வரை கூட்டம் களை கட்டி இருக்கும். அதற்காகவேதான் எந்தமேடையிலும் இறுதிப் பேச்சாளராகவே இவரை வைத்திருப்பார்கள்.

2006ஆம் ஆண்டு எனது சிறுகதைத் தொகுதியான “ **கிண்ணஞ்சொட்டு**” வெளியீட்டு விழாவுக்கு பிரதம அதிதியாக வந்து சிறப்பிக்க வேண்டும் என்ற அன்புக் கட்டளையை மதித்து மழை என்றும் பாராமல் குறித்த நேரத்திற்கு வந்து “ இது ஒங்கடவிழா இல்ல என்ட விழா ” என்று சிரித்த முகத்தோடும் உரிமை கலந்த உணர்வோடும் பேசும் செப்படி வித்தை யாருக்கு வரும்.

அட்டாளைச்சேனை பிரதேச கலை இலக்கிய பேரவையை உருவாக்கி அதில் இணைந்து பணியாற்றிய அந்த வசந்த காலத்தை நினைத்து இன்றும் அசந்துபோனேன்.

தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் நினைவாக கவிதை ஒன்று எழுதி ஒழுவில் வாசிகசாலையில் “பிரேம்” போட்டு தொங்கவிடப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற நன்றி உணர்வுக் கட்டளையை சிரம் மேற்கொண்டு செய்ததுடன், எந்தளவுக்கு பற்றும் பாசமும் நட்பும் இதற்குப் பின்னால் இருக்கின்றன என்பதை நினைக்கும் போது உண்மையில் இது இதயங்களின் சங்கமமாகவே இருக்கும் என்பதை வருங்காலம் சாட்சி பகரும்.

ஆரம்பகால ஆசிரிய பணி மூலம் பொறுமை, விட்டுக்கொடுப்பு, திட்டமிடல், சாதிக்கத் துடிக்கும் மனது எல்லாம் ஒரு பயிற்சிப் பாசறை. ஒரு மகத்தான பணி மூலம் சிறப்பாக இளம் சந்ததிகளை உருவாக்கும் ஒத்திகை காலம். குறிப்பாக இளம் சந்ததியினரின் மனதை நாடிபிடித்து உறங்கு நிலையில் காணப்படும் ஒவ்வொருவர்களின் திறமைகளையும் வெவ்வேறு கோணங்களால் வெளியே கொண்டு வரும் முயற்சி இலகுபட்டதல்ல.

அந்தப் பயிற்சியும் முயற்சியும் தான் பிற்பட்ட காலத்தில் இனம், மதம், மொழி, நிறம், பிரதேசம் என்ற பாகுபாடு, வேறுபாடும் இல்லாத கொள்கை பிரகடனம் கோலோச்சி நின்றது. கிழக்கு மாகாண மக்களின் பொருளாதாரம் அக்காலப் பகுதியில் மேம்பட்டதாகவே இருந்ததாக சில புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

விவசாயத்துறை, கால்நடைவளர்ப்பு, உபஉணவு உற்பத்தி வேலை வாய்ப்பு எல்லாம் அமைச்சுச் செயலாளரின் வழிக்காட்டலில் அதிகம் தங்கி இருப்பதை அறிய முடிகிறது.

கிழக்கு மாகாணத்திற்கு சொந்தமான இப்பெரும் சொத்து மக்களுக்குக் கிடைத்த வரம். இப்பெருமகனைப் பாராட்டி விழா எடுப்பதனால் பூமிப்பந்து பூரிப்படைகின்றது. வானம் மேக மழை பொழிந்து வாழ்த்துப் பாடுகிறது. ஓய்வு என்பது உண்மையில் ஆய்விற்கான ஆரம்பம்.

முப்பது வருட கால மக்கள் சேவை முன்னோடியின் முது பெருவிழாவை மக்களே முன்நின்று மகுடம் சூட அணிதிரளும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு. சமூகத்திற்கும் இந்த நாட்டிற்கும் ஏனைய மக்களுக்கும் தம்மை முழுமையாக அர்ப்பணித்த துறை சார்ந்த புத்திஜீவியின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்பது வாஸ்தவம்.


இவ்வனைத்திற்கும் அல்லாஹ்வின் அருளும், நோய் நொடியின்றி குடும்பங்களோடு நீண்ட காலம் வாழ வேண்டும் என்றபிரார்த்தனையுடன்,

தனது ஆளுமைத் திறமையால் கடந்த முப்பது வருட காலமாக இருப்பை அலங்கரித்து மக்கள் சேவை செய்யும் இப்பெருவிழாவின் கதாநாயகனை வாழ்த்தி எழுத சந்தர்ப்பம் வழங்கிய மலர் குழுவினர்களுக்கு நன்றி கூறியவனாக விழா வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

"ஜஸாக்கல்லாஹு ஹைரா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு கைத்தொழில் நிலையம் முன்னாள் ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம அவர்களினால் திறந்து வைக்கப்பட்ட போது (அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புள்ளாஹ் அவர்களும் இதில் கலந்து கொண்டார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தான சேவகன்

**ஏ.எஸ்.எம். பாயிஸ்**
திட்டமிடல் பணிப்பாளர்
சுகாதார அமைச்சு, கி.மா

மாகாணத்தின் நிருவாக சேவையில் அனுபவமும் சிரேஷ்டத் தன்மையும் கொண்ட கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சின் செயலாளர் ரு.டு.யு அஸீஸ் அவர்களின் 30 வருட நிருவாக சேவையை பாராட்டி Ktv மற்றும் கிண்ணியன் நெட் இணைந்து வெளியிடவுள்ள இம் மலரில் எனது படைப்பும் இடம்பெற வாய்ப்பளித்த இறைவனுக்கும் குழுவினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஜனாப் U.L.A அஸீஸ் அவர்களுடன் முதலமைச்சு செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும் கிழக்க மாகாணத்தின் வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளராகவும் சுற்றுலா பணியகத்தில் பணிப்பாளர் நாயகமாகவும் இணைந்து பணியாற்றியுள்ளேன். குறிப்பாக அமைச்சின் செயளாலராகவும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளராகவும் இருந்து சிறந்த கொள்கைகளை வகுத்து எமக்கு சிறப்பான விழிகாட்டலை செய்த பெருமை இவரைச் சாரும்.

வீடுகளை பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கும்போது மூவின மக்களையும் கவனத்திற் கொண்டு பகிர்ந்தளிக்குமாறும் சமமான அபிவிருத்தி என்ற மூலக் கொள்கையை பின்பற்றுமாறும் வலியுறுத்துவார். இது தவிர இங்கு பணியாற்றிய தற்காலிக உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் நிரந்தரமாக்கும் பொருட்டு ஆளணி ஆணனக்குழு மற்றும் அமைச்சுக்களுக்கு சென்று அரப்பணிப்புமிக்க பணிகளை ஆற்றினார். இவ்வாறே கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்திற்கும் ஆளணியை உருவாக்கி அவர்களினூடாக இந்நிறுவனங்கள் தொடர்ந்தும் இயங்குவதற்கு அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை வழங்கினார்.

கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் உருவாக்கத்தில் எமது குழுவினருக்கு சிறந்த ஆலோசனைகளைகளை வழங்கி மாகாணத்தின் முக்கிய இடங்களில் சுற்றுலாப்பயணிகள் சேவையைப்பெறும் உயரிய நோக்கில் சுற்றுலா வழிகாட்டல் மையங்களை உருவாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் முதலமைச்சர் 'Invest in East' என்ற திட்டத்தை உருவாக்கி சர்வதேச ரீதியாகவுள்ள முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்ய எடுத்த முயற்சியில் நானும் அவரும் முன்னாள் முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் அவர்ளுடன் இணைந்து பல தியாகங்களை செய்து உழைத்தமையை இவ்விடத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள இளைஞர்களும் யுவதிகளும் அரச தொழில் ஒன்றை அல்லது அரச சார்பற்ற தொழில் ஒன்றை பெறவேண்டும் என்பது எமது நோக்கமாக இருந்தது இதற்காக U.L.A அஸீஸ் அவர்கள் முன்னாள் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், மற்றும் ஏனைய அமைச்சர்களுக்கு தனது ஆலோசனையை வழங்கி மாகாணத்தில் திண்மக்கழிவு செயன்முறை, வடிகாலமைப்பு, மைதானங்களின் அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி என பல கருத்திட்டங்களை உருவாக்கி அதில் வெற்றியும் கண்டார்.

நாங்கள் ஏதாவது செயற்பாடுகளில் சோர்வு அடைந்தால் உற்சாகமூட்டி சிறந்த ஆலோசனைகளை வழங்கி எம்மை ஊக்கப்படுத்துவார். இரவு வேளைகளிலும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு குறித்த விடயம் தொடர்பில் வினவுவதுடன் அடுத்த நாளைய நிகழ்ச்சி நிரலையும் தந்துவிடுவார். இதனால் அடுத்த நாள் குறித்த வேலையை முடிக்கும்படி நானும் பணியக உத்தியோகத்தர்களை தொல்லைப்படுத்த வேண்டிய தேவை இருந்தது

பொதுவாக அலுவலகங்களில் புதன் கிழமைதான் பொதுமக்கள் தினமாக இருக்கும் ஆனால் முதலமைச்சில் ஐந்து நாட்களும் பொதுமக்கள் தினமாகவே காணப்படும். சேவை நாடி வந்த எவரையும் திருப்பி அனுப்பியது கிடையாது. இது இவரின் பரந்த மனோநிலைக்குச் சான்றாகும் மேலும் வளங்கள் வீண்விரயமாவதை தடுக்கும் எண்ணமும் கிராமங்களிலுள்ள கடைகள், கால்நடைகள், செடி கொடிகளை அதிகம் நேசிப்பதும் இவரது சிறந்த குணவியல்பாகும். இது எனக்கும் சக திணைக்களத் தலைவர்களுக்கும் ஒரு முண்ணுதாரனமாகவும் அமைந்துள்ளது

நான் பணியாற்றிய இரு நிறுவனங்ளையும் அமைச்சையும் தவிர உள்ளூராட்சி திணைக்களத்தில் பல உபவிதிகள் இயற்றப்படுவதற்கும் கிராம தொழிற்துறை திணைக்களத்தினால் கண்காட்சிகள் நடாத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மவர்களின் படைப்புக்களுக்கு அங்கீகாரத்தையும் சந்தைப்படுத்தலையும் உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். இது தவிர அமைச்சுக்கு கிடைக்கும் நிதியில் சகல பிரதேசங்களும் பயன்பெறும் நோக்கில் மரநடுகை, சிறுவர் பூங்காக்கள், உள்ளூராட்சி மன்றங்களின் கட்டடங்கள் என பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தமை விசேட அம்சமாகும்.

முதலமைச்சின் செயலாளராக இருந்த காலத்தில் பல நாடுகளுக்கும் விஜயங்களை மேற்கொண்டு பயிற்சிகளையும் அனுபவங்களையும் பெற்று அதனை முதலமைச்சலும் திணைக்களங்களிலும் அமுல்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டார். இதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியையும் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறு பல வழிகளிலும் தனது சக்திக்கு உட்பட்ட வகையில் பல்வேறு செயற்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் முன்வைத்து மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்திகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினார். கிழக்கு மாகாணத்தில் இவரின் பதவிக் காலத்தில் கடமையாற்றிய ஆளுனர்கள், முதலமைச்சர்கள், ஏனைய அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் என அனைவருடனும் நட்புறவுடன் நடந்து ஒரு முன்மாதிரியான நிருவாக சேவையாளராக மூன்று தசாப்தங்களாக இவர் கடமையாற்றியுள்ளார். இவரின் ஈருலக வாழ்வும் வெற்றி பெறுவதற்கும் இவரின் உள்ளத்தைப் போன்றே இவருக்கான எல்லா வழிகளும் விசாலமாக வேண்டுமென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமைகளையும், ஞாபக சக்திகளையும் அணிகலன்களாகக் கொண்டவர்

S.M.M. ஹனீபா –JP
(BA, PGDE, PGDEM, Dip in Eng, SLPS)
உதவி தவிசாளர்,
பிரதேச சபை, அட்டாளைச்சேனை.

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் மதிப்புமிகு அல்ஹாஜ் U.L.A. அஸீஸ் அவர்கள் அரச நிருவாக சேவையில் ஆற்றிய பணியை பாராட்டி வெளியிடப்படும் வரலாற்று மலருக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அல்ஹம்துலில்லாஹஹ். எமது அழகிய இலங்கைத்தீவின் கிழக்கு மண் பெற்றெடுத்த அட்டாளைச்சேனையின் புகழ்பூத்த கல்விமானாக அரச நிருவாக சேவை உயர் அதிகாரியாக அன்பிற்குரிய U.L.A. அஸீஸ் அவர்கள் காணப்படுகின்றார்.

தனது இளமைக்காலத்தில் தனது பிரதேசத்தின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டை மேற்கொள்வதற்கு கல்வி வட்டத்தை அமைத்து பல சேவைகளை மேற்கொண்டமை எம் கண் முன் நிழலாடுகிறது. இன்று இந்த அமைப்பு அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகம் என்ற பெயரில் பல்நூறு அரிய பல சேவைகளை செய்து வருகிறது.

அத்துடன் மக்களுக்கு நீதி, நியாயம் மற்றும் உரிமைகள் மறுக்கப்படும் போது அதனை எதிர்த்து பல சந்தர்ப்பங்களில் பல சத்தியாக்கிரகங்களில் பங்கு பற்றி தலைமைத்துவம் வழங்கி மக்களின் கண்ணீரைத்துடைத்த யுகபுருஷர் எம் மதிப்புமிகு அஸீஸ் சேர்...

அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் கல்விகற்று பின் பேராதனை பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி கற்று ஆசிரியர் சேவையில் காலடி வைத்து பின் இலங்கை அரச நிருவாக சேவை பரீட்சையில் சித்தியடைந்து பிரதேச செயலாளராக பதவியேற்று கிழக்கு மாகாண சபை அமைச்சின் செயலாளராக பதவியுயர்வு பெற்று இன்று அத்தனை அமைச்சுக்களின் தலைமையாக உள்ள முதலமைச்சின் கௌரவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளராக பணியாற்றுவதென்பது நமது மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமையாகவுள்ளது.

எப்பொழுதும் எந்த விடயத்திலும் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், அமுல்படுத்தல், கட்டுப்படுத்தல், பயன்களை பெற்றுக்கொடுத்தல், மீள வலியுறுத்தல் போன்ற முகாமைத்துவ கூறுகளில் கவனம் செலுத்தி காரியத்தை சாதிப்பதில் வல்லவராக நமது முதலமைச்சு செயலாளர் மதிப்பிக்குரிய U.L.A. அஸீஸ் அவர்கள் காணப்படுகின்றார். அவரது அனைத்து செயற்பாடுகளும் நமது எதிர்கால சந்ததியினருக்கு முன்னுதாரணமாகும்.

திறமையும், ஞாபகசக்தியும் அவரிடம் காணப்படும் மிக முக்கிய அணிகலன்கள். அதனால் அவர் அடக்கமும், அன்புமிக்க ஆளுமையாக எம் மக்கள் மத்தியில் மிளிர்கிறார்.

ஆளுமை அன்புமிகு முதலமைச்சு செயலாளர் மதிப்புமிகு அஸீஸ் அவர்கள் எமது மண் பெற்றெடுத்த பொக்கிஷம் என்றால் அது மிகையாகாது. அவரை நான் நன்றியுணர்வோடு பாராட்டுகிறேன். அவர்கள் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக இருந்த காலத்தில் எமது பிரதேசத்திற்கு ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்காது. பெருந் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் அமைச்சராக இருந்த போது அவருடன் இணைந்து தேசிய மீலாத் விழா, மீலாத் நகர், அஷ்ரப் நகர், ஹுசைனியா நகர் போன்ற மாதிரிக் கிராமங்கள் மற்றும் பல நன்னோக்குத் திட்டங்களமைத்து ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றியவர் என்பது எம்மக்களால் மறக்க முடியாத விடயமாகும்.

ஆளுமை நிறைந்த அன்பிற்கினிய அஸீஸ் சேர் அவர்கள் இன்று போல் என்றும் வாழவும் அவரின் ஈருலக வாழ்வு சிறக்கவும் ஏகவல்ல இறைவனிடம் இருகரமேந்தி பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரவாரமின்றி அமைதியாகப் பணியாற்றுபவர்

ஏ.ஸீ.எம்.முஸ்இல்
திட்டமிடல் பணிப்பாளர்
கல்வியமைச்சு, கி.மா

எவ்வித ஆரவாரமுமின்றி அமைதியாக தனது பணியை திறம்பட செய்து வருபவர் ஜனாப். யூ.எல்.அப்துல் அஸீஸ் அவர்களாவர். அட்டாளைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர உத்தியோகத்தர். தற்போது விசேட தரத்தில் உள்ள 417 உத்தியோகத்தர்களுள் முதுமுறையில் (Seniority) தேசிய ரீதியில் 29வது இடத்திலுள்ளவர்.

ஆசிரியராக சுமார் 5 வருடங்கள் பணியாற்றிய இவர் இலங்கை நிர்வாக சேவை திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்று 1990 இல் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராகக் கடமையேற்றார்.

2000.08.09 இல் இலங்கை நிர்வாக சேவையின் 2 ஆம் தர உத்தியோகத்தராக பதவியுயர்வு பெற்ற இவர் 2004.01.07 இல் முதலாந்தர உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றார். 2009.01.07 இல் இச்சேவையின் விசேட தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்ட இவர் இத்தரத்தின் முன்னணி உத்தியோகத்தர்களுள் ஒருவராகப் பணியாற்றி வருகின்றார்.

உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர் எனப் பல பதவிகளை வகித்து பாமர மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்து கொடுத்தவர் இவர்.

வடக்கு மாகாணத்துடன் இணைந்திருந்த கிழக்கு மாகாணம் உயர்நீதிமன்றத் தீர்ப்பையடுத்து 2008 இல் தனியாகப் பிரிந்து செயற்படத் தொடங்கியது. இம்மாகாண சுகாதார அமைச்சின் முதல் செயலாளராகப் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு. எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புழ்ழா, எம்.எஸ்.சுபைர் ஆகிய சுகாதார அமைச்சர்களோடு இவர் இணைந்து பணியாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2012 இல் கிழக்கு மாகாண முதலமைச்சு செயலாளராகக் கடமையேற்ற இவர் இன்று வரை அப்பதவியை வகித்து வருகின்றார். கிழக்கு மாகாணத்தில் தற்போது கடமையில் உள்ள இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுள் மிகவும் சிரேஷ்டமானவரும், ஒரே பதவியை நீண்ட காலம் வகித்து வருபவரும் இவர் மட்டுமே ஆவார்.

ஹாபிஸ் நஸீர் அஹ்மத், நஜீப் ஏ மஜீத் ஆகிய இரு முதலமைச்சர்களுடன் இணைந்து இவர் பணியாற்றியுள்ளார். அதேபோல ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம, ஒஸ்ரின் பெர்ணாண்டோ, ரோஹித போகொல்லாகம, எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புள்ளா, ஷஷான் விஜேலால் டி சில்வா, அநுராதா யகம்பத் ஆகிய 6 ஆளுநர்களின் கீழ் இவர் பணியாற்றியுள்ளார். இவரது சேவையின் சிறப்பை விளங்கிக் கொண்ட இந்த ஆளுநர்கள் ஏனைய செயலாளர்களது பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தினாலும் இவரது பதவியை மாற்ற முயற்சிக்கவில்லை.

தனது பதவியில் படிப்படியான முன்னேற்றங்களை கண்டுள்ள இவர் இப்பதவிகளின் மூலம் பல அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார். அந்த அனுபவங்களின் அடிப்படையில் இன, மத, மொழி பேதமற்ற முறையில் இவரது சேவை அமைந்திருந்தது.

தனக்குக் கீழ் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுடன் மிகவும் சாந்தமான முறையில் நடந்து கொள்ளும் பண்பு இவரிடம் நிறைந்திருந்தது. அவர்களது சுக துக்கங்களில் பங்கு பற்றி சகல ஊழியர்களினதும் நன்மதிப்பை இவர் பெற்றிருக்கின்றார்.

ஆரவாரமற்ற முறையில் தனது நிர்வாக நடவடிக்கைகளை இவர் முன்னெடுத்து வந்துள்ளார். இவரது நிர்வாகத்திறமையின் வெளிப்பாடுகளுள் ஒன்று தான் சிறந்த கணக்காய்வுக்கான தேசிய தங்க விருது இவரது அமைச்சுக்கு கிடைத்தமையாகும்.

சிறிது காலம் இவரது விடுதிக்கு அயல் விடுதியில் குடியிருக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அயல் வீட்டார்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற நல்ல பல விடயங்களை இவரது நடவடிக்கை மூலம் எனக்கு அறியக் கிடைத்தது.

வளர்ந்து வரும் அரச உத்தியோகத்தர்கள் இவரது நிர்வாக நடவடிக்கைகளைக் கவனத்தில் கொண்டு செயற்பட்டால் எதிர்காலத்தில் யாவரும் போற்றும் சிறந்த உத்தியோகத்தர்களாக மிளிர முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் தொண்டன் அஸீஸ் சேர்...

**எஸ். தஸ்தகீர்**
பிராந்திய உணவு மருந்துகள்
பரிசோதகர்(ஓய்வு நிலை)
உதவி மாவட்ட ஆணையாளர்
இலங்கை சாரணர் சங்கம்
அக்கரைப்பற்று

கிழக்கிலங்கையின் ஒரு தேனகம்
பல் கலையின் ஒரு வாகடம்
கல்வி மான்களின் இருப்பிடம்
பொன் விளையும் மாநிலம்,

விரிந்த கடல்வளம் கிழக்கின் முகம்
பச்சை நிற வயல்வளம் மேற்கின் முகம்
பல்கலைக்கழகமங்கு வடக்கின் முகம்
அக்கரையூர் அமைவிடம் தெற்கின் முகம்,

அட்டாளைச்சேனையது அறிஞர் சூழ் மண்
அஸீஸ் எனும் ஆளுமையைப் பெற்றெடுத்த மண்
உயர் பதவிகள் அனைத்தையுமே உள்வாங்கிய மண்
வந்தோரை உபசரித்து ஆதரிக்கும் மண்,

சேனையூர் பெற்றெடுத்த ஒரு வித்து
நிர்வாகத்திலே அது ஒரு முத்து
இழக்கவொண்ணா எம் சொத்து
எம் சமூகத்தின் ஒரு மூச்சு
அது அஸீஸ் எனும் ஒளிக்கீற்று,

இரண்டு வகைப் பட்டங்கள் முதுமானியிலே
விசேட தரம் ஒன்று நிர்வாகத்திலே
தரத்திற்கு ஏற்றாற்போல் கதிரையில்லை
என்றாலும் சலனங்கள் ஏதும் வெளியிலில்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத் திறமையை புலரச் செய்வார்
சிரித்துக் கொண்டே அதைப் புரிய வைப்பார்
காரியத்தில் கண்ணாய் இருந்திடுவார்
கடைசியில் விடயத்தை வென்றிடுவார்,

அன்று பார்த்த அதே முகம்தான்
இன்றும் இளமைத் தோற்றமுடன்
அஸீஸ் சேரின் மாறாக் கவர்ச்சி
அதன் புதிர் இன்னும் எமக்குப் புரியவில்லை,

கற்றுக் கொடுக்கும் ஆசிரியர் பணியில்
கன நாள் இருக்க கிடைக்கவில்லை
இருந்தாலும் அக்கால சாதனைகள்
மறக்கவொண்ணா தடயங்கள்,

உதவி அரச அதிபராக
உலகமறியச் சேவை செய்தாய்
பிரதேச செயலாளர் பதவியினை
பிற மதம் போற்றிட வியக்கவைத்தாய்,

சுகாதார அமைச்சின் செயலராக
இருந்த காலம் முழுவதுமே
புதிய சாலைகள் தோற்றங்களுடன்
பழைய சாலைகள் தரமுயர்த்தி
வைத்தியத் துறையை வளரச்செய்தாய்,

மாகாண முதலமைச்சின் செயலராக
பல்லாண்டு காலம் பணியாற்றி
முதலமைச்சர் பலரின் பாராட்டை
விருதுகள் பெற்று நிரூபித்தாய்,

அயராத உழைப்பில் நீ மூழ்கியதால்
“மக்கள் தொண்டன்” பட்டமுடன் கௌரவமும்
மா மனிதர் அஷ்ரப் உமக்களித்து
மகுடத்தில் ஏற்றி அழகு பார்த்தார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த பதவி எதுவானாலும்
தரமாய்ச் செய்து முடித்திடுவாய்
இன ஒற்றுமையின் பாலமாக
வாழ்வில் என்றும் செயற்பட்டாய்,

களங்கமில்லா உனதுள்ளம்
கறை படியாத உன் கரங்கள்
புன்னகையோடுள்ள முகமலர்ச்சி
இவை சேர்க்கும் உனை மறுமைக்கு,

அகத்தினழகு முகத்தினிலே
அப்பட்டமாகத் தெரியுதிங்கே
அது போல உன் எதிர்காலம்
சீராய் சிறப்பாய் அமைந்துவிட
ஆதியும் அந்தமும் இல்லாத
அல்லாஹ் நாயனை இறைஞ்சுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிங்கப்பூரில் முன்னாள் ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம
அவர்களுடனான நிகழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயங்களில் வசிப்பவர்

**கவிஞர் எஸ்.ரபீக்**
சிரேஷ்ட அறிவிப்பாளர்,
இலங்கை வானொலி.

ஜனாப் யூ.எல்.ஏ அஸீஸ் அவர்களை முதன் முதலில் நான் சந்தித்தது மேடை நிகழ்ச்சி ஒன்றில் தான்.

அதன் பிறகு இலக்கிய விழாக்கள்,இலக்கிய ஒன்றுகூடல்கள்,வானொலி நேர்காணல் என்று இந்த இருபத்தைந்து வருடத்துக்குள்ளும் எத்தனையோ தித்திக்கும் சந்திப்புகள்.

கலை உள்ளம் கொண்ட கல்வியாளர் அவர்.

அதிர்ந்து பேசாத அவரது கனிவான மொழியும்,

ஆரவாரமில்லாத தன்னடக்கமும் பல முறை என் மனதை நெகிழவைத்திருக்கின்றன.

அவருடைய பணியின் தொடக்க காலத்திலும் சரி, இத்தனை உயரங்களைத் தொட்ட பிறகும் சரி மனித நேயமிக்க மகத்தான மனிதராகவே அவரை நான் பார்த்திருக்கிறேன்.

மொழியின் மீது அவருக்கு இருக்கும் ஆழ்ந்த அறிவும், இலக்கியத்தின் பால் அவர் கொண்டிருக்கும் அதிகபட்ச நேசமும் கண்டு நான் நிறையவே வியந்திருக்கிறேன்.

ஒரு விடயத்தை அவர் அணுகும் முறை,கருத்துக்களை சீர்தூக்கி பார்க்கும் விதம் என்னை சிந்திக்க வைத்திருக்கின்றன.

புயலைக்கூட ஒரு புன்னகையுடன் கடந்து செல்லத் தெரிந்தவர் அவர்.

அவர் ஆற்றுகின்ற நேரிய பணியினாலும், சமூக அக்கறையினாலும் மக்கள் மனங்களில் ஒரு நட்சத்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் அவர்.

தனது சிறப்பான சேவைகளுக்காக அவர் பாராட்டப்பெறும் இந்த வேளை, நானும் என்னுடைய நெஞ்சமெனும் நந்தவனத்தில் மலர்ந்த வார்த்தை மலர்களால் அவரை வாழ்த்தி மகிழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவேறுபாடு இல்லாத இனிமையான மனிதர்

**ஞா. பாக்கியராஜா,** JP
கோளாவில் - 02
அக்கறைப்பற்று விபுலானந்தா இல்ல பணிப்பாளர் சபை உறுப்பினர்

அன்புக்கும் மரியாதைக்குமுரிய யூ.எல்.ஏ.அஸீஸ் ஐயா அவர்கள் அட்டாளைச்சேனை அல் முனீரா வித்தியாலயம், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலைகளில் கல்வி கற்ற காலத்திலிருந்து ஒரு சிறந்த மாணவனாக இருந்தார் என்பதை நான் நன்கு அறிவேன். வளரும் பயிரை முளையில் தெரியும் என்ற முதுமொழிக்கேற்ப இவருடைய திறமை இளம் வயதிலேயே தெரிந்த ஒன்றாக காணப்பட்டது.

அன்புள்ளம் கொண்டவராகவும் பண்பு நிறைந்தவராகவும் எவர் மனதையும் புண்படுத்தாத ஒருவராகவும் உதவி செய்யும் மனப்பாங்கை கொண்டவராகவும் இவர் காணப்பட்டதுடன் எந்நேரமும் புன்னகை பூத்த முகத்துடன் இருப்பதையும் நான் பல சந்தர்ப்பங்கிளல் கண்டு வியப்படைந்திருக்கின்றேன். நான் அட்டாளைச்சேனை தபாலகத்தில் கடைமை புரிந்து கொண்டிருந்தபோது இவர் பிற்பகல் நேரங்களில் தபாலகத்திற்கு வந்து அரச வரத்த்தமானியை பார்வையிட்டு செல்வதை வழக்காமாக கொண்டிருந்தார். இதன் காரணமாக இவருடன் நெருங்கி பழகும் சந்தர்ரப்ம் எனக்கு ஏற்பட்டது. இவர் அன்புடன் பேசிப்பழகும் விதம் என்னை மிகவும் கவர்ந்திருந்ததன் காரணமாக மென்மேலும் இவருடன் நெருக்கமாக பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவர் பாடசாலையைவிட்டு வெளியே வந்து சில காலம் ஆசிரிய சேவையில் இணைந்து செயற்பட்ட காலங்களில் கூட சிறந்த ஒரு மாணவ சமூகத்தை உருவாக்கும் நிமித்தம் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டதை நான் என் கண்கூடாக கண்டிருக்கின்றேன்.

இவர் இலங்கை நிருவாக சேவையில் இணைந்து பல்லின மக்களுக்கும் ஆற்றிய சேவை பல்லின மக்களாலும் பாராட்டப்பட்டதை யாரும் மறந்து விட முடியாது. சாதி சமயம் பாராது இவர் ஆற்றிய பணி எல்லோராலும் பாராட்டைப்பெற்றுக் கொண்டது. நான் ஓய்வு பெற்ற பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறைப்பற்று விபுலாநந்தா மாணவர் இல்லத்தின் பணிப்பாளர் சபையின் இருந்த காலத்தில் அஸீஸ், செயலாளர் அவர்கள் தனது கடமையின் நிமித்தம் இல்லத்திற்கு வருகை தந்து தாய் தந்தையை இழந்து தவிக்கும் இம்மாணவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகளை பேசி இம்மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பேருதவி புரிந்தவராக காணப்படுகின்றார்.

ஏழ்மையில் உள்ள இல்ல மாணவர்களுக்கு பல விதங்களிலும் உதவிகள் புரிந்த ஒருவராகக்காணப்படுகின்றார். இனிவான கனிவான பேச்சும், பழகும் விதமும் விபுலாநந்த இல்ல மாணவர்களுக்கும் பணிப்பாளர் சபையினருக்கும் இவர்பால் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இவருடைய 30 வருட சேவையில் இவர் மக்களுக்கு ஆற்றிய அளப்பெரிய சேவையை நாடே நன்கு அறியும். இவருடைய சேவைகள் மேலும் மெலும் தொடர்ந்து சென்று மக்களின் தேவைகள் நன்கு பூர்த்தி செய்யப்பட வேண்டும் என இறைவனை வேண்டியவனாக முடிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழகுதற்கினிய பண்பாளன்

A.L.கிதுறு முஹம்மது, அதிபர்
உப தவிசாளர்
மத்தியஸ்த சபை,
அட்டாளைச்சேனை

கிழக்கு மாகாண முதல் அமைச்சின் செயலாளர் அன்புக்குரிய அப்துல் அஸீஸ் அவர்களது நிருவாக சேவையின் முப்பது வருடங்களைப் பூர்த்தி செய்யும் ஞாபக மலருக்கு செய்தியொன்றை எழுதி வழங்குவதில் மட்டற்ற வகையில் மகிழ்கிறேன்.

15 வருடங்களுக்கு முன்பு அட்டாளைச்சேனையின் பிரதேச செயலாளராக இருந்து மாவட்ட மேலதிக அரச அதிபராக பதவியுயர்வு பெற்ற அஸீஸ் அவர்களை வாழ்த்தி மலர் ஒன்றை வெளியிடத் தீர்மானித்து குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது. இறையடி எய்திய முன்னாள் தென்கிழக்குப்பல்கலைக்கழக பேராசிரியர் வைத்தியர் கே.எம்.எச்.காலிதீன் சேர் அவர்களது தலைமையில் அக்குழு அமைக்கப்பட்டது. அதில் மலர்க்குழுவுக்கு பொறுப்பாக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். அப்போது எனக்கு கட்டுரை ஒன்றை சமர்ப்பிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது. அப்போதே நான் நண்பர் அஸீஸ் அவர்களைப்பற்றி ஒரு கட்டுரையை சமர்ப்பித்தேன். அஸீஸ் அவர்கள் விரும்பாமையினால் அந்த நூல் வெளியீடு நடைபெறவில்லை.

இப்போது ஒரு நண்பர் குழாம் இப்புதிய முயற்சியை தொடங்கியதனால் மிகவும் ஆர்வத்தினால் உந்தப்பட்ட நான் அப்போதைய தலைப்பிலேயே இந்த வரைபையும் எழுத முயன்றேன்.

நண்பர் அஸீஸ் அவர்களும் நானும் தாய்வழி உறவினர்கள். பாடசாலை நண்பர்கள். அட்டாளைச்சேனை பெரிய பள்ளியடிப்பிரதேசத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். சிறுவயது முதலே இவரது செயற்பாடுகளில் எப்போதும் கவரப்பட்டவன் நான். பாடசாலைக் காலங்களில் மிகவும் கரிசனையுடன் கல்வியில் இவர் அக்கறை செலுத்தும் ஒருவராக இவர் காணப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவப்பருவத்திலேயே பல்வேறு சமூகப்பணிகளில் ஈடுபாடுடையவராக இவர் இருந்த வேளையில், தான் பிறந்து வளர்ந்த அட்டாளைச்சேனைப் பிரிவில் இளைஞர் கழகம், விளையாட்டுக்கழகம், முஸ்லிம் லீக் வாலிப முன்னனி என்பவற்றை அமைத்து அவற்றுக்கு தலைமை வகித்து பல்வேறு சமூகப்பணிகளில் அப்போதே ஈடுபாடுடையவராகக் காணப்பட்டார். பிற்காலத்தில் 1987ம் ஆண்டு காலங்களில் அட்டாளைச்சேனை "கல்வி வட்டம்" (Study Circle) எனும் அமைப்பை நண்பர்களுடன் சேர்ந்து உருவாக்கி அதற்கும் தலைமை தாங்கி பிரதேச கல்விப்பணிக்கு பெரும் பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

1982ம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்ற இவர் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையின் முதலாவது பட்டதாரி என்பதும் விசேட அம்சமாகும். ஒரு ஆசிரியராக தனது அரச பணியை ஆரம்பித்த இவர், அரச பணியில் 36 வருடங்களைப் பூர்த்தி செய்து, 37வது வருடத்தில் காலடி வைத்துள்ள ஒரு அரச பணியாளர். அதிலும் 30வருடங்களுக்கு மேல் இலங்கை நிருவாக சேவையில் தடம் பதித்துள்ளமை மிகவும் மெச்சத்தக்க விசயமாகும்.

ஆசிரியராக இருக்கும் போதே இலங்கை நிர்வாக சேவைப் (S.L.A.S.) போட்டிப் பரீட்சையில் தோற்றி மிகத்திறமைச் சித்தியை எய்திய ஒரே ஒரு முஸ்லிம் ஆவார். இதனை அடுத்து உடனடியாக புத்தளத்துக்கு உதவி அரசாங்க அதிபராக 1990ம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அங்கும் பழகுவதற்கு இனியவர் என்பதை புத்தளத்தில் நடந்த ஒரு சம்பவம் மூலம் கோடிட்டுக் காட்டலாம்.

புத்தளம் சோதனைச் சாவடியில் இவரையும், பதவியையும் இனங்காண முடியாதிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் இவருடன் தவறான முறையில் நடந்து கொள்ள முயற்சித்தார். இச்சம்பவம் வேறொரு நபர் மூலம் உதவி பொலிஸ் அத்தியட்சர் (ASP) அவர்கட்கு இச்செய்தி எட்டியது. குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியை அழைத்து விசாரித்து தண்டனை கொடுக்க முற்பட்ட போது

"என்னையும், எனது பதவியையும் இவர் அறியாமலே"
இவ்வாறு நடந்து கொண்டார், ஆகவே இவரை மன்னித்து
விடுங்கள் எனக்கூறி சம்பவத்தை சுமுக நிலைக்கு
கொண்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பிறகு குறித்த பொலிஸ் உத்தியோகத்தர், இவர் பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்று அட்டாளைச்சேனைக்கு வந்திருந்த வேளை 1994ம் ஆண்டு தேர்தல் கடமைக்கு வந்தபோது, இவரது வீடு தேடி வந்து மீண்டும் மன்னிப்புக் கோரிய போது, அவரை உபசரித்து அனுப்பியது இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கின்றது.

புத்தளத்தில் இருந்து ஊர் ஜமாஅத்தினர், நம்பிக்கையாளர், சபை தலைவர்கள், சமய, நலன்புரி அமைப்புக்கள் இவருக்கு பிரியாவிடை வழங்கியமையும் தனிப்பட்ட, குடும்ப ரீதியான தொடர்புகளை அவர்களுடன் இப்போதும் வைத்துக் கொண்டிருப்பதும் இவர் பழக இனியவர், பண்பாளர், முன்மாதிரியான நிர்வாகி என்பதனாலே ஆகும்.

அட்டாளைச்சேனைப் பிரதேசத்துக்கு பிரதேச செயலாளராக வந்த கையுடன் ஊரிலே விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாத குறையை அறிந்து (தற்போதைய அஷ்ரப் விளையாட்டு மைதானம்) ஒரு விளையாட்டு மைதானத்தை உருவாவதற்கு பெரும் முயற்சி செய்தார். மைதானம் ஒன்றுக்கான காணியை தனியாரிடம் இருந்து பெற்று, இப்பிராந்தியத்திலேயே இன்று பேசப்படுகின்ற அஷ்ரப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தின் தோற்றுவிப்பாளராக இருந்து செயலாளர் அஸீஸ் அவர்கள் அவற்றை உருவாக்கினார். கழகங்களுக்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் முயற்சி எடுத்தார். விளையாட்டுத் துறையினருடன் பழகியதாலேயே இவ்வாறான குறைகளை அறிந்து நிறைவு செய்யக் கூடியதாக இருந்தது. இளைஞர்கள் மத்தியில் நல்ல உறவையும், தொடர்பையும் எப்போதும் பேணி அவர்களது கருத்துக்கு முன்னுரிமை அளிக்கும் ஒருவராக அவரை இப்போதும் காண முடிகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுடன் மட்டுமன்றி சிங்கள, தமிழ் மக்களுடன் பழகி அவர்களின் குறைகளை அறிந்து ஹுசைனியா நகர், மீலாத் நகர், சம்பு நகர், ஆலிம் சேனை, ஆலங்குளம், தீகவாப்பிய, திராய்க்கேனி முதலான கிராமங்களில் மீள் குடியேற்றங்களை நிறுவ ஆவண செய்தார்.

எவ்வரசு வந்தாலும் தங்கள் மக்களுக்கு "சேவையே தேவை" என எண்ணுவதால் எக்கட்சி ஆட்சி அமைத்த போதிலும் ஆட்சியாளர்களோடு நெருங்கிப் பழகி மக்களின் தேவையை நிறைவேற்றப் பின் நின்றதில்லை. அரசியல் பிரமுகர்கள் இவரைத் தேடிவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனைகள் பெறுபவர்களாகவும் இருந்தனர். சேவைகளை செய்து அவற்றை அழகு பார்க்கும் ஒருவராகவும் அன்றில் இருந்து இன்றுவரை அவர் செய்யும் ஒவ்வொரு அபிவிருத்தி நோக்கிய திட்டங்களில் மக்கள் திருப்திப்பட்டு மெச்சுவதைக் காணக்கூடிய காட்சிகள் இன்றும் நாட்டில் ஏராளம் உள்ளன.

பொதுச் சேவையில் உள்ள ஒருவர் எப்படி இனிமையாகப் பழகிய போதும் நியாயத்துக்கு மாற்றமான எதிர்பார்ப்புகளை உடையவர்கள், குறைகளைக் கூறிக் கொண்டே இருப்பார்கள். ஆனாலும் அவர்களது உள்மனங்களே இவர் நேர்மையானவர், சரியானதையே செய்வார் என்பதை ஒப்புக்கொள்ளும்.

பொதுவாக தனது சேவையில் யாராவது தன்னைப்பற்றி குறை கூறியதாகக் கேள்விப்பட்டால், அவரைச் சந்தித்து "இங்க வாங்க, இருங்க நம்முட "அந்த விடயத்தை" நான் இன்ன இன்ன நோக்கத்துக்காகத்தான் செய்தேன். நீங்க வேறுமாதிரி அபிப்பிராயப்பட்டத நான் கேள்விப்பட்டேன். இப்படி நான் செய்தது சரியா பிழையா நீங்க எனது நிலையில் இருந்து பார்த்தால் என்ன முடிவெடுப்பீங்க" என நேர்மையாக வெளிப்படுத்தும் உளவியல் அணுகுமுறையை பிரயோகித்து குறை கூறியவரிடமே ஆலோசனை கேட்கும் இனிய பண்பாளன் இவர்.

கடந்த 36 வருடங்களாக அரச சேவையில், இவரது சுளிவு, நெளிவுகளை அவதானித்தவன் என்ற வகையில், இவர் தனக்காக தனது பதவியைப் பாவித்து எதையுமே அனுபவித்ததில்லை என்பதை அறிந்தவன் நான். கிடைக்கும் ஒரு வினாடியைக்கூட கடமைக்காகவே பயன்படுத்தும் ஒரு சமூக சேவையாளராகவும், சிந்தனையாளராகவும் நான் இவரைப் பார்க்கின்றேன். தன்னலம் கருதாது பொதுநலம் என்றும், பிறர் நலம் என்றும், சதா மற்றவர்களுக்காகவே தன்னை அதிகம் அர்ப்பணித்த அப்துல் அஸீஸ் அவர்கள், இவ்வாறான செயற்பாடுகளினாலேயே அரச சேவையில் உச்சம் தொட்ட ஒருவராக இன்று காணப்படுகின்றார்.

இவ்வாறு பல்வேறு பண்புகளையும் ஆளுமைகளையும் கொண்ட நண்பர் அஸீஸ் அவர்கள் நீண்ட ஆயுளும் தேக ஆரோக்கியமும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வில்லாத ஓர் ஒளிவிளக்கு

உதுமா லெப்பையும்
ஹதீஜா உம்மாவும் நோற்ற நோன்பின் பலனாய்க் கிடைத்த
நெஞ்சம் நிறை
மகன் அஸீஸே!
உன் புகழ் போற்ற வந்தேன்
கவி வரியில் வாழ்த்த
வந்தேன்

நிர்வாக சேவையில் மூன்று தசாப்தங்களாய் முழு மூச்சுடன்
ஓய்வின்றி சேவையாற்றி வரும்
உனக்காக வரைகின்றேன் சிறு கவி

அந்நாளில்
அழுக்கான விழி அலையால் அநாதரவானவர்களை
அனர்த்த முகாமில் ஏற்று
உதவி அரசாங்க அதிபராகவிருந்து
அன்னையாய் அமுதமளித்தாய்

ஒட்டியுலர்ந்த
வயிற்றுடனும்
ஒற்றாடையுடன்
மாற்றாடையின்றிய
மாசு படிந்த
முகத்துடனும்
மசூதிகளில் மண்டியிட்டுக் கிடந்தவர்களின்
வாழ்வாதாரம் வளம் பெற
பொருளாதாரம் மேம்பட
சேதாரம் ஏதுமின்றி
ஆதரவாய் உருதாங்கி
அடிமனதிலிருந்து கடமையாற்றினாய்
யுத்தத்தினால் ரத்தம் சிந்தி
உறவுகளையும்
உடமைகளையும் இழந்து
உயிர் மட்டுமே உடனிருந்த மக்களை
உன்னத சேவைகளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வடையச் செய்தாய்

பெறுமதிசேர் பெரும் சேவைகளினாலும்
பெருமையில்லா உன்
பொறுமையினாலும்
பெருந் தலைவரினால் "மக்கள் தொண்டன்" எனும் நாமத்தையும்
பெற்றுக் கொண்டாய்

மும்மூர்த்தியாய்
மூவேந்தராய்
மும்முரசாய்
மூவேளையும்
முன்னின்று காக்கும் வழிகாட்டியாய் ஐந்தாண்டு அகிலம் போற்றும்
ஆசிரியம் எனும் அறப்பணிக்காய் உன்னை அர்ப்பணித்தாய்

மு∴மீன்களின் நாயகன்
முன்மாதிரிகளில் தலையானவன் கோமான் ரஸூல் மீது கொண்ட
பற்றினால்
மீலாதுடைய நாளை
விழாக்களினால் விமர்சையாக்கி வைத்தாய்

சரித்திரங்கள் சாற்றி
நிற்க சரித்திரம் சமைத்த
சங்கை மிகு
சமத்துவத்தை
நிலை நிறுத்த
சமமான பிரதேசம் சமமான அபிவிருத்தி எனும் மூலக்
கொள்கையை அமுல்படுத்தி அதற்கென
விருதையும் வென்றெடுத்தாய்

அரசியல் சமூகம்
பொருளாதாரம்
கலாச்சாரம் அவை எல்லாம் கடந்து பரந்து விரிந்த உம் சேவையின்
உச்சம்
சுகதேகிகளை உருவாக்க சுகாதாரத்திலும்
உள் நுழைந்து
உளமகிழ
உழைத்தாய்
கிழக்கின் விடிவிற்காய்
கிழமையில்லா நாளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றினாய்
உன் பணி
கண்டுன்னை
உயர்தினர் உனை
உயர் பதவியில்
முதலமைச்சின் பணிகளினை
மூச்சிடாமல் செய்திட்டாய்
மூவினமும் போற்றும் வண்ணம்

இன உறவை நேசித்து
இலக்கியங்களை
சுவாசித்து துவேசங்களை
தூசித்து
தூரநோக்குடன் யோசித்து
அமைதியை
யாசித்து
அர்ப்பணிப்புடன் நீ ஆற்றிய அலுவல்களுக்காய் தேச மான்ய சாமஸ்ரீ
மற்றும்
சமூக சேவை சிரோண்மணி விருதுகளையும் தமதாக்கினாய்

நெஞ்சில் உரம் கொண்டு
நேர்மைத்திறன்
கொண்டு நீ ஆற்றிய
அறப்பணிகள்
அஞ்சாமல்
அடி தொடரும்
விஞ்சிடும்
நன்மைகள்
மேட்சிமை தந்திடும்

விட்டகலும் போதே
உன் வீரியம் புரிகிறது
ஓய்விலும் நீ எமக்கு ஓயாமல்
சேவையாற்றிடவே
இறைஞ்சுகிறோம் இறையோனிடம்

**செல்வி கே.எம். பாத்திமா ஸுஹா**
சம்மாந்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1997ல் நடைபெற்ற தேசிய மீலாத் நிகழ்வில் தலைவர் அமைச்சர் அஷ்ரஃப் அவர்களால் பொன்னாடை அணிவித்து மக்கள் தொண்டன் என்ற கௌரவப் பட்டம் வழங்கி வாழ்த்திய நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கல்வி வளர்ச்சிக்கு உந்துதலாக இருந்து வெற்றிகண்ட பெருந்தகை

**ஐ.எல்.எம். றிஸான்**
சிரேஷ்ட ஊடகவியலாளர்
அட்டாளைச்சேனை

இலங்கை நிர்வாக சேவையில் மூன்று தசாப்தங்களை நிறைவு செய்துள்ள கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் அவர்களை இக்குறிப்பின் ஊடாக வாழ்த்துவதற்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை வாழ்வில் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

அட்டாளைச்சேனையை பிறப்பிடமாகவும்ஈ வசிப்பிடமாகவும் கொண்ட அப்துல் அஸீஸ் அவர்கள் பட்டதாரி ஆசிரியராக அரச சேவையில் இணைந்து கொண்டார். பின்னர் இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டு உதவிப் பிரதேச செயலாளராக, பிரதேச செயலாளராக, அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச மேலதிக அரசாங்க அதிபராக சேவையாற்றியதுடன் தற்போது கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றி வருகின்றார்.

சிறந்த தலைமைத்துவம், அறிவுத்திறன், நேர்மை, மனிதாபிமானம், எளிமை போன்ற உயர் பண்புகளுடன் மிளிரும் அப்துல் அஸீஸ் அவர்கள் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக கடமையாற்றி மொத்த கிழக்கு மாகாணத்தையும் சிறப்பாக நிர்வகித்து வருகின்றார் என்பது கண்கூடு. அவரது சேவையை கிழக்கு மாகாணத்திலுள்ள மூவின மக்களும் பாகுபாடின்றி பெற்று வருகின்றனர் என்றால் அதனை எவரும் மறுக்காது ஏற்றுக் கொள்வர்.

இவரது நிர்வாகத்திறன், நேர்த்தியான பணி என்பன காரணமாக குறுகிய காலத்தில் அரசியல்வாதிகள், மேலதிகாரிகளின் அபரிமித அன்பை, நெருக்கத்தைப் பெற்றுக்கொண்டமை கடந்த கால வரலாறாகும். அந்தவகையில், மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ர∴ப், முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ர∴ப் உள்ளிட்டவர்கள் அடங்கலாக அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்கள், கிழக்கு மாகாண ஆளுநர்கள் மற்றும் இதர மேலதிகாரிகளுடன் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக அப்துல் அஸீஸ் அவர்கள் கடமையாற்றிய போது கடந்த 1997ம் ஆண்டு தேசிய மீலாதுன் நபி விழா அட்டாளைச்சேனையில் கோலாகலமாக நடைபெற்றது. சுமார் மூன்று நாட்கள் விழாக்கோலம் பூண்ட இவ்விழா வெற்றிகரமாக நிறைவு பெறுவதற்கு தன்னாலான முழுமையான பங்களிப்பை நல்கியிருந்தார். இதற்காக மறைந்த அமைச்சர் அஷ்ர.'.ப் உள்ளிட்ட பலரின் பாராட்டை அவர் பெற்றுக் கொண்டமை இன்றும் பலராலும் ஞாபகப்படுத்தும் விடயமாக உள்ளது.

"அஸீஸ் சேர்" என்று எல்லோராலும் அறியப்பட்ட முதலமைச்சின் செயலாளர் அப்துல் அஸீஸ் அவர்கள் அனைவருடனும் இனிமையாகப் பழகும் சுபாவம் கொண்டவர். எப்போதும் எவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டாலும் உடன் பதிலளிக்கும் பழக்கத்தை ஆரம்பம் முதல் இன்றுவரை வழக்கமாக்கிக் கொண்டுள்ளார். அவரால் அதிகமானவர்கள் பெருமளவு நன்மை அடைந்துள்ளனர் என்பதற்கு அவர்களே சாட்சி பகரக்கூடியவர்களாக உள்ளனர்.

சிறுவயது முதல் சமூக சேவையில் அதிக ஆர்வமும், ஈடுபாடும் கொண்ட அஸீஸ் சேர் அட்டாளைச்சேனை கல்வி வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பு நல்கியுள்ளார், தற்போதும் நல்கி வருகின்றார் என்பது வெள்ளிடைமலை. கடந்த 1987ம் ஆண்டு அட்டாளைச்சேனையில் கல்வி வட்டம் எனும் சமூக சேவை அமைப்பை ஆரம்பிப்பதிலும், அதனை வெற்றிகரமாக வழிநடத்துவதிலும் அவர் வெற்றிகண்டார்.

அட்டாளைச்சேனை பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக மாலை நேர வகுப்புக்களை கல்வி வட்டம் அமைப்பின் மூலமாக இலவசமாக நடாத்துவதில் தனது நண்பர்களுடன் இணைந்து தீவிரமாகத் தொழிற்பட்டார். இதனால் கட்டணம் செலுத்தி பிரத்தியேகக் கல்வி பெற முடியாத ஏழை மாணவர்கள் பெரிதும் நன்மையடைந்தனர். தற்போது பல்வேறு உயர் பதவிகளை வகிக்கும் அன்றைய மாணவர்கள் இதற்கு சான்று பகர்வர்.

அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகம் ஊடாகவும் அவரது சமூகப் பணிகள் தொடர்ந்தன. வருமானமில்லாத சமூகசேவை அமைப்புக்களை உயிரோட்டமுள்ள அமைப்புக்களாக இயங்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதில் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டார். அவ்வப்போது அவசியமான பணத்தேவைகள், மாணவர்களுக்கு முன்னோடி மாதிரிப் பரீட்சைகளை நடாத்துவதற்கு தேவையான காகிதாதிகள் உள்ளிட்டவற்றை மனங்கோணாது தனது கரங்களினால் வழங்கி உதவினார்.

ஊருக்கான சமூகசேவைகளை மேலும் விரிவுபடுததும் உயர் நோக்கத்தின் அடிப்படையில் பின்னாளில் கல்வி வட்டம் அமைப்பு "அட்டாளைச்சேனை அபிவிருத்திச் சமூகம் (ADS)" அமைப்பாக மாற்றம் பெற்றது.

அஸீஸ் சேர் நிகழ்வுகளை நெறிப்படுத்தி நடாத்தி முடிக்கும் விதம் வித்தியாசமானது. ஆரம்பம் முதல் இறுதிவரை நேர்த்தியாக பணிகளை முன்னெடுக்கும் வழக்கம் அவரிடம் எப்போதும் குடிகொண்டுள்ளது. இதனை பல சந்தர்ப்பங்களில் காணக் கிடைத்துள்ளது.

இலக்கியத்துறையில் 50 வருடங்களை நிறைவு செய்து, பொன்விழாக் கண்ட ஆசுகவி அன்புடீன் பொன்விழாக் குழுவை சிறப்பாக வழிநடத்தி நிறைவு கண்டார். எதிரும் புதிருமான அரசியல்வாதிகளை அதிதிகளாக அழைத்து, சமகாலத்தில் ஒரு மேடையில் அமரச் செய்தார். இவ்வாறு பல சம்பவங்களை அடுக்கிக் கொண்டு போகலாம்.

அஸீஸ் சேர் சமூக சேவையில் ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகின்ற ஒருவர். அதிகமான கால நேரங்களை அவர் சமூக சேவைக்காக செலவிட்டும் வருகின்றார். வாரத்தின் திங்கள் முதல் வெள்ளி வரை திருகோணமலை முதலமைச்சில் கடமையாற்றிவிட்டு சனி, ஞாயிறு, பொது விடுமுறை தினங்களில் தனது சொந்த ஊரான அட்டாளைச்சேனைக்கு வருகைதரும் அவர், சமூகசேவைக் கூட்டங்கள், நிகழ்வுகளில் தவறாது கலந்து கொள்ளும் பழக்கத்தைக் கொண்டுள்ளமை இதற்கு சாட்சியாகும்.

இவ்வாறு முன்மாதிரிகளை தன்னகத்தே கொண்டு மிளிரும், கிழக்கு மாகாணத்தின் "தலைமகன்" யூ.எல்.அப்துல் அஸீஸ் அவர்களை பாராட்டி கௌரவிப்பதற்கு மேற்கொண்ட முயற்சி சாலப் பொருந்தும் எனலாம். அந்த வகையில் ஏற்பாட்டாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். அனைத்திற்கும் அல்லாஹ்வின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mr. U.L.A. Azeez, SLAS (Special Grade)

**A.R.M. Mohamed Saifullah**, BA, MPA , PG Dip in Mgt., PG in Development Studies
Coordinator, Forum of Eastern Province Hotel Associations
General Secretary, Trincomalee Hoteliers Association

It is with much pleasure, I deliver this message to the souvenir /magazine published jointly by the Kinniya Youth Net and the KTV in collaboration with civil societies of Kinniya and Addalaichenai in connection with the appreciation of services rendered by Mr. U.L.A. Azeez, the Secretary to the Chief Minister and Ministry of Local government & Tourism of Eastern Provincial Council in Sri Lanka.

Though the Eastern Province had enormous potential for tourism development, it has been lagging behind in developing and in promoting the tourism industry in the province due to the prolonged ethnic conflict that lasted over three decades. It is only in the recent past the tourism industries are getting attention of the authorities, particularly from the tourism bureau which is functioning under the Ministry of Local Government and Tourism, Eastern Province led by Mr. U.L.A. Azeez, as its Secretary since 2012 to date.

I would like to highlight some of the critical steps taken to promote the industry by the tourism bureau under the able guidance of Mr. U.L.A. Azeez, the secretary. The programme launched by the bureau to promote the destination, the Eastern Province, by printing and publishing numerous promotional materials and hoardings etc. have been working very well in boosting visits by both the local and the foreign visitors the province.

Another programme launched by the bureau was sponsoring several exposure visits to national and international exhibitions held in Colombo and other places for the owners and the managers of hotels and other related service providers have been very useful in preparing tourism related entrepreneurs to enhance and expand the businesses. The other important programme; the capacity building of hotel staff members in the Eastern Province conducted by the Tourism Bureau has been a very successful initiative which filled the skills gaps hitherto prevailed in the province by providing number of professional staff members for the industry. These are few concrete actions/steps to mention among various other activities



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

implemented by the Tourism Bureau under the Ministry of Local Government and Tourism.

Further, it has been a pleasure on a personal and professional level to work with him to address various problems and challenges the tourism industry faced in particular and numerous other issues the province faced in general. He is well known to me for a long period of time since we studied at the University. Since then I have maintained a cordial relationship with him and I have closely worked as a representative of a nongovernmental organization which engaged in developing the pre-school education in the Eastern Province.

In conclusion, I take this opportunity to convey our profound thanks and appreciations to Mr. U.L.A. Azeez, the Secretary to the Chief Minister of the Eastern Provincial Councils for his excellent services provided to promote the tourism industry in the Eastern Province. We look forward to work with him to further strengthen and promote the tourism sector and other related development activities

Thanks,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனம் கவர்ந்த சேவகன்

**ஆர்.எம். நழீல்,** B.A, J.P
நிர்வாக உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
அட்டாளைச்சேனை

அட்டாளைச்சேனை ஊரின் முதன்முதலில் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவான இலங்கை நிர்வாக சேவை அதிகாரி. 1990 களில் உதவி அரசாங்க அதிபராக புத்தளத்தில் கடமையாற்றி 1993 இல் பிரதேச செயலாளராக அட்டாளைச்சேனையில் நியமனம் பெற்ற காலத்தில் இருந்து அவருடன் சேவையாற்றியவன் என்ற வகையில் இம்மலருக்கு அஸீஸ் சேர் அவர்களைப்பற்றி செய்தி ஒன்றை வழங்குவதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

1990 காலப்பகுதியில் நிருவாக சேவைக்கு உள்வாங்கப்பட்ட இவர் பயங்கரவாதம் நிலவிய அக்காலகட்டத்தில் மக்கள் நலனை முற்படுத்தி பல சேவைகளை புத்தளத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கும் அதன் பின்னர் 1993 முதல் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக பொறுப்பேற்று அதுவரையில் இப்பிரதேசம் கண்டிராத பல வியத்தகு அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றிய ஒருவர் அஸீஸ் சேர் அவர்கள்.

1994 களுக்குப் பிறகு தென்கிழக்கில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றுக்கு காரணமாக இருந்த மாமனிதர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களால் மிகவும் கவரப்பட்ட விருப்பத்திற்குரிய இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக இவர் காணப்பட்டார்.

இக்காலகட்டத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகம், துறைமுக அபிவிருத்தி என்பவற்றுடன் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் தேசிய மீலாத் விழாவினை கொண்டு வந்து "முல்லைத்தீவு என அழைக்கப்பட்ட நகரை மீலாத் நகராக பெயர் மாற்றி குடியிருப்புகளை அமைத்துக் கொடுத்து அபிவிருத்தி செய்யப்பட்டது. இவற்றுக்கெல்லாம் பின்புலமாக இருந்து மாமனிதர் அஷ்ரஃப் அவர்களுடன் செயற்பட்டவர் இவரே. மேலும் இக்காலப்பகுதியில் ஒலுவில் பாலமுனை மக்களுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டாளைச்சேனை பள்ளக்காடு எனும் இடத்தில் காணியற்றோருக்கு காணி வழங்கி மற்றும் குடியிருப்புக்களை அமைத்து "அஸ்ரப் நகர்" எனும் குடியிருப்பு கிராமத்தையும் அமைத்த பெருமைக்குரியவர் இவர்.

தேசிய மீலாத் விழாவின் போது மாமனிதர் மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்கள் "மக்கள் தொண்டன்" என்ற சிறப்புப் பட்டத்தினை வழங்கி, அவர் கையால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட ஒரே ஒரு நிருவாக சேவை அதிகாரியும் இவரே.

அட்டாளைச்சேனை பிரதேச கரும்பு செய்கையாளர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளாக இருந்த குறித்த காணிகளுக்கு உத்தரவுப் பத்திரமின்மையை உடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் தொடர்பு கொண்டு காணியுரிமையை வழங்கியதால் பறிபோகவிருந்த கரும்பு காணிகளை ஏழை விவசாயிகளுக்கு பத்திரங்கள் வழங்கி (LDO Permit) காப்பாற்றிக் கொடுத்த பிரதேச செயலாளராக இவர் இன்றும் நினைவுகூரப்படுகிறார். 2004 இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் கரையோர பிரதேச செயலாளர்கள் தடுமாறிய போது அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் "சுனாமி செயலகம்" அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் செயற்பட்டு நிதி, உணவு வழங்கல், வீடமைப்பு என்பனவற்றிற்கு குழுக்கள் அமைக்கப்பட்டு இயங்கியதுடன் அட்டாளைச்சேனை ஆளங்குளத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத் திட்டம் ஒன்றையும் உருவாக்கிக் கொடுத்தார்.

இதன் பின்னர் கல்முனையில் கரையோரக் கச்சேரியை அமைத்து முழுக் கரையோர மக்களுக்கும் தனது சேவையை விரிவுபடுத்திய பின் கிழக்கு மாகாணத்தின் சுகாதார அமைச்சு மற்றும் முதலமைச்சின் செயலாளரர் என தனது சேவையை விரிவுபடுத்தி கிழக்கின் விருப்பத்திற்குரிய இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக பெயரெடுத்தவர்.

சொந்த ஊரான அட்டாளைச்சேனையில் 13 வருடங்கள் தொடர்ந்து பிரதேச செயலாளராக கடமையாற்றியது அவரது ஆளுமை, அறிவுத்திறன், அன்பான இரக்க குணம் என்பவைகள் காரணத்தினாலேயாகும்.

மேலும் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கல்வி வட்டம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் தலைவராக 7 வருடங்கள் சேவையாற்றி இப்பிரதேச கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்த காலாக அமைந்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாயல் நிருவாக தெரிவு "குடி" அமைப்பினால் தெரிவு செய்வது மரபாகும். இதற்காக தான் சார்ந்த குடி பரம்பலை ஒன்றுபடுத்தியதுடன் "வெள்ளரசன் குடி" யின் தலைவராகவும் அக்குடும்பத்தவரால் ஆக்கப்பட்டதுடன் குடும்ப உறவுகளின் பரஸ்பர ஒற்றுமைக்கும் வழிவகுத்த ஒருவர்.

இவரின் சமூகப் பணி மேலும் தொடரவும், நீண்ட ஆயுளுடன் சுகதேகியாக வாழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலமைச்சினால் நடாத்தப்பட்ட அபிவிருத்திக் கண்காட்சி நிகழ்வில் முன்னாள் ஆளுநர் ஒஸ்டின் பெர்னான்டோ, முதலமைச்சர் நசீர் அகமட் மற்றும் மாகாண அமைச்சர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை விளக்கு நீ

**வித்தகர். K.M.M.இக்பால்**
அப்துல் மஜீது MP வீதி
கிண்ணியா

முப்பது வருட சேவைகள்
கால நீரினால்
கரைந்து விடாது
காலத்தின் முதுகின் மீது ஏறி
அவை சவாரி செய்யும்

பூமியைத் தொடாத
மழைத்துளி போல
சுத்தமானவை
உன் கரங்கள்

ஒய்வு என்பது
உன் கைகளுக்குப் போடும்
கவசமல்ல......
அவை
சுதந்திர பாதையில்
இடப்பட்ட முள் வேலியை உடைக்க பயன்படட்டும்

நீ....
அதிகாரியாய் மட்டுமல்ல
மனிதக் குலத்தின்
விமர்சகனாகவும்
இருந்திருக்கின்றாய்

கூட்டங்களில் - நீ
உதிர்த்த
சிந்தனை முத்துக்கள்
வாழ்க்கைக்கு வழிகாட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமை

ஒவ்வொரு – நாளும்
உன் வீட்டுக் கதவை மட்டும்
தட்டிக் கொண்டே
இருந்தது

உன்னால்
சுனாமி வீடு பெற்றவர்கள்
பூங்கொத்துக்களை
கையிலேந்தி உன்னை
வாழ்த்திக் கொண்டே
இருக்கிறார்கள்.....

ஒவ்வொருவரினதும்
விருப்பத்திற்கு ஏற்ப
சட்டையை
மாற்றிக் கொள்ள
தெரியாதவன் நீ....

உன் ஒவ்வொரு
சேவைத் துளியும்
வரலாற்றில்
வெண்ணிலாவாய் முளைக்கும்
வீரியம் கொண்டவை

வற்றிப் போன
வடக்கு அகதிகளின் வாழ்வை
ஜீவநதியாக
மாற்றியவன் நீ........

வாழ்க வளமுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னாள் கௌரவ ஆளுநர் ஷான் விஜயலால் டி சில்வா அவர்களுடன் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்ரஃப் பாராட்டிய அஸீஸ்

**எம். நிஜாமுத்தீன், ஜே.பி**
அகில இலங்கை இளம் எழுத்தாளர் சங்கத் தலைவரும்,
கலேவெல பிரதேச சபை உறுப்பினரும்.

நம்நாட்டில் உயர் பதவி வகித்து சமுதாயத்துக்காக பணியாற்றியவர்களின் வரலாற்றுத் தகவல்களை பதியவைப்பது இக்காலகட்டத்தில் முக்கிய பணியாகும். கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் அவர்களை திகாமடுல்ல மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான கூட்டமொன்றில் சம்மாந்துறையில் சந்தித்தேன்.

கொழும்பிலிருந்து ஹெலிகொப்டரில் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்களுடன் அம்பாறையில் வந்திறங்கி அக்கூட்டத்தில் ஊடகவியலாளராக நானும் பணியாற்றினேன். சகல ஆளுமைகளும் நிறைந்த அஸீஸ் அவர்களின் சேவையைக் கண்டு வியந்து போனேன். இவரது சேவைகளால் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் அஸீஸ் அவர்களை பாராட்டியதைக் கண்டு நான் வியந்து போனேன்.

பிற்பட்ட காலங்களில் கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் அலுவலகத்தில் பொதுமக்களின் தேவைகளுக்காக நான் மக்களை அழைத்துச் செல்லும்போது அவர்களின் பிரச்சினைகளை கேட்டு அறிந்து அமைதியாக அப்பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கினார். அதுமட்டுமல்லாது ஆளுநர் ஹிஸ்புள்ளா, ரோஹித போகொல்லாகம, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் உட்பட பல மாகாண சபை, உள்ளூராட்சி சபை, நகர சபை உறுப்பினர்களோடு நெருக்கமாகப் பழகி தனது கடமைகளை செய்து வந்ததை நான் அறிவேன். வாரம் ஒரு முறை மாகாண சபை மற்றும் ஆளுநர் அலுவலகத்துக்கு திரண்டு வரும் பொதுமக்களை அனுகி அவர்களது பிரச்சினைகளை தீர்த்து வைக்கின்ற நிகழ்வுகளை நான் நினைத்துப் பார்க்கின்றேன்.

செயலாளர் அஸீஸ் அவர்களின் சேவை பாராட்டி கௌரவிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவரைப் பொறுத்தவரையில் தனது பெயரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறச் செய்வதில் எந்தக் கவனமும் எடுக்கவில்லை. தனது கடமையை சரியாகச் செய்வதில் முன்னின்று உழைத்தவர். இலங்கையில் ஏனைய மாகாணங்களை விட கிழக்கு மாகாணத்தில் பணியாற்றுவது மிகவும் கஷ்டமான காரியமாகும். இதனைப் பொருட்படுத்தாது தன் கடமையை சரியாக நிலைநாட்டுவதில் வல்லவர் என்பதை நிரூபித்துக்காட்டியுள்ளார்.

இவருக்கு காலம் கடந்து ஒரு விழா எடுக்க முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அமைதியான சுபாவம் கொண்ட இவர் தனது நிர்வாகக் கடமைகளை சரியாக செய்து வந்தமைக்காக கிழக்குக்கு வெளியே இருந்து உங்களை பாராட்டுகின்றேன்.

உங்கள் பணி வளரட்டும்.... தொடரட்டும்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். நசீர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆகியோரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ. அஸீஸ் ஒரு வரலாற்றுப் பொக்கிஷம்

**அப்துல் ஜப்பார் சமீம் (ஜே.பி)**
தலைவர்
தென்கிழக்கு அஷ்ர.்.ப் சமூக
சேவைகள் நிறுவனம்
கல்முனை

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சின் செயலாளராக கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றி வரும் உதுமாலெவ்வை அப்துல் அஸீஸ் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக நியமனம் பெற்று 30 ஆண்டுகளை கடந்து செல்லுகின்றார்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாரை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் அட்டாளைச்சேனை நகரத்தில் பிறந்து வளர்ந்த இவர் இலங்கையின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சின் செயலாளர் எனும் மகுடத்துக்குரியவர் என்பது அவரது அரச சேவை வரலாற்றுக்கு கிடைத்த தங்க கிரீடமாகும்.

அட்டாளைச்சேனை நகரத்தில் ஒரு விவசாயக்குடும்பத்தில் சுலைமாலெவ்வை, உதுமாலெவ்வை, அகமட்லெவ்வை கதீஜா உம்மா தம்பதியினருக்கு நான்காவது பிள்ளையாக பிறந்த அஸீஸ் அட்டாளைச்சேனை பிரதேசத்தின் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாவார் என்பது அவருக்கும், அவர் பிறந்து வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கும் சிறப்பு சேர்க்கும் விசேட அம்சமாகும்.

படிமுறை வளர்ச்சிகளால் தன்னை பட்டை தீட்டிக்கொண்டு படிப்படியாக அரச நிர்வாக சேவையில் உச்சம் தொட்டுக்கொண்டிருக்கும் அஸீஸ் தனது ஆரம்பக்கல்வியினை கமு.்.அக்.். அட்டாளைச்சேனை முனீறா வித்தியாலயத்திலும் இடைநிலை கல்வியினை கமு.்.அக்.். அட்டாளைச்சேனை மத்திய மகாவித்தியாலயத்திலும், பயின்று 1982ல் இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்துக்கு நுளைந்து கலைப்பிரிவில் சிறப்புப்பட்டம் பெற்று 1986ல் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றதன் மூலம் தனது அரச சேவையினை ஆரம்பித்தார்.

எதிலும் சளைக்காமல் முயன்று பார்ப்பதில் அலாதிப்பிரியங்கொண்ட அஸீஸ் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளை தெரிவு செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிப்பரீட்சைக்கு தோற்றி 1989லும் 1990லும் இருமுறை சிறப்பு பெறுபேறுகளுடன் சித்தியடைந்ததன் மூலம் பட்டதாரி ஆசிரியர் தொழிலில் இருந்து முறையாக விடுவிப்பு பெற்றுக்கொண்டு புத்தளப் பிரதேசத்தின் உதவிப் பிரதேச செயலாளராக பதவியேற்று தனது பொது வாழ்வில் புதிய அத்தியாயத்தை தொடங்கிவைத்தார்.

உதவிப்பிரதேச செயலாளர் எனும் பணியின் மூலம் மூன்று ஆண்டுகள் நன்கு பயிற்சி பெற்று வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை புத்தளப் பிரதேசத்தில் குடியேற்றி அவர்களது துயர்துடைக்க சேவையாற்றிய அதிகாரிகளுடன் தோள் கொடுத்து அங்கிருந்து விடைபெற்று 1993ல் தான் பிறந்து வளர்ந்த தனது தாய் மண்ணான அட்டாளைச்சேனை பிரதேசத்தின் பிரதேச செயலாளராக பதவி உயர்வு பெற்று தாய் மண்ணின் தேவையறிந்து சேவையாற்றும் பாக்கியம் பெற்றார்.

1993முதல் 2004ம் ஆண்டுவரை சுமார் 11 ஆண்டு காலம் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக கடமையாற்றிய அஸீஸ் பல சவால்களை எதிர்கொண்டதுடன் பல வரலாற்று தடயங்களையும் அப்பிரதேசத்தில் பதித்தார் என்பதற்கு 1997ல் அப்பிரதேசத்தில் நடைபெற்ற தேசிய மீலாத் விழா போதுமான வரலாற்று சான்றாகும்.

அபிவிருத்தியடையாமல் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காலம் காலமாக இருந்து வந்த அட்டாளைச்சேனை பிரதேசத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை. பாலமுனை. ஒலுவில், திராய்க்கேணி, தீகவாவி, கோணவத்தை, ஆலம்குளம், ஆலிம்சேனை, பல்லக்காடு எனும் அஸ்ர.்.ப் நகர் போன்ற கிராமங்களை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்வதற்காக பிரதேச செயலாளராக இருந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றியமைக்காக அஸீஸ் அப்பிரதேச மக்களால் இன்னும் நன்றியுடன் நினைவுகூறப்பட்டு வருகின்றார்.

1994ம் ஆண்டு இந்நாட்டின் அதிமேதகு ஜனாதிபதியாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவிக்கு வந்த பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தல் மூலம் கப்பல்துறை, துறைமுகங்கள் அபிவிருத்தி, புணர்வாழ்வு புணரமைப்பு, அமைச்சராக பதவியேற்றுக்கொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்ரஸின் தேசியத்தலைவர் எம்.எச்.எம். அஸ்ர.்.ப்பினால் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்ட அனைத்து அபிவிருத்தி திட்டங்களுக்கும் பக்கபலமாக இருந்துசெயற்பட்டதன் மூலம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப்பிரிவு அன்று தொடக்கம் படிப்படியாக அபிவிருத்தி திட்டங்களால் துளிர்க்க தொடங்கியது.

1997ல் அங்கு நடைபெற்ற தேசிய மீலாத் விழாவின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் அப்பிரதேசத்தின் மிகமுக்கிய அபிவிருத்தியின் அடையாளங்களாக மிளிர்ந்து கொண்டிருப்பதை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அங்கு காணலாம். இதற்கு மீலாத் நகர் எனும் கிராமம் குறிப்பிடத்தக்க சான்றாகும்.

இவ் அபிவிருத்தி திட்டங்களின் கிரீடமாக திகழும் ஒலுவில் பல்கலைக் கழகத்தின் அங்குரார்ப்பணத்துக்காக கட்டடங்களையும், காணிகளையும், அடையாளப்படுத்தி அவற்றை பல்கலைக்கழக வளாகத்துக்கு ஒதுக்கீடு செய்வதற்கான அரச பணியில் சளைக்காமல் மர்ஹூம் அஸ்ர∴ப்புடன் இணைந்து செயலாளர் அஸீஸ் செயற்பட்ட விதம் பாராட்டத்தக்க நினைவுகளாகும்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் அவரது அர்ப்பணிப்புமிக்க சேவை பல்கலைக்கழகத்தின் வாசம் இவ் உலகெங்கும் வீசும்வரை பெருமிதத்துடன் நினைவு கூறப்படும் என்பது மறுதலிக்கமுடியாத யதார்த்தமாகும்.

1994 முதல் 2000ம் ஆண்டு மர்ஹூம் அஸ்ர∴ப் மரணிக்கும் வரை அஸீஸ் அவரோடு ஒரு நேசமிக்க நண்பனாகவும், ஒரு சகோதரனாகவும் இணைந்து செயற்பட்டதன் மூலம் அட்டாளைச்சேனை பிரதேசம் பல்வேறு வகையில் அபிவிருத்தியடைந்து வந்தமை யாவரும் அறிந்ததே.

இவ்வாறு அட்டாளைச்சேனை பிரதேசத்தின் பிரதேச செயலாளராக சுமார் 13 வருடங்கள் சேவையாற்றிய இவர் 2004 டிசம்பர் 26ல் ஏற்பட்ட உலகை உலுக்கிய சுனாமி பேரலை அனர்த்தத்தின் பின்னர் அம்பாரை மாவட்டத்தின் கரையோரப்பிரதேசத்தின் நிவாரணப்பணி மற்றும் இடைத்தங்கல் முகாம் அமைப்பு, வீடமைப்புத்திட்டங்கள், பொருளாதாரம், வாழ்வாதாரம் என்பவற்றை மீளமைப்பு செய்வதற்கான நிர்வாக வழிமுறைகளை சீர்படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும், கரையோரத்துக்கு பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட அஸீஸ் மரஹூம் அஸ்ர∴ப்பின் பாரியார் அமைச்சர் அன்னை பேரியல் அஸ்ர∴ப்புடனும்,அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் மற்றும் இப் பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து அம்பாரை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களுக்கும் இனமத பேதமற்ற ரீதியில் இரவு பகல் பாராது தன்னலம் கருதாது பணியாற்றினார். வீடு இழந்தவர்களுக்கு வீட்டு வசதியும், தொழில் இழந்தவர்களுக்கு தொழில் வசதியும் பெற்றுக் கொடுத்து அவர்களின் வாழ்வில் புத்துணர்ச்சி ஊட்டுவதற்காக பல்வேறு சவால்களை எதிர்கொண்டு அயராது பாடுபட்டார்.

கால ஓட்டத்தில் 2009ன் இறுதியில் கிழக்கு மாகாண சபையின் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட அவர் கிழக்கு பிராந்தியத்தின் சுகாதார மற்றும் சுதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியத்துறையினை வளப்படுத்தி பின்தங்கிய மக்களின் சுகாதார நலனோம்புகைக்காக அப்போது கிழக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்த கௌரவ கலாநிதி எம்.ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாவுடனும் பின்னர் கௌரவ அமைச்சர் எம்.எஸ். சுபையிருடனும் இணைந்து பல்வேறு சுகாதார சுதேச அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கடுமையாக உழைத்தார்.

இவ்வாறான அவரது நேர்மை தவறாத அர்ப்பணிப்புமிக்க சேவையினை கருத்தில் கொண்டும், சேவை மூப்பின், அடிப்படையிலும் கௌரவ ஆளுனர் அஸீஸ் அவர்களை கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சின் செயலாளராக நியமித்து கௌரவப்படுத்தினார்.

2012ன் நடுப்பகுதியில் கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்ட கௌரவ நஜீப்.ஏ. மஜீத் அவர்களினால் பொறுப்பேற்கப்பட்ட மாகாண நிதி, மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, மீள்குடியேற்றம், கிராமிய அபிவிருத்தி, மனிதவலுவும் சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிர்வாகம், சுற்றாடல் துறைகளை உள்ளடக்கிய முதலமைச்சின் செயலாளராகவும், 2015இன் முதல் பகுதியிலிருந்து கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக பதவியேற்றுக்கொண்ட கௌரவ ஹாபிஸ் நஸீர் அகமட் அவர்களினால் பொறுப்பேற்கப்பட்ட மாகாணநிதி, மற்றும் திட்டமிடல்,சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, பிராந்திய நிர்வாகம், போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி, சுற்றுலா, சுற்றாடல், கட்டடங்கள், கிராமிய கைத்தொழில், வீடமைப்பு துறைகளை உள்ளடக்கிய முதலமைச்சின் செயலாளராகவும் பொறுப்பேற்று இரு முதலமைச்சர்களுடனும் மாகாணத்தின் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.

மாகாணத்தின் அபிவிருத்திக்காக அயராது உழைத்து அவர்களின் பாராட்டை பெற்ற அஸீஸ் இவ்விரு முதலமைச்சர்களும் மாகாண நிர்வாகத்திலிருந்து விடைபெற்றுச் சென்ற பின்னரும் இன்னும் முதலமைச்சின் செயலாளராக சேவையாற்றி வருவது அவரது அர்ப்பணிப்புமிக்க சேவை நலனுக்கு கிடைத்த அரிய வாய்ப்பாகும்.
1990 தொடக்கம் இன்றுவரையான 30 வருட காலம் இலங்கை நிர்வாக சேவையில் பல்வேறு தடங்களையும் தடயங்களையும் பதித்த யூ.எல்.ஏ.அஸீஸ் இவ்வாறே இலங்கையின் முதலாவது முஸ்லிம் முதலமைச்சின் செயலாளர் எனும் மகுடத்துக்கு சொந்தக்காரராக திகழ்கின்றார்.

இலங்கை நிர்வாக சேவையில் 30 ஆண்டுளை வெற்றிகரமாக கடந்து செல்லும் அஸீஸ் எதிர்வரும் 2021 மே 11ல் தனது 60 வயதில் ஓய்வு நிலையை அடைய காத்திருப்பது கிழக்கு மாகாண மூவின மக்களுக்கும் வருத்தத்தினை தருகின்ற ஒரு ஏற்றுக்கொள்ள முடியாத செய்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் அவர் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றாலும் அவரது புன்முறுவல் மிக்க உபசரிப்பும், மண்வாசைன மிக்க உரையாடலும், சக உத்தியோகத்தர்களுடனான உயர்ந்த நாகரீமிக்க தொடர்பாடலும், மனிதநேயமிக்க பண்பியலும் அவரை கடந்த 30 வருடங்களாக சுற்றிக் கொண்டிருந்த உத்தியோகத்தர்களின் மனதினை விட்டு அகலாத தென்றலாகவே வருடிக்கொண்டிருக்கும் என்பது நிஜம்.
அவரது இலங்கை நிர்வாக சேவையில் 30 வருட பூர்த்தியினை பாராட்டி கௌரவிக்கும் பெருவிழா நிகழ்வொன்று கிண்ணியாவில் கிண்ணியா இளைஞர் வலையமைப்பினால் தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பது அவரது தன்னலம் அற்ற அர்ப்பணிப்புமிக்க சேவைக்கு கிடைக்க இருக்கும் பொற்குவியலாகும்.

இவ்வாறு கட்டம் கட்டமாக படிமுறை வளர்ச்சி கண்டு உச்சம் தொட்டு நிற்கும் செயலாளர் அஸீஸ் வரலாற்றில் என்றும் நினைவு கூறத்தக்க ஆலவிருட்சமாகவே திகழ்வார் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் உயிருடன் இருந்திருந்தால் அஸீஸ் இன்று ஒரு மாவட்டத்தின் மாவட்ட செயலாளராகவோ (GA), அல்லது கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராகவோ, அல்லது தேசியரீதிலான மத்திய அமைச்சு ஒன்றின் செயலாளராகவோ இருந்திருப்பார் என்பது என்னைப்போல் பலரது நமபிக்கையாகும்.

இல்லற வாழ்வில் தனது துணைவியாக சஹீட் றுமைசாவை கரம் பிடித்து 05 பிள்ளைகளின் தந்தையாக நல்லறம் பெற்று வலம் வரும் செயலாளர் அஸீஸ் அவர்கள் தனது ஓய்வு காலத்திலும் நல்ல தேகாரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்து கல்முனையை தந்த ஏ.எம்.ஏ. அஸீஸ் போன்று என்றும் வரலாறு நினைவுகூறும் ஒரு யூ.எல்.ஏ. அஸீஸாக இருப்பார் என்பது திண்ணம்.

கலைப்பிரிவில் சிறப்புப்பட்டமும், சர்வதேச விவகாரங்கள் மற்றும் உறவுகள், பொதுத்துறை நிர்வாகம் என்பவற்றில் தனியாக எம்.ஏ. பட்டங்களும் பெற்று, 1989லும் 1990லும் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து 30 வருட காலம் நிர்வாக சேவையில் நிறைவு பெற்று தொடர் பணியாற்றிக் கொண்டிருக்கும் யூ.எல்.ஏ. அஸீஸ் என்றும் கிழக்கு மாகாண மூவின மக்களினதும் நினைவில் நின்றாடும் பெரும் பொக்கிஷமாகவே திகழ்வார் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸீஸ் ஓர் ஆளுமையின் அடையாளம்

**கிண்ணியா ஜே.பிரோஸ்கான்**
பணிப்பாளர்
பேனா இலக்கியப் பேரவை
கிண்ணியா

எளிமை, நேர்மை, உண்மை
இவை வெறும் வார்த்தைகள் அன்று, நீர்
இவ் மூன்றுக்கும் அடையாளமானீர்

அஸீஸ் சேர்
பணிகள் செய்ய நீங்கள்
சளைத்ததும் இல்லை.
என்றும்
களைத்ததும் இல்லை.

தெரியாத ஒன்றை அறிய முயல்வீர்!
தெரிந்த ஒன்றை பிறருக்கு புரிய வைக்க முயல்வீர்!!

உங்கள் திறமையைக் கண்டு
வியந்து நின்றவர்களின் வரிசையில்
நானும் ஓடோடி வந்து
சேருகிறேன்.
நூற்றில் ஒன்றாயல்ல ஆயிரத்தில் ஒன்றாய்.

முப்பது வருட பணி
ஓரிடத்தில் நின்றுவிடத் தெரியாமல்
களைப்பற்ற நதி போல
ஓடிக் கொண்டே இருக்கும்
இளைஞன் நீங்கள்.

தோல்விக்கு தான் வெற்றியை
விட சக்தி அதிகம்.
நீங்கள் கண்டு துவண்டிடாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியில் தான்
வெற்றியிருக்கென்று
சளிக்காது ஓடிய காட்டாறு நீங்கள்.

துரோகிகளும் எதிரிகளும்
கண்முன்னே சதித் துகள்களை
வீசியெறிந்தும்
சஞ்சலம் கொள்ளாது
சாதித்திட உண்மையோடும் நேர்மையோடும்,
பணி செய்ய துணிந்தவர் நீங்கள்.

ஒரு வெற்றிக்கு ஒரு தோல்வியை
மறக்க செய்யும் சக்தி தான் உண்டு
ஆனால் ஒரு தோல்விக்கு பல
வெற்றிகளை அடையும்
சக்தி உண்டென்று உம் வாழ்வியலின்
சாத்தியங்களை
சாட்சியாய் முன் வைத்தவர் நீங்கள்.

அஸீஸ் என்றால்
வெற்றி எனும் இலக்கை
அடைய துணை நிற்கும்
ஆயுதமென்பேன்.

தன்னம்பிக்கையை சுமக்கும்
ஒரு பீனிக்ஸ் என்பேன்.

தன்னம்பிக்கையென்னும் ஆயுதம் உம்மிடம் இருக்கும் வரை
வெற்றி எனும் மைல் கல்லை
உம்மால் பண்பென்னும் ஒற்றை சிறகால் அடைந்திட முடியும்.

பல போராட்டங்களை
பல இன்னல்களை
பல காயங்களை
பல வலிகளை
பல தியாகங்களை
சுமந்து முப்பது வருடத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியில் நனைகின்றீர்கள்.
இலகுவான என்ற சொல்லை
உடைத்தெறிந்து
பணியை சிரமமின்றி
தொடரும் பயமறியான் நீங்கள்.

புத்தளம் தொடக்கம் அட்டாளச்சேனை வரையும் மனித மனங்களை
வென்றவர் நீங்கள்.

கிழக்கின் முழுதும்
கிளர்ந்து வளர்கிறது உமது பெயர்.
அளந்து சொல்ல
வார்த்தைகளிலில்லை எனக்கு.


திருகோணமலையின் புழுதி மணலெங்கும் மணக்கிறது
உமது சேவை.
தொடர்ந்தும் நீங்கள் எமக்குத் தேவை.

சேர் மறுமையை வெல்ல
மனித மனங்களே சரியான பாதை
அதுவே
நீங்கள் உணர்ந்த உண்ணத நிலை.

எனவே
நீங்கள் புன்னகை பூத்து
நீங்காத எம் அன்பில்
நிலைத்திடவேண்டுமென்று
கையேந்தி பிரார்த்தித்து
வாழ்த்தி நகர்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாராளுமன்ற கணக்காய்வுக் குழுவினால் கிழக்கு மாகாண முதலமைச்சுக்கு தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரூன்றிய விருட்சம்

M.F.**நவாஸ்,** D.D.O.
ஊடகவியலாளர்,

அட்டாளைச்சேனையை பிறப்பிடமாகக் கொண்ட கிழக்கு மாகாண முதலமைச்சின் தற்கால செயலாளர் நாயகம் ஜனாப். யூஎல்.ஏ.அஸீஸ் அவர்கள் ஆழ்ந்த சிந்தனையுடைய கிடைத்ததற்கரிய பொக்கிஷம், மிகவும் அற்புதமான நிருவாக சேவையின் சிந்தனை சிற்பி, இவர் முதன் முதலில் பல்துறை கல்விமான்களை உருவாக்கும் புனிதமான ஆசிரியர் தொழில் புரிந்தவர்.

அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய கல்லூரியில் இவர் ஆசிரியராக பணியாற்றிய சமயம், இவரது மாணவர்களுள் நானுமொருத்தன் என்பதனை குறிப்பிடுவதில் மன ஆறுதல் அடைகின்றேன் அந்த வகையிலும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக கடமையாற்றிய காலத்தில் அவருடைய நிருவாகத்தின் கீழ் ஒரு உத்தியோகத்தர் என்ற வகையிலும் எனது ஆசானாகிய இவரது சேவை நலன் பாராட்டி வெளியிடப்படவுள்ள மலருக்கு அவர் பற்றிய சிறு குறிப்பை எழுதிக் கொள்வதில் நான் மிகவும் புளகாங்கிதமடைகின்றேன்.

காலம் தன் சிறப்பினை மனிதர்களுள்ளும் காண்பித்து மகிழ்வது வழக்கம். இறைவனின் படைப்புக்கள் அனைத்திலும் பலநூறு சிறப்புகளுண்டு. அதன் நிமித்தம் காலத்தின் சிறப்பும் படைப்பின் சிறப்பும் இணைந்து நல்லதொரு வரலாற்று பதிவினை விதைப்பதுண்டு.அவ்வாறு உருவாக்கப்படும் ஓர் வரலாற்று பதிவுதான் செயலாளர் நாயகம் அப்துல் அஸீஸ் என்பது திண்ணம்.

எனது ஆசான் அப்துல் அஸீஸ் அவர்கள் நிருவாக சேவையில் ஆற்றிய பணித்திறனின் சான்றுதான் அவருக்கு மேலதிக அரசாங்க அதிபராகவும் கிழக்கிலங்கையில் கடமையாற்றும் பாக்கியம் கிட்டியது என்பது அனைவராலும் அங்கீகரித்துக் கொள்ளக்கூடிய உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று தசாப்தங்களுக்கு மேல் நிருவாகப் பணி செய்து விட்டு பலசாதனைகளுக்கு கால்கோலாக திகழ்ந்து அடுத்த ஆண்டு 2021ல் சேவையில் ஓய்வெடுத்துக் கொள்கின்ற இவரை பலரும் பாராட்டி கௌரவிக்கும் வண்ணம் ஏற்பாடு செய்துள்ள சேவை நலன் பாராட்டு விழாவானது காலத்தின் தேவையென நான் கருதுகின்றேன்.

இன, மத , பிரதேச வேறுபாடின்றி இவராற்றிய நிருவாகப் பணியும் சமூகப் பணியும் மகத்தானது. நிருவாகத் தொண்டுமட்டுமன்றி பல்வேறு பொதுப்பணிகளிலும் இவர் காலூன்றி நின்றதன் விளைவாக மறைந்த மாபெரும் தலைவர் மனிதநேயன் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்கள் இவருக்கு **"மக்கள் தொண்டன"** எனும் பட்டம் சூட்டி கௌரவித்தமை பெரும் பேறாகும்.

அகில இலங்கை சமாதான நீதவனாக செயற்படும் இவர் வேறுபல பதவிகளையும் தோளில் சுமந்து அதன் நிமித்தம் செய்திட்ட சேவைகளின் பயனாக பல்வேறுப்பட்ட விருதுகளையும் நினைவுச் சின்னங்களையும் பெற்றுள்ளமை வியக்கத்தக்க ஒரு விடயமாகும்.

எந்த நேரத்திலும் இன்முகத்தோடும் புன்னகையோடும் அனைவரோடும் இவர் பேசுகின்றமையும் அவர்களோடு சிநேகிதமாக உறவாடுகின்றமையும் இவரது உயர்ந்த பண்பின் தனித்துவமான சிறப்பம்சமாகும்.

**"முற்றத்து மல்லிகை மணப்பதில்லை"** என்பது ஒரு முதுமொழி. ஆனால் காலம் தாழ்த்தியாவது இவரின் அளப்பரிய சேவையை எமது பிரதேசமக்கள் புரிந்து கொள்வார்கள் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

இம்மக்கள் தொண்டனின் சேவை நலன் பாராட்டும் இந்நிகழ்வின் முயற்சிக்கு பல சிரமத்தின் மத்தியில் வழிகோலிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இவ்விழாக்குழுவினருக்கும் எனது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டாளைச்சேனையில் மிகவும் கோலாகலமாக முன்னாள் ஆளுநர் ஷான் விஜேலால் டி சில்வா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நசீர் ஆகியோரால் அட்டாளைச்சேனை டிப்ளோமா பயிற்சி நிலையம் திறந்துவைக்கப்பட்ட நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகம் சிரிக்க முகம் மகிழும் மாமனிதர்!!!

**'கலைமாமணி'**
திருமதி வ.ஜெயராஜ் (ஜெயா தமிழினி)
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்(1)
உ.உ.ஆணையாளர் அலுவலகம்
திருகோணமலை.

'அகம் சிரிக்க முகம் மகிழும்'
அகிலந்தனில் ஆழமானதும் அர்த்தமானதும் இதுவே
இறைவன்
அள்ளித் தந்த கொள்ளை வாசகம்

கடந்த வயதைக் கணக்கிட வேண்டியதில்லை
ஆற்றிய அளவிறந்த சேவையை அறியத்தேயையில்லை
அஸீஸ் சேர் என்றால் அணுகுவதற்கு இலகுவான
அகம் சிரிக்க முகம் மகிழும் மாமனிதர்

நேரியசிந்தனை நிமிர்ந்த நன் நடை
அமைதியாய் ஓடும் ஆற்று நீராய்ச்
சலனமேயற்ற சந்தோச முகபாவம் ஆதலால்
அனைவரையும் மகிழ்விக்கும் என்றும் பதினாறேயாம்.

இன மத சாதிபேதம் தவிர்த்து
இன்னலென்று வரும் எவர் உள்ளமும்
இனிதே மாற சிறந்த தீர்வினை
சிந்தித்து ஆற்றிடும் அன்பானவர் இவரே.

ஆழ்மனதில் மனிதப்பண்புகள் உறைந்து போயுள்ளதால்
அருமருதன்ன சேவையை அழகாய் ஆற்றி
அனைவர் மனதிலும் என்றும் நல்லவரேயென
நீக்கமற நிறைந்து வாழ்பவரும் இவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பாத்திரத்தின் வடிவையும் தனதாய்க்கைப்பற்றும் நீரதாய்
தன்னியல்பான நற்பண்புகளை பதவிக்குள் புகுத்தி
அப்பதவிக்கே அதிஉயர்வு கொடுத்த உத்தமர்
இவரேயென அனைவரும் அறிந்தே உள்ளனர்.

தன்னைத் தேடி நாடி வரும்
தவறுகள் செய்தவர்கள் தவறுகள் செய்யாது
தண்டிக்கப்பட்டவர்கள் குறைநிறைகளை ஆய்ந்து அறிந்து
அன்னையாய் ஆற்றுப்படுத்துவரும் இவரெனில் மிகையாகாது.

முடியாது இல்லையெனும் மறைசிந்தனை அகற்றி
'சிறந்த முகாமையாளர் தந்தைக்குச் சமனெனும்'
முகாமைத்துவக் கருத்தினைத் தலைமேல் கொண்டு
செயல்ப் புயலாய்ச் சேவைதனைப் புரிவாரே

உயர்பதவியில் நீண்டு நிலைத்து நின்று
காலம்கருதி நியாயமான முடிவுகளை எடுத்தாண்டு
பாங்காய்ப் பக்குவமாய்ப் பவித்திரமாய்ப் பதவிதனை
முன்னெடுத்த உதாரண மனிதர் இவர்.

தோன்றின் புகழொடு தோன்றுக எனும்
வள்ளுவர் வாய்மொழிக்கு என்றும் இலக்காகிய
இவர்வாழ்வு மேன்மேலும் சிறந்து விளங்க
அன்னையாய் வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்மாந்துறை ஆடைத்தொழிற்சாலை அடிக்கல் நடும் விழாவிற்கு வருகைதந்த முன்னாள் அமைச்சர் கௌரவ றவூப் ஹக்கீம் மற்றும் அமைச்சர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிருவாக தண்டியலங்காரம்

**சாமஸ்ரீ தேசமான்ய பாசித் முகைதீன்**
அரசியல் விசேடதுறை பட்டதாரியும்
அபிவிருத்தி உத்தியோகத்தரும்

உயரிய ஊர்ப்பற்றும்
நேர்த்திமிகு சேவைப்பற்றும்
ஊறிய அனுபவமும்
பாரிய மனோபாவமும்
கொண்ட எங்கள் செயலர்
அந்தகாரமுடைத்து அண்ணலானார்.

வெண்ணிற உளமகான் கண்ணுடுத்து
திங்கள் திங்கள் வருமுன்
அலுவலகமவதரித்து
சேவையே தேவையென உரைத்து
கதியிலியவனையும் அடியார் அடிசிலார்
அத்திரமதையும் அதரவார்.

சேனையூரின் மடி தன்னை
தாயாக்கி, அவர் அதில் சேயாகி
திருமலையும் புத்தளமும்,
கல்முனையும் மலையகமும்,
ஊரெனக்கருதி நற்பணியாற்றி
கண்டோரை குடும்பம் எனக்கருதி
கொண்டாரே உறவும் உணவும்.

ஐயநீர்!
ஒரு பக்க சார்பாளன் அல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுநிருபங்கள் விதி சொல்லும்
ஆனால், சாய்ந்ததில்
நிறைவுறும்
மக்கள் பக்கத்து கோவைகள்.

என்றும் மக்கள் தினம்
எதிலும் நெகிழ்வுப் போக்கு
எப்போதும் கனிவுப் போக்கு
தீயவைக்கு முற்றுப்புள்ளி
தீண்டாமைக்கு எச்சரிக்கை
ஊழலுக்கு ஆணவம் எனத்தகும்

அயனமது சிறப்புற்றதால்
கல்வியும் ஒழுக்கமும்
அயிலாயிற்று, இவன்
பல்கலைக்கழகமும் சென்று
ஆசு இரியனாகி
பின் நிருவாகியாகியதில் அமலனானான்

வரப்புயர
நீர் உயரும் என்பதைப்போல்
யாம் உயர்ந்தோம்,
இவர் உயர.
இதனால் இவர்
அலுவலக அணிகளுக்கு
நவீன தண்டியலங்காரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தில் இடம்பிடித்த இனியதொரு சேவகன்

- பொத்துவில் பழீல்

எம் கிழக்கு ஈந்த பெரு
தென்கிழக்கின் ஆளுமை – நம்
இதயத்தில் நிறைந்திருக்கும்
இனியதொரு சேவகன்
'அப்துல் அஸீஸ்' எனும் நாமம்
நெஞ்சக் கூடு தனில் - என்றும்
நிறைந்தவொரு திரு நாமம்.

பிரதேச செயலாளர் முதற் கொண்டு
முதலமைச்சின் செயலாளர் என
முன்னேற்றம் கண்டு வாழ்வில்
முன்னெடுத்த பணிகள் பல.....

புத்தளத்தில் முதற் பணியை
பொறுமையுடன் ஆற்றி – மக்கள்
இதயத்தில் இடம்பிடித்த
இனியதொரு சேவகனாய்
வாண்மையும், நேர்மையும்
வகித்த பெரும் பதவியெலாம்
தூய்மையாய் ஆற்றி நின்ற
துணிவுடைய அதிகாரி......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிகளில் மூப்படைந்த
பணிகளுக்கு ஓய்வு நிலை
பெறுமந்த பெருமகனை
பெருமையுடன் வாழ்த்துகின்றேன்.

யு.எல்.ஏ.அஸீஸ் அவர்கட்கு
நன்மையும் தொழில்
நாயன் பொருந்திடுவான்.-
உங்கள் சேவை நிறைவிது.
காலம் இனியது நாளும் அருள்
புரிவான்!.. காலத்தின்
வேகமறிந்து கடமையில்
தெளிவாய் இருந்து தொழிலுக்கு
உயிரூட்டிய கருணை மகன் எங்கள்
முதலமைச்சின் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூதூர் - சம்பூர் ஆடைத்தொழிற்சாலைக்கு அடிக்கல் நடும் விழாவிற்கு வருகை தந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தன் அவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானமுள்ள கவரிமான் நீ

M.A. நஜீத் அஹமத் SPS - I
திட்டமிடல் பணிப்பாளர்

அட்டாளை பல கட்டி ஆங்காங்கு சேனைகளை
திட்டமிட்டுச் செய்வதிலே தீரர்எனப் பெயர் பெற்ற
அட்டாளைச்சேனைத் தாய் பெற்றெடுத்த அரும்புதல்வன்
அப்துல் அஸீஸென்பான் அருமைகளை அறிவோம் வா
முளையினிலே விளைபயிராய் முகிழ்ந்து நின்ற மூன்றாம் பிறை
முது வயதை அடையாமலே முதிர்வு கண்ட இளவேனில்
தழை தழையாய் தலயெடுத்து தலைவனான தலைமைத்துவம்
தனக்கு நிகர் தானெயென்று தனித்தியங்கும் தனித்துவத்தான்

உழைப்பாளர் வர்க்கத்திலே உதயமானார் ஒரு மனிதர்
உதுமாலெவ்வை தந்தையவர் உதிரத்தில் உதித்த மகன்
கலைக்கோயில் சிலைபோல் காட்சி தந்தாள் ஒரு மாது
கதீசா உம்மா தாயவரின் கருவறையில்தரித்த மகன்
வலைப்பின்னல் வாழ்க்கைக்குள் வாழ்வாங்கு வாழ்வாகி
வசந்தப் பூச்சங்கங்களினால் வாகை சூடிக்கொண்ட நதி
மலைபோல் வரும் தடையை மணலாக்கி படி செய்து
மன்றத்துள் முதல்வனாக மலர்ந்து நின்ற மணி மகுடம்.

பல்கலைக்கழகம் வரை பட்டங்கள் படித்த மகன்
பாமரர், படித்தவர்கள் பழகுமுறை அறிந்த மகன்
உள்ளத்தில் தூய்மையொளி உள்ளதனால் வாக்கினிலே
ஒளியோடு உலாவரும் ஒருவரும் அஸீஸென்று
நல்லவரும் வலலவரும் நாவாலே புகழ்பாடும்
நண்பர் அஸீக்கு நானெழுதும் தமிழ் வாழ்த்தில்
எல்லோரும் வாழ்த்துரைக்க எழுதுகிறேன் கவி வாழ்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மவர் அஸீஸ் புகழை ஏற்றமுடன் பாடுவோம் வா.
நிர்வாகச் சேவையிலே நிலை நிறுத்தம் பெற்றவுடன்
நின்சேவை புத்தளத்தில் நிறுத்தள்கள், ஜெயமானாய்
மறுசேவை அட்டாளை'க்கு மாற்றமாகி நீ வந்தாய்
மலர்ந்ததுவே "சேனை" நகர மறுமலர்ச்சி பிரதேசம்
உருப்படியாய் நீ செய்த உற்பத்திகள் பல நூறு
ஒவ்வொன்றும் உன் பெயரை உழுதுவைக்கும் நாள் கூறு
எருவானாய் மக்களுக்கு ஏணியானாய், தோணியாய்
எப்பொழுதும் இயந்திரமாய் இயங்குகின்ற இயக்கமானாய்.

மாமனிதர் அஷ்ரபது மனம் விரும்பும் தம்பியானாய்
மக்கள் தொண்டன் பட்டமாகி மனிதருக்குள் புனிதரானாய்
மீலாத் நகரோடு சம்பு நகர், ஆலம்குளம், திராய்க்கேணி,
தீகவாபி, ஹுஸைன் நகரம் மாதிரியாய் கிராமங்கள்
மலர்வதற்கு நீ செய்த மகத்தான சேவைகளை
மறுப்பதற்கு முடியாது மணம் வீசும் அப்பணிகள்
கலர்காட்ட விரும்பாது காலமெல்லாம் கடமை செய்த
கதிரவனார் அப்துல் அஸீஸ் காத்திரத்தை போற்றுவோம் வா.

பிரதேச செயலகத்தின் பெருமைகளை பிறர் பேச
பிடிப்புடனே பணி செய்து பெரும்புகழைப் பெற்றவன் நீ
அரசியல் ஞானிகளின் அனுசரனை உனக்குண்டு
அதனாலேயே பௌதீக விருத்திகளை செய்தவன் நீ
பிறர் மனம் நோகாத பேராற்றல் திறமையதால்
பேராளர் தனையீர்த்து பேறுபெற்ற பெயர் வழி நீ
உறவாட உகந்தவன் நீ உண்மை பேசும் உத்தமன் நீ
ஊர்மக்கள் அனைவருக்கும் உவந்ததொரு ஔடதம் நீ

உங்களது பரிணாமம் ஒவ்வொன்றும் அறிந்தவன் நான்
உங்களுடன் அரிச்சுவடு, அரிச்சுவடி பயின்றவன் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோடு நட்பாகி எப்பொழுதும் இருந்தவரே
எல்லோரையும் சமமாக எடுத்தியம்பும் நல்லவரே
உங்களது உயர்ச்சியிலே உள்ளம் நான் மகிழுகிறேன்
உங்களுக்கு இறைஆசி ஓதுதற்கு அவாவுகின்றேன்.
எங்களது கழகத்து எழுச்சியினை உள்வாங்கும்
எம்மவரே அப்துல் அஸீஸ் எழுக இனி வாழுக நீர்.

(வேறு)

வல்லமையை கல்வியிலே வார்த்த உந்தன்
வரலாற்றை "சென்ரல் கொலிஜ்" வடித்துச் சொல்லும்
பள்ளியிலே நீ பயிலும் காலமெல்லாம்
பாடங்களில், பரீட்சைகளில் முதன்மையானாய்
பிள்ளைகளில் நீ ஒருவன் தானே அன்று (1982)
பிரஞ்ஞையுடன் பல்கலைக்கு பயணம் செய்தாய்
நல்லவர்கள் சகவாசம் நட்பில் தோய்ந்து
நாடு போற்றும் அதிகாரம் பெற்றாய் வாழ்க.
எஸ்.எல்.ஏ.எஸ். (SLAS) பரீட்சையிலே தேர்ச்சி பெற்றாய்
எடுபட்டவரில் நீ ஒருவன் தானே முஸ்லிம் (1990)
எம்.ஏ.ஏ.அஸீஸ் என்னும் அறிஞர் பின்னால்
யூ.எல்.ஏ. அஸீஸ் வந்தாய் வாழ்க நண்பா
ஓ! உயர்ச்சி மேலதிக அரச அதிபர்
ஒவ்வொன்றும் உனது திறன் வாழ்க நண்பா.

நீதி நிறைந்த நிருவாகம், நிலைப்பாடு
ஓதும் வார்த்தைகளில் உண்மை, ஒருமைப்பாடு
யாதும் ஊரே யாவரும் கேளீர் என்னும்
சாதுவான கொள்கை, சாதாரன வாழ்க்கை
போதுமென்ற மனசு, பொறுமை, பொதுநோக்கு
பொல்லாப்பு இல்லாத புரிந்துணர்வு, புதிய சொல்
யாருக்கும் தீங்கிழைக்கா யதார்த்தவாதம்
அப்துல் அஸீஸென்றால் அது உண்மை ஊர் ஏற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாணையிலே உருவான எமது நட்பு
சாசுவதம் பெற்றோங்கி சாந்தி காண
ஆணையிடத் தேவையில்லை நமக்கு ஆரும்
அத்திவாரம் மிக உறுதி நட்பு வாழும் உன்
தானமது வானமது போலுயர்ந்து, மேலும்
தகைமைகளை பெறுவதற்கு வாழ்த்துகிறேன் - நல்ல
மானமுள்ள கவரிமான் வழியில் தோன்றிய
மனுநெறியே மல்லிகையே வாழ்க நண்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1997 தேசிய மீலாத் விழா நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ர.்.ப் அவர்களுடன் "மீலாத்நகர்" திறப்பு விழாவில் பங்கேற்ற நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ சிங்கமான தங்கம்

**கவிஞர். ஜே. வஹாப்தீன்**
ஒலுவில்

நிலவின் வெண்மையாய்
நதியின் தண்மையாய்
கடமையின் உண்மையாய்
கண்ணியத்தின் தன்மையாய்

ஒரு வயலை
ஒழுங்காக விதைக்கின்ற
உழவனாய்,
ஒரு கவிதையை
சுவையாகப் படைக்கின்ற
கவிஞனாய்,
செயற்றிறன் மிக்க செயலாளரே!
ஆற்றல் கனத்த அரசாங்க அதிபரே

அப்துல் அஸீஸ்
ஆண்டவன் அருள் நீ...
அட்டாளைச்சேனையின்
அர்த்தமுள்ள பொருள் நீ

பேதமில்லை
பிரதேச சாதமில்லை
ஒரு நதியைப் போல் ஓடி
ஒற்றுமைக் கயிற்றைத் தேடி
வெற்றிவாகை சூடி
பூத்துவிட்டாய் பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் இனத்தின்
திங்கள் நீ
பொறுமை கொண்டு
வறுமை உடைத்தாய்
சூரியனாய்...!

கருணையின் தாய்
கடமையின் தலைவன்
சிரிப்பால் மயக்கி
உள்ளம் கவர்வாய்
நீ
தலைமை வகித்தால்
விழாக்கள் பூக்கும்
நீ நிமிர்ந்தால்
கனாக்கள் நிஜமாகும்

எங்கள் தாகம்,
உன்னால் தீரும்
உங்கள் மோகம்
சேவையின் மோகம்

நேரமெல்லாம்
நேயத்தின் பாதையிலே...
நீ... வானம் கழுவவந்த நிலா...!

ஒரு விளக்கில் வாழ்ந்த காலம்
காணத்துப் போனதற்கு
மின்விளக்குகள்தான் காரணம்
அதற்கு மின்சாரம் முக்கியம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்களும் தலை நிமிர உயர்ந்தாய்
ஒவ்வொரு ஊரிலும் மலர்ந்தாய்
ஒரு நதியாகிப் புழுதிபோக்கு...
ஒரு நிலவாகி இருள் கிழி
நீ அமைக்க வேண்டும்
நாங்கள் நடக்க வழி

காற்றாகிச் சுவாசம் தா
கடமையால் சேவை நீர் ஊற்று
இது வறண்ட பூமி
உன்னைப் போற்ற
உலகம் வருகிறது.
உன்னை வாழ்த்த
உயிர்கள் மலர்கிறது...

ஒலுவில் மக்கள்
ஒன்றாய் நின்று
வாழத்துப் பாட
வருக...! வாழ்க...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்காமம் மக்களின் இதயம் கவர்ந்தவர்

பிரதேச செயலகம்
இறக்காமம்

அட்டாளைச் சேனைத்தாய் பெற்றாள் பிள்ளை
அதிலொருவர் ஆம்நமது அப்துல் அஸீஸ்
திட்டமிட்டு கல்வியலில் தேர்ந்தார் அஸீஸ்
திருப்புமுனை படிப்படியாய் தேர்ந்தார் அஸீஸ்
பட்டங்கள் பெற்றாரவர் B.A, M.A, SLAS
பதவிகளில் பரிணமித்தார் DS, Additional GA
மட்டுமன்றி மேலுமவர் பெற்றார் பதவி
மாண்புமிகு சுகாதார அமைச்சின் செயலர்!

வள்ளுவரின் குறள்வழியில் வாழ்ந்தார் அஸீஸ்
வார்த்தாரே "மகன் தந்தைக்காற்றும் உதவி
இவன் தந்தை எண்நோற்றான் கொல்லெனும் சொல்"
இனியகுறள் சொல்வென்ற சுகந்தன் அஸீஸ்
நல்லபடி கடமைகளை செய்தாரஸீஸ், அதனால்
நல்வரவு வரவேற்பு பெற்றார் அஸீஸ்
வல்லமையை மக்களுக்காய் வசைத்தார் அஸீஸ்
வாழ்வியலை வாழ்வாங்காய் வாழ்ந்தார் அஸீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவுக்கு யார் முகமும் தெரிவதில்லை, ஆனால்
நிலவுமுகம் தெரியாதவர் யாருமில்லை, அதுபோல்
நிலவாகி நிலவுகின்ற நிலவு அஸீஸ், அவர்
நிலைப்பாடும் அப்படித்தான் நிலவும் அஸீஸ்
உலாவந்தார் ஒவ்வொருவர் உதயம் அஸீஸ்
ஊரூராய் ஊரறிந்த உருவம் அஸீஸ்
பலாவாழை மாம்பழம்போல் பழகும் அஸீஸ்
பண்பாளர், அன்பாளர், பசுமை அஸீஸ்

இறக்காமம் மக்களுக்கு இதயம் அஸீஸ்
இனிப்பான கற்கண்டு இரக்கம் அஸீஸ்
மறக்காமல் இறக்காமம் மகிமை பொங்க
மன்றுகளில் மன்றாடும் மார்க்கம் அஸீஸ்
திறக்காத பூட்டுக்களின் திறப்பு அஸீஸ்
திறம்பட்டார் அதனாலே தீர்த்தம் அஸீஸ்
சுரக்காத முலையினிலும் பால்சுரக்க, என்றும்
சூட்சுமமாய் பணிபுரியும் சூரன் அஸீஸ்!

வரிப்பத்தான் சேனைக்கு விரிப்பு அஸீஸ்
வளமான குடிவிலூர் வார்ப்பு அஸீஸ்
சரிநிகர் செயற்பாட்டின் சார்பு அஸீஸ்
சந்தோசம் எல்லோர்க்கும் சமைப்பு அஸீஸ்
கரியல்ல, கறுப்பல்ல அஸீஸின் சேவை
கண்ணுக்குள் மணியான காந்தச் சேவை
புரிந்துணர் வோடன்னார் புரியும் சேவை
பூமிக்கு சமபூப்பூ பூத்தார் சேவை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணம் கிழக்கு மாசபையில் சேர்ந்தார்
மன்றத்தில் சுகாதார அமைச்சில் இணைந்தார்
வாகானார், வடிவானார், வாடிக்கையாகி மக்கள்
வளம்காண நற்சேவை வடிப்பார் செம்மல்
தோதாவார், துடுப்பாவார், துடிப்பானாகி, என்றும்
தொழிற்பாட்டில் தொழுகையாகி துவைப்பார் அஸீஸ்
கோதாவில் கோனாகி குரல் கொடுப்பார்
கோத்திரத்தின் பெயரிலங்க கொள்கை வெல்வார்!

பிரதேசம், மாவட்டம், என்றிலங்கி, இன்று
பிறதேசம் மாகாணம் கால்நகர்ந்து – மக்கள்
உறவோடு சேவை செய்யும் உயர்ச்சி பெற்றார்
ஓ! எங்கள் அஸீஸ்சேர் உயர்ச்சி வாழ்க!
திறமைக்கு கிடைத்த பெரும்பரிசு செயலர்
திருப்புமுனை போற்றுகிறோம் அஸீஸ்சேர் வாழ்க!
இறவாத புகழோடு அஸீஸ்சேர் வாழ்க்கை
என்றென்றும் நீள்வாழ்க! வாழ்க அஸீஸ்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து முஸ்லிம்களுக்கொரு இலச்சினை

**-கவி ஒலி கலா பூஷணம்**
ஆசுகவி அன்புடீன் -

மறைவழி ஒழுகும் மனிதர்கள் வாழும்
அழகிய பதி
இறையவன் பக்தி இலங்கிடும் அட்டாளைச்
சேனையூர் தனிலே
பிறைமகன் அப்துல் அஸீஸ் அவன்
பிறந்தான் ஒளி
துறைபல தேர்ந்து நிறைபல நிறைந்து
செம்மை கண்டான் அஸீசு

பல்நில வளமும் பெற்றதோர் பதி
அட்டாளைச் சேனையில்
நல்லதொரு குடும்ப நாயகன் உதுமா
லெப்பையார் தந்தை
இல்லறம் விளங்க இலங்கிடும் ஜோதி
கதீஸா உம்மா
பிள்ளையாய் மண்ணில் பிறர்தனன் அஸீசு
குல விளக்கு

வித்தகன் அஸீசு விளைந்தனன் பயிராய்
விருட்சமாய் வளர்ந்து
நித்தனின் அருளால் சத்தியம் கல்வி
சமர்த்தனன் ஆகினான்!
வித்தகம் பெற்றான்! வீரியம் ஆனான்!
விமலனாய் ஆகி
நித்தியம் நிலைக்க நீள்கல்வி வென்றான்
அப்துல் அஸீசே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணத்தினில் குன்றாய் கொள்கையில் நன்றாய்
கூர்விட்ட கோமான்
சனத்திடை சாது, மன்றத்தில் தூது,
சமனிலைப் பேறு!
மனத்திடை ஆழம்! மன்றத்தில் சீலம்!
மானமுறு மானாய்
கனத்துடன் விளங்கும் கடமையில் வீரன்
அப்துல் அஸீசே!

பல்கலைக் கழகக் கல்வி பயின்றான்
பயின்று தேறி
நல்லதோர் ஆசான் நவின்றனன் நவீனம்
கல்விச் சிகரம்
வல்லமை யானான் வடிவு வண்ணம்
நிருவாகச் சேவை
எல்லையில் எடுகோள் எடுத்தனன் அஸீசு
'ஏஜிஏ' துரையே!

பாரிலே அன்னவன் பணிகள் பகலொளி
பசுமைக் கீற்று
ஊரிலே அன்னவன் சேவையின் உயரமோ
மலையின் நீட்டு
தேறிய வாழ்க்கை வாழ்ந்த நேர்த்தியன்
நேர்மை நெம்புகோலன்!
மாரியாய் மக்கள் பணியினில் மகிழ்ந்தனன்
அஸீசு வாழ்க!

ஈழத்து முஸ்லிம்களுக்கொரு இலச்சினை
அரச அதிபர், செயலாளர் பணிகள்
காலத்தின் சுடராய் சூடினான் கவின்ஒளி!
கோலத்தில் மேலும் பல கூர்முனை
கொண்டு ஏகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளத்தில் உணர்ச்சி பொங்கி நவில்கிறோம்
கவிதை வாழ்த்து!
அன்பர் நம் அஸீசு வாழ்க! அவரது
குலத்தோர் வாழ்க!
பண்புசார் குரவர் வாழ்க! பக்கத்து
நண்பர் வாழ்க!
மண்பசை பச்சை வாழ்க! மரம்செடி
கொடிகள் வாழ்க!
எண்திசை புகழோடி லங்கி அஸீஸ்
என்றென்றும் வாழ்க! வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் அபிவிருத்திப் புரட்சியின் ஒரு பிதாமகன்

**ஏ.எம்.ஸாஹிர்**
பிரதம பொறியியலாளர்
கட்டடங்கள் திணைக்களம்

அட்டாளைச்சேனைப் பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட யூ.எல்.ஏ.அஸீஸ் சேர் அவர்கள், இலங்கை நிர்வாக சேவையில் முப்பது வருட சேவையைப் பூர்த்தி செய்வதை முன்னிட்டு, கிண்ணியா Youth Net மற்றும் KTV அலைவரிசை என்பன இணைந்து வெளியிடும் இப்பாராட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அஸீஸ் சேர் அவர்கள், இலங்கை நிருவாக சேவைக்கு தெரிவு செய்யப்பட்டது முதல் இன்று வரை இன-மத வேறுபாடுகளின்றி அனைத்து மக்களையும் அரவணைத்து பலதரப்பட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

குறிப்பாக, கடந்த 08 ஆண்டு காலமாக கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக கடமையேற்று பல சவால்களுக்கு மத்தியில் மேற்கொண்ட அபிவிருத்தி திட்டங்கள் எண்ணில் அடங்காதவையாகும். அவற்றுள் கட்டடங்கள் திணைக்களத்தின் வடிவமைப்பு மற்றும் மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு கம்பீரமாகக் காட்சிதரும் அட்டாளைச்சேனை உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் (Sales Outlet), ஊரின் பிரதான மையத்தில் வசீகரமாக நிமிர்ந்து நிற்கும் அட்டாளைச்சேனை மீலாத்தூபி, சாய்ந்தமருதில் கழிவுகள் கொட்டும் இடமாகக் காணப்பட்ட தாமரைக்கேணி குளக்கரைப்பகுதியை சுற்றுலா பணியகத்தின் மூலம் நிதி ஒதுக்கி பொழுதுபோக்கு இடமாக மாற்றியமைத்தமை, சாந்தமருதில் 20 மில்லியன் ரூபா செலவில் உள்ளூராட்சி திணைக்களத்தின் ஊடாக அமைக்கப்படும் சனசமூக நிலைய கட்டடம் போன்ற அபிவிருத்திகளுக்கு எல்லாம் அஸீஸ் சேர் அவர்களின் பங்களிப்புகள் என்றும் மறக்க முடியாத சேவைகளாகும்.

அதுமட்டுமல்லாமல், சுமார் 2000 மில்லியன் ரூபா நிதியில் 'நெல்சிப்' திட்டத்தினூடாக உள்ளூராட்சி மன்றங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி அபிவிருத்திகள், வடிகான் வசதிகள், பாலங்கள், பொது நூலகங்கள் என்பன அம்பாறை மாவட்ட மக்கள் அனைவருக்கும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளாகும். தமன பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தில் மிகவும் பெரிய பொதுச்சந்தை போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் அஸீஸ் சேர் அவர்களின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு பணியாகும்.

இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி தாபனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய துறைகளான கிராம அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில், சுற்றுலா பிரிவுகள் எல்லாம் இவரது அமைச்சின் கீழ் பெரும் வளர்ச்சி கண்டுள்ளன எனலாம். பிரதேச வேறுபாடுகள் பாராது அனைத்துப் பிரதேசங்களும், அனைத்து இனமக்களும் இவரது பணிகளால் பெரும் பயன் அடைந்ததை எவரும் மறுக்க முடியாது.

செயலாளர் அஸீஸ் சேர் அவர்கள், அவ்வப்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் கையாளும் விதம், தூரநோக்குடன் சிந்திக்கும் நுட்பம், மக்களை மதித்து வரவேற்று புன்முறுவலுடன் பழகும் பாங்கு என்பவை எமது இளம் நிர்வாக தலைமுறையினருக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

உண்மையில், அஸீஸ் சேர் அவர்களின் தன்னலமற்ற இச்சேவை மிகவும் பாராட்டப்பட வேண்டியதே. எமது சமூகம் இப்படிப்பட்ட உயர்ந்த பொக்கிசங்களை கிரீடம் அணிவித்து கௌரவிப்பதற்கு எவ்விதத்திலும் தயங்கக்கூடாது என்பதை கூறிக் கொள்ளும் அதேவேளை, பல்தேர்ச்சியுள்ள பல்கலைக்கழகமான இக்குரல் எமது சமூகத்திற்காக எமது நாட்டின் உயர் சபைகளில் ஒலிக்க வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

இறைவனின் அருளும் ஆசியும் இவருக்குக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை விளக்கமென உயர்ந்து மிளிர்கின்றாய்

பிரதேச செயலகம்
அட்டாளைச்சேனை

காடு, களனி, கவின் சோலை
பாடு பொருள்
தொடுகை வான், கடல், வளி
உருள் கதிர், மதியென
ஏடுகளிலும் எழுதிமாளாப்
பொருள் அனைத்தும்
படைத்த தூயவனே!
ஞான மகன் நபிகளாரின்
நல்லாசான் ஆனவனே
வானின் எல்லைவரை
வளர்ந்த புகழ் அப்துல் அஸீஸ்
வளமிகு சேவை நலன்
பாட ஆண்டவனே
நீ காப்பு

இன்னும்
கன்னல் மடல் விரித்துக்
கதை பேசும் காற்றோடு
செந்நெல் தலைசாய்த்து
சேதி சொல்லும் புவியோடு
வண்டூதும் மலர்ச்சோலை
விரவியோடும் தேனாறு
கமுகிளம் பாளை யென
கலகலக்கும் குமரியினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமகள் நாவில் நிற்கும்
நல்லறினர் உறையும் எங்கள்
அட்டாளைச்சேனை
இங்குதித்தான் இமயமவன்

இல்லற இலக்கணத்தில்
இலட்சணங்கள் தவறாத
உதுமாலெவ்வை – கதீஜா உம்மா
உயர் வாழ்வில் உதித்திட்ட
உதய சூரியனாம்
அப்துல் அஸீஸ்

அடக்கம், ஆன்மீகம்
அறிவு ஞானம்
மேதினியில் மேலோங்கும்
நெறியாளன்

முடக்கம், முயலாமை
முனிவு என்றெல்லாம்
முகர்ந் தறியாப் பண்பாளன்
ஆசானாய் பிரதேச செயலாளராய்
மேலதிக அரச அதிபராய்
மனித நேசனாய்
அன்பு தாசனாய்
என்று பல பண்புருவம்
கொண்டவனாம் இவ் அப்துல் அஸீஸ்.

தொண்டு பல ஆற்றிடினும்
சுட்டு விரல் தொட்டு பிறர்
கண்ணீரைத் துடைத்திடினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமயமென உயர்த்திருப்பான்
இமயம் சுருங்குவதில்லை
உனக்கு
ஞானப்பால் தந்திட்ட
நல்லாள் கல்லூரித்தாய்
ஞாலத்தில் உயர்ந்திட்டாள்

கண் இமைக்க மறந்தாலும்
கடமைதனை நீ மறவாய்
நிருவாகக் கப்பல் தனின்
பழுத்த மாலுமி நீ!
கலங்கரை விளக்கமென
உயர்ந்து மிளிர்கின்றாய்

பொது நிறுவனம் என்றால்
அங்கு
நெருப்பெரியும், புயல் வீசும்,
அடி மரம் கூட அல்லாடும்
சுற்றிவர சுனாமி வரும்
இள இரத்தங்கள்
புதுமை பல கொண்டு வரும்
அத்தனை வீச்செல்லாம்
புன்னகைத்துத் தாங்குமிவன்
விழுப்புண் கண்ட வீரன்
சுடு சொல் வீச்சரிவாள்
வீசாத ஞான மகன்
நீ இல்லாச் செயலகம்
நினைத்தாலே நெஞ்சடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்மூன்று வருடங்கள்
நற்சேவை செய் நாயகனை
பூ மேலே வாழுகின்ற
பூ மகளின் காவலனை
"தூ" என்று சொல்லறியா
தூய மனம் கொண்டவனை
இல்லறத்தின் நல்லறமாய்
இணைந்திருக்கும் காதலனை
பிரதேசச் செயலகம் பிரிகிறது
காலத்தின் கட்டாயம் இது
எங்கள்
கண்ணீர் விடை காணிக்கை

மேலும்
ஞான மகுட நடுத்திகழ்
மணியாம்
வானமாம் தொடுகை
வளர் புகழோங்கு
தண்ணியல் விரிமலர்
தாங்கிய தருக்கள்
புண்ணிய பூ மகன்
துணைவி குலத்தோடு
குஞ்சரம் ஊர்ந்திடத்
தேர்மேல் பவனி
வெண்குடை நிலைத்திட
முஹம்மது நபிக்கு
முழுமறை தந்தோன்
இக பர நாயகன்
அல்லாஹ் அருள்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரின் உயர்வுக்காய் உழைக்கின்ற உத்தமன்

கிராம அபிவிருத்திச்
சங்கம்
அட்டாளைச்சேனை

எழுவானில் கடல் வளமும் இளந்தென்னைகளும்
படுவானில் வயல்நிலமும் பசுமைதரும் காட்சிகளும்
முழுநாளும் உழைப்போர்க்கு முன்னேறவளமும்
முழு இலங்கைபுகழ்பரப்பும் கலாசாலைபெருவளமும்
எழுத்தாளர்கலைவளமும் இனிய அரபிக்கல்லூரியும்
இட்டமைந்துள்ள இனியதோர் அட்டாளை.

அட்டாளையூர்ஈன்றெடுத்த அன்பாளன் அஸீஸ்
இட்டமுடன் கல்வியயினை இயன்றவரைகற்றுஇவர்
பட்டம்சுமந்துபெரும் பதவிகளில்வந்தமர்ந்து
மட்டில்லாபெரும்சேவை மக்களுக்காய்ச்செய்கின்றார்
கல்வித்திணைக்களத்தில் தொழில்புரிந்தபின்னர்
நிருவாகச்சேவைக்குள் நுழைந்துகொண்ட அதிகாரி
பிரதேசசெயலாளராய்ப் பிரியமுடன்பதவிபெற்று
ஈரைந்துஆண்டுக்குமேல் இனியபணிசெய்கின்றார்.

ஊரின்உயர்வுக்காய் உழைக்கின்றஉத்தமன்
சீரியபண்பாளர் சிறந்தசமூகசேவையாளர்
ஏறியஏணிகளில் பிறரையும்ஏற்றுகின்ற
எண்ணம்,இயல்பு இருக்கின்றதோர்ஜீவன்
காரிருள்நீக்கும் கதிரவன்போன்றுஇவர்
எளியோர்வாழ்வுக்கு வழிகாட்டும்ஒளிவிளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும்புன்னகையை கடுதியில்வீசும்இவர்
இன்முகத்தோடு இனிதாகப்பேசிடுவார்
தன்னலம்கருதாது தாராளப்பணிபுரியும்
கண்ணியம்நிறைந்த காருண்யஜீவன்இவர்
நோன்மதிஎழில்முகமும் நொந்திடாப்பெருமனதும்
தேன்துளிபோன்ற தெவிட்டாதகுரல்வளமும்
தன்னகம்கொண்டுள்ள தயாளமனம்படைத்தோன்
மண்ணில்நீள்வாழ அனைவருமே பிரார்த்திப்போம்

நெஞ்சில்வஞ்சமில்லை இல்லைசதிஇவர்வாழ்வில்
அஞ்சும்கோழைநெஞ்சு அவரிடத்தில்கண்டதில்லை
கொஞ்சும்மழலைபோல் கொஞ்சிடவேஆசைவரும்
பிஞ்சுள்ளம்படைத்த பெருந்தகையேஅப்துல்அஸீஸ்
எல்லோர்மனங்களையும் இலகுவில்ஈர்த்தெடுக்கும்
வல்லமைகொண்ட நல்லதொருபடிப்பாளர்
விசேடஆணையாளர் பதவியிலேபல்லாண்டு
விசேடபணிபுரிந்த வீரமிகுசெயல்வீரர்

மக்கள்மனங்களிலே வாழ்கின்றஇம்மனிதர்
தக்கபடிவாழ்வில் தாராளம்உயரவேண்டும்
மக்கள்தொண்டாளர் மரணித்துப்ரோவதில்லை
எக்காலம்தொட்டும் அவர்கள்பெயர் நிலைத்திருக்கும்
பக்குவம்நிறைந்த பண்பாளர்அப்துல்அஸீஸ்
பொன்னும்,பொருளும் வாழ்வில்இவர்பெற்று
பிறந்தமண்ணும் தாய்நாடும்போற்றிட
இன்னும்வாழ்வில் உயர்ந்திடவேண்டும்
என்றுவாழ்த்தி இருகரம்ஏந்தி
இறைவனிடத்தில் பிரார்த்தனைசெய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்துல் அஸீஸ் – சுயமும் பதிவுகளும்

**தனிப்பட்ட முகவரி**

பெரிய பள்ளி வீதி, அட்டாளைச்சேனை

**பெற்றோர்**

**தந்தை**

சுலைமாலெவ்வை உதுமாலெவ்வை

**தாய்**

அஹமது லெவ்வை ஹதீஜா உம்மா

**கல்வி புகட்டிய பாடசாலைகள்**

அட்டாளைச்சேனை அல் - முனீரா வித்தியாலயம்

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை (மத்திய கல்லூரி)

**குடும்பம்**

திருமணம்

பாத்திமா றுமைசா (மனைவி)

**பிள்ளைகள்**

பாத்திமா சன்ஷிதா B.A (Hon's), Dip. in IT

முஹம்மட் சஹ்றாம் MAAT, HND in CSD, CASL(R), B.Sc in Acc & Fin

பாத்திமா சிமா

அஹமட் ஹஸ்னி

பாத்திமா மயீஷா

**உயர்கல்வியும் பட்டங்களும்**

B.A (சிறப்பு) – பேராதனைப் பல்கலைக்கழகம்

M.A – சர்வதேச உறவுகள் - கொழும்பு பல்கலைக்கழகம்

M.A – பொதுத்துறை நிருவாகம் - மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொழில்சார் தகைமை**

இலங்கை நிருவாக சேவை – 1990 ஓகஸ்ட்

தற்போது இலங்கை நிருவாக சேவை (விஷேட தரம்)

**அரச பணிகள்**

ஆசிரியர் சேவை – 06 வருடங்கள்

உதவி அரசாங்க அதிபர், புத்தளம் - 1990-1993

பிரதேச செயலாளர், அட்டாளைச்சேனை - 1993-2005

விஷேட ஆணையாளர் - பிரதேச சபை, அட்டாளைச்சேனை - 8 வருடங்கள்

மேலதிக அரசாங்க அதிபர், அம்பாறை மாவட்டம் - 2005-2009

செயலாளர், சுகாதார அமைச்சு, கிழக்கு மாகாகணம் - 2009-2012

செயலாளர், முதலமைச்சு, கிழக்கு மாகாணம் - 2012 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை

**புலமைப் பரிசில் பெற்றுச் சென்ற நாடுகளும், பயிற்சிகளும்**

**ஜேர்மனி** - பொதுத்துறை நிருவாக பயிற்சி 2004

**தாய்லாந்து** - அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி 2005

**வங்காளதேசம்** - விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான பயிற்சி – 2009

**அவுஸ்திரேலியா** - சிரேஸ்ட அதிகாரிகளுக்கான பொது நிருவாகம் தொடர்பான பயிற்சி – 2013

**தென் கொரியா** - நல்லாட்சி தொடர்பான பயிற்சி - 2013

**கம்போடியா** - உயிரியல் வாயு அறிமுகமும் நடைமுறைப்படுத்தலும் தொடர்பான பயிற்சி - 2015

**இந்தியா** - உள்ளூராட்சி முறைமைகள் தொடர்பான அனுபவங்கள் பகிர்வு - 2016

**சிங்கப்பூர்** - நகர திட்டமிடல் அபிவிருத்தி தொடர்பான அனுபவங்கள் பகிர்வு - 2018

**ஹொங்கொங்** - முதலீட்டு அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு – 2018

**விருதுகளும், கௌரவங்களும்**

மக்கள் தொண்டன் - 1997

சமாதான நீதவான் (அகில இலங்கை) - 2005

சாமஸ்ரீ, தேசமான்ய, சமூக சேவை சிரோண்மணி - 2015

தியாக தீபம் - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் நிழல்கள்

முதலமைச்சின் நினைவுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் நிழல்கள்

## 01. முதலமைச்சின் நினைவுகள்





முன்னாள் பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் கிழக்கு மாகாண முதலமைச்சுக்கான விஜயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு மாகாண கௌரவ முன்னாள் முதலமைச்சர் மற்றும் பிரமுகர்களுடன்



திறப்புவிழா நிகழ்வொன்றில் கௌரவ முன்னாள் முதலமைச்சர் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுற்றுலா பணியகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



சுற்றுலா அமைச்சின் நிகழ்வொன்றில் உரையாற்றும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் முதலமைச்சர் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலமைச்சில் நியமனங்கள் வழங்கும் நிகழ்வின்போது



முன்னாள் முதலமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாரையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் முன்னாள் முதலமைச்சர் தவிசாளர் கலப்பத்தி ஆகியோருடன்




கவிதை நூல் வெளியீட்டு விழா ஒன்றில் கலந்து கொண்ட போது (திருகோணமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீட் அவர்களுடனான நிகழ்வுகளில்



கௌரவ கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அவர்களுடன் அம்பாறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறக்காமத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் முன்னாள் அமைச்சர் சேகு இஸ்ஸதீன் அவர்களுடன்



அட்டாளைச்சேனையில் நடைபெற்ற பல்கலைக்கழகம் புகும் புதிய மாணவர்களுக்கான நிகழ்வில் கலந்து கொண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு மாகாண முன்னாள் கௌரவ ஆளுநர் ஷான் விஜேலால் டி சில்வா அவர்களுடன் கலந்து கொண்ட நிகழ்வுகள்



கிழக்கு மாகாண கண்காட்சி நிகழ்வில் கௌரவ ஆளுநர் மற்றும் ஏனைய விருந்தினர்களின் பங்குபற்றுதலுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராமியக் கைத்தொழில் திணைக்கள விற்பனை நிலைய திறப்பு விழாவில் முன்னாள் ஆளுநர் ரோகித போகொல்லாகம அவர்களுடன்




முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் அவர்களுடனான சமய நிகழ்வு ஒன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களுடன் கடற்கரை தூய்மையாக்கும் (Beach cleaning Programme) நிகழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறக்காமம் பிரதேச செயலக நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தவேளை



அட்டாளைச்சேனையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முதலமைச்சின் கீழ் வருகின்ற கிராமியத் திணைக்கள நிகழ்வில் கௌரவிக்கப்பட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடற்கரைக் கைப்பந்தாட்ட (Beach Volley Ball) நிகழ்வு அட்டாளைச்சேனையில் நடைபெற்றபோது பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த போது





கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட கண்காட்சி நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நிகழ்வுகளின் நிழல்கள்

சுகாதார அமைச்சின் நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. சுகாதார அமைச்சின் நினைவுகள்



கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் விழா நிகழ்வில் முன்னாள் சுகாதார அமைச்சர் M.S. சுபைர் அவர்களுடன்



கிழக்கு மாகாண விளையாட்டு விழா நிகழ்வில் முன்னாள் சுகாதார அமைச்சர் M.S. சுபைர் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூதூர் றிஸானா நபீக் என்பவரின் வீட்டை தரிசித்தபோது (2011)



அட்டாளைச்சேனை அஷ்ரஃப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் மாகாண விழையாட்டு விழாவுக்கு அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக விழாவுக்கு தலைமை தாங்கிய போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நிகழ்வுகளின் நிழல்கள்

மேலதிக அரச அதிபராக சில நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. மேலதிக அரச அதிபராக சில நினைவுகள்



அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக



ஒலுவில் அஷ்ரஃப் நகர் அல்-அக்ஸா வித்தியாலய நிகழ்வில் கலந்து கொண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நடைபெற்ற வீடு வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக




முன்னாள் அமைச்சர் கௌரவ பேரியல் அஷ்ர.்.ப் அவர்களுடன் சம்மாந்துறையில் வீடுகள் வழங்கும் நிகழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாவிதன்வெளி கலாச்சார நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டபோது



இறக்காமம் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்றவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கரைப்பற்று நுரைச்சோலை சுனாமி வீடமைப்புத் திட்ட அங்குரார்ப்பன நிகழ்வில் அப்போதைய அமைச்சர் பேரியல் அஷ்ர.்.ப் அவர்களுடன்



இறக்காமம் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்றவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டாளைச்சேனை ஆலங்குளம் வீடமைப்புத் திட்டத்தில் பயனாளி ஒருவருக்கு வீடு வழங்கும் வைபவத்தில் அமைச்சர் பேரியல் அஷ்ர.்.ப் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவியுயர்வு பெற்றதையிட்டு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு நிகழ்வுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் நிழல்கள்

---

பிரதேச செயலாளராக சில நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. பிரதேச செயலாளராக சில நினைவுகள்



அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக 1993ம் ஆண்டில்



1993ம் ஆண்டில் அட்டாளைச்சேனை உதவி அரச அதிபர் காரியாலயம் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்ட நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அட்டாளைச்சேனை தேசிய மீலாத் விழா ஆரம்ப நிகழ்வுகள் பெருந்தலைவர் அஷ்ர.்.ப் அவர்களது பங்குபற்றுதலுடன்



1997 தேசிய மீலாத் விழா நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ர.்.ப் அவர்களுடன் "மீலாத்நகர்" திறப்பு விழாவில் முன்னாள் அமைச்சர்கள் லக்ஷ்மன் ஜயக்கொடி, ரெஜி ரணதுங்க ஆகியோர்கள் பங்கேற்ற நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய மீலாத் செயலக திறப்பு விழா மற்றும் தேசிய மீலாத் நிகழ்வுகளில் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ர·.ப் அவர்களுடன்



முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ர·.ப் அவர்களால் 1997 ல் தேசிய மீலாத் விழாவில் மக்கள் தொண்டன் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரதேச செயலக சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கான நிகழ்வு




ஒலுவில் அஷ்ரஃப் நகர் அல்-அக்ஸா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கண்காட்சி நிகழ்வொன்றில்



ஆலங்குளம் வீட்டுத் திட்ட திறப்புவிழா நிகழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் தையல் பயிற்சி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வில்



பிரதேச செயலகத்தில் பயனாளி ஒருவருக்கு வீட்டுமானியம் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டாளைச்சேனை ஆலம்குளம் மின்சாரம் வழங்கும் நிகழ்வில் முன்னாள் அமைச்சர்கள் கெளரவ ரவூப் ஹக்கீம்(பா.உ), யூ.எல்.எம். முகைதீன் மற்றும் அதிகாரிகளுடன்



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத் திறப்பு விழா நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பீ.தயாரத்ன அவர்களுடன் (1993)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அட்டாளைச்சேனை அஷ்ர.்.ப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வில்



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற திறப்புவிழா நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களை அட்டாளைச்சேனை வைத்தியசாலை நிகழ்வில் வரவேற்கும்போது




ஒலுவில் கிராமத்தில் பயனாளி ஒருவருக்கு சமூர்த்தி உதவி வழங்கும் நிகழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலமுனைக் கிராமத்தில் அபிவிருத்தி திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போது



ஒலுவில் நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் அமைச்சர் மர்ஹூம் அஷ்ர.்.ப் அவர்களுடன் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை நிகழ்வில் கலந்து கொண்டபோது



ஆலங்குளம் வீடமைப்புத் திட்டத்தில் பயனாளி ஒருவருக்கு வீடு வழங்கும் வைபவத்தில் அமைச்சர் பேரியல் அஷ்ர.்.ப் அவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலமுனை திராய்க்கேணி மாதிரிக் கிராம திறப்பு விழா நிகழ்வில் அரச அதிபர் ஏ.ஐ. விக்கிரம அவர்களுடன்




அட்டாளைச்சேனை பிரதேச விளையாட்டு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து பரிசு வழங்கும் வைபவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமுர்த்தி வீட்டுத் திட்டம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாலமுனை ஹுஸைனியா நகர் திறப்புவிழா நிகழ்வில் முன்னாள் அமைச்சர்களான யூ.எல்.எம். முஹைதீன் மற்றும் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் ஆகியோருடன்




பாலமுனை தொழில்நுட்ப பயிற்சி நிலைய திறப்பு விழாவில் முன்னாள் அமைச்சர் பெர்னாட் சொய்சா மற்றும் செயலாளர் M.N. ஜுனைட் ஆகியோருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் உதவிக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வொன்றில்



அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராக (1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் நிழல்கள்

---

வெளிநாடுகளுக்கான விஜயங்களின் நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. வெளிநாடுகளுக்கான விஜயங்களின் நினைவுகள்

ஜேர்மன் நாட்டுக்கான பயணம் - டொட்மன்ட் நகரம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஜேர்மன் ஹெம்பெர்க் பல்கலைக்கழகத்தில் பயிற்சி வகுப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜேர்மன் தொழிற்சாலையொன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரியா நாட்டுக்கான விஜயம்






கொரியா – **KOICA** நிறுவனத்தில் முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீட் அவர்கள் உட்பட பங்குபற்றுனர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொரியா நாட்டுக்கான இலங்கைத் தூதுவருடன்



முன்னாள் முதலமைச்சர் அவர்களுடன் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொரிய கள விஜயத்தின் பொது




கொரியாவில் பயிற்சி நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலிய நாட்டுக்கான விஜயம்






அவுஸ்திரேலிய மொனாஸ் பல்கலைக்கழக நிகழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கலந்துகொண்ட இலங்கைப் பிரதிநிதிகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவுஸ்திரேலிய பல்கலைக்கழக நிகழ்வுகளில்



மெல்பேர்ன் - அவுஸ்திரேலியா சுற்றுலாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கம்போடியா நாட்டு பிரதிநிதிகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கம்போடியா – பயிற்சிக் கலந்துரையாடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னாள் ஆளுநர் மற்றும் Subana நிறுவன பிரதிநிதிகளுடன்



சிங்கப்பூர் நகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிங்கப்பூர் முதலீட்டு நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட நிகழ்வில் முன்னாள் ஆளுநர் அவர்களுடன்



சிங்கப்பூர் - இரவு நேர நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முன்னாள் ஆளுநர் கௌரவ ரோகித்த போகொல்லாகம அவர்களுடன் ஹொங்கொங் நிகழ்வுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹொங்கொங் நிகழ்வொன்றின்போது




ஹொங்கொங் நகரில் - நிகழ்வுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியா – கேரளாவில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வுகளின் நிழல்கள்


---

### புத்தளம் உதவி அரச அதிபராக சில நினைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. புத்தளம் உதவி அரச அதிபராக சில நினைவுகள்



புத்தளம் உதவி அரசாங்க அதிபராக (1990)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தளம் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய போது முன்னாள் அமைச்சர்கள், ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோருடன் நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது



புத்தளம் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய போது முன்னாள் அமைச்சர்கள் பெஸ்டஸ் பெரேரா, ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோருடன் நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தளத்தில் நடைபெற்ற பொது நிகழ்வில் அதிகாரிகளுடன் (1991)



புத்தளத்தில் மீலாத் தின விழாவில் பிரதம அதிதியாக கலந்து பரிசில்களை வழங்கும் நிகழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் நிழல்கள்

---

## விருதுகளும் ஞாபகச் சின்னங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. விருதுகளும் ஞாபகச் சின்னங்களும்




சாமஸ்ரீ தேசமான்ய சமூக சேவை சிரோன்மணி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாமஸ்ரீ தேசமான்ய சமூக சேவை சிரோன்மணி பட்டம் வழங்கிய நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தியாக தீபம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆசுகவி அன்புடீன் நூல் வெளியீட்டு விழாவில் முன்னாள் அமைச்சர் கௌரவ றஊப் ஹக்கீம்(பா.உ) மற்றும் கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் (பா.உ) ஆகியோருடன் கலந்து கொண்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முன்னாள் அமைச்சர் கௌரவ ஏ.எல்.எம். அதாவுல்லாஹ்(பா.உ) அவர்களால் பொன்னாடை அணிவிக்கப்பட்டு விருது வழங்கிய நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்டாளைச்சேனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கௌரவிக்கப்பட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கல்முனையில் நடைபெற்ற ஆசியா பௌண்டேசன் நிகழ்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அட்டாளைச்சேனையில் நடைபெற்ற "சிகரம் தொட்ட சிகரங்கள்" நிகழ்வில் நீதிபதி T.L. மனாப், கலாநிதி U.K.M இஸ்மாயில் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டபோது



1990 ம் ஆண்டில் தெரிவான தனது S.L.A.S குழுவினருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதலமைச்சில் - 2021 ஆம் ஆண்டு புது வருடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பு எண்
ACC.NO
12433
920
திகதி
DATE
10.3.2021
Uppuveli Public Library
0012433



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27/10/2021
(2037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரிய அனைத்தூர்ப்பற்றும்
நேர்த்திமிகு சேவைப்பற்றும்
ஊறிய அனுபவமும் பாறிய மனோபாவமும்
கொண்ட எங்கள் செயலாளர்
அந்தகாரமுடைத்து அண்ணலானவர்.

அயனமது சிறப்புற்றதால்
கல்வியும் ஒழுக்கமும் அயிலாயிற்று
இவர் ஆசிர்வாதங்கள் பெற்றுயர்ந்து
கற்றுயர்ந்து பல்கலைக்கழகமும் சென்று
ஆசு இரியனாகி பின் நிருவாகியாகியதில்
அமலனாகி அறமளித்தார்.

வெண்ணிற உளமகான்
சேவையே தேவையெனவே உரைத்து
கதியிலியவனையும் அடியார் அடிசிலார் - இவர்
உளம் கண்டோரை குடும்பம் எனக்கருதி
கொண்டாரே உணவும் உறவும்.

நவீன அணிகளுக்கு தண்டியலங்காரமாய்
பணிவும் பண்பும் சேவையும் தீரவே
இந்நதி நடந்த பாதைகள்
ஜீவநதிகளுக்கு மொட்டலராகி
வாசனை வீசிக்கொண்டே இருக்கும்.

கிண்ணியா யூத்நெற் வெளியீடு

KTV SRILANKA

ISBN : 978-624-5513-24-6

Excellent Print 077 6401296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org